# உள்ளாட்சி அரசாங்கப் பிரதிநிதிகளின் குரல்








**தமிழ்நாடு பட்ஜெட் கூட்டத்தொடர் 2012, ஊராட்சித் தலைவர்கள்ஊராட்சிஅரசாங்கம் குறித்த சட்டம், கொள்கை மாற்றம், நிதி நிலை அறிக்கைக்கான கோரிக்கை மனுவை இறுதி செய்து தமிழக அரசு, அரசியல் கட்சிகளிடம் அளிப்பதற்கான கலந்துரையாடல் – 23.03.12, சென்னை**

*ஏற்பாடு*

**தமிழக ஊராட்சி அரசாங்க பெண் தலைவர்கள் கூட்டமைப்பு**
**தமிழ்நாடு ஊராட்சித் தலைவர்கள் கூட்டமைப்புகளின் சம்மேளனம்**
**தலித் பஞ்சாயத்துத் தலைவர்கள் கூட்டமைப்பு**

# தமிழகத்தில் உள்ளாட்சிகள் நிலை

சட்டத்திருத்தம், 1993ஆம் ஆண்டு வந்த பிறகு 3 தேர்தல்களை சந்தித்துவிட்டது. நமது உள்ளாட்சிகள், கடந்த அக்டோபர் மாதம் நான்காவது தேர்தல் நடைபெற்று மாவட்ட, ஒன்றிய, கிராம ஊராட்சிகளுக்கு 1,19,399 பேர் தேர்ந்தெடுக்கப்பட்டு வந்துள்ளனர். இதில் 40,075 இடம் பெண்களுக்கும் 30270 தாழ்த்தப்பட்டோருக்கும், 1271 இடங்கள் பழங்குடியினருக்கும் ஒதுக்கப்பட்டு பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப்பட்டு வந்துள்ளனர். 5 ஆண்டுகளுக்கு ஒருமுறை தேர்தல் நடைபெற வேண்டும் என்ற சட்டத்தின் காரணமாக இத்தேர்தல்கள் நடைபெற்றுள்ளது. இந்தச் சட்டத்திருத்தத்தின் நோக்கம், கிராம அளவில் / அடிமட்ட அளவில் அதிகாரம் பரவலாக்கப்பட வேண்டும். அடித்தட்டு மக்களின் அடிப்படை தேவைகள் தாமதமின்றி நிறைவேற்றப்பட வேண்டும். விளிம்பு நிலை மக்களான தலித், பழங்குடியினர் மற்றும் பெண்கள் ஆட்சி அதிகாரத்தில் பங்கு பெறவேண்டும் என்பதுதான். இந்த நோக்கம் ஓரளவிற்கு நிறைவேற்றப்பட்டிருக்கிறது என்றே சொல்லலாம். முழுமையாக நிறைவேற்றப்படாமல் இருப்பதற்கு தமிழகத்தை ஆண்ட கட்சிகளே காரணம் ஆகும். கடந்த ஆண்டுகளில் தமிழகத்தை ஆண்ட இரண்டு திராவிடக் கட்சிகளும் ஒன்றுபட்டு செயல்படுத்திய ஒரே விஷயம் உள்ளாட்சிகளுக்கு அதிகாரப் பரவலாக்கம் செய்யாமல் இருந்தது.

ஆட்சி அதிகாரத்தில் இருந்த இரண்டு கட்சிகளும், உள்ளாட்சிகளுக்குப் போதிய நிதி ஆதாரத்தை அளிக்காமலும், கிராம பஞ்சாயத்தைக் கலைப்பது, தலைவரை பதவி நீக்கம் செய்வது உள்ளிட்ட வரைமுறையற்ற அதிகாரங்களை மாவட்ட ஆட்சியருக்கு அளித்தது, மாவட்ட ஊராட்சியை ஒரு பலவீனமான அமைப்பாக வைத்திருப்பது போன்ற செய்கைகளினால் உள்ளாட்சி அமைப்புகளை பலவீனமாகியுள்ளன, போதிய அதிகாரங்கள் இல்லாமல் கூர்மையில்லாத ஆயுதமாக மாற்றிவிட்டன. போதிய அதிகாரங்கள் இல்லாததால் உள்ளாட்சிகள் பல நேரங்களில் சுதந்திரமாக செயல்பட முடிவதில்லை. மாநில அரசுக்கு அதிக அதிகாரம் தேவை என்று மத்திய அரசிடம் கோரிக்கை வைக்கும் மாநில அரசுகள் உள்ளாட்சிகளுக்கு கூடுதல் அதிகாரத்தைப் பகிர்ந்தளிக்க மறுக்கின்றன. கல்வி, சுகாதாரம், குடிதண்ணீர் விநியோகம், சாலைகள், பொது விநியோகம் போன்றவற்றில் முழு அதிகாரம் உள்ளாட்சிகளுக்கு வழங்கப்பட வேண்டும்.

73வது சட்டத்திருத்தம், உள்ளாட்சிகளுக்கு 29 துறைகளுக்கான அதிகாரங்களை வழங்க வேண்டும் என்று குறிப்பிட்டிருந்தாலும் தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994ன்படி ஊராட்சிகளுக்கு எந்த அதிகாரமும் இல்லை. 73வது சட்டத்திருத்தத்தின்படி, அரசு ஆரம்ப மற்றும் நடுநிலைப் பள்ளிகள், ஆரம்ப சுகாதார நிலையம், தாலுக்கா மருத்துவமனைகள் ஆகியவை ஊரக உள்ளாட்சிகளின் கட்டுப்பாட்டில் இருக்க வேண்டும். ஆனால், தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், பள்ளி ஆசிரியர்கள், சுகாதாரப் பணியாளர்கள் மற்றும் பிற பணியாளர்கள் முழுவதையும் மாநில அரசின் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவந்துள்ளது. இது அரசியல் சாசனத்தில் குறிப்பிட்டுள்ளதற்கு முரணானது.

உள்ளாட்சிகள் மக்களுக்கு நெருக்கமாக உள்ளவை, உள்ளாட்சிகளால், பல நலத் திட்டங்கள் நிறைவேற்ற முடியும். கிராமசபை கூட்டம் கூட்ட ஊராட்சித் தலைவருக்கு உள்ள அதிகாரம் தனித் தன்மையானது. இது, கிராம நிர்வாகத்தில் உள்ளூர் மக்கள் பங்குபெற வழிவகை செய்கிறது. கிராம ஊராட்சிகள், கிராமத்திற்கான ஆண்டுத் திட்டங்களை உருவாக்கி, கிராம சபையின் ஒப்புதலோடு நிறைவேற்றலாம். அரசு அதிகாரிகள், கிராம சபை கூட்டங்கள் சிறப்பாக நடத்துவதற்கு உதவுவதில்லை. ஆதிகாரம் அரசு அதிகாரிகளிடம் அல்லாமல் உள்ளாட்சிகளுக்கு அளிக்கப்பட வேண்டும்.ஆனால், மாவட்ட ஆட்சியர்தான் அதிக அதிகாரம் படைத்தவராக உள்ளார்.

உள்ளாட்சிகள் சிறப்புற, மாநில அரசு, தன்னுடைய வரி வருவாயிலிருந்து 30 சதவீதத்திற்கும் மேல் உள்ளாட்சிகளுக்கு வழங்க வேண்டும். உள்ளாட்சிகள், அரசின் நரம்பு மண்டலம் போன்றது. எவ்வாறு நரம்பு மண்டலம் உடலின் பல்வேறு பாகங்களுக்கு இரத்தத்தை எடுத்துச் செல்கிறதோ, அரசாங்கத்தின் திட்டங்களை மக்களுக்கு எடுத்துச் செல்லும் பொறுப்பு உள்ளாட்சிகளுடையது. இந்தியா போன்ற 120 கோடி மக்கள் தொகை கொண்ட நாட்டில், உள்ளாட்சிகளை அதிகாரம் படைத்த அமைப்பாக பலப்படுத்தினால்தான் அடித்தட்டு ஜனநாயகம் நடைமுறைக்கு வரும்.

– மனித உரிமை மேம்பாடு மற்றும் ஆராய்ச்சி அமைப்பு
**பிரண்ட்லைன் நவம்பர், 2011**

# தமிழ்நாடு பட்ஜெட் கூட்டத்தொடர் 2012

## ஊராட்சித் தலைவர்கள் ஊராட்சி அரசாங்கம் குறித்த சட்டம், கொள்கை மாற்றம், நிதி நிலை அறிக்கைக்கான

# கோரிக்கை மனு

**23.3.2012, சென்னை**

23 மார்ச் 2012 அன்று சென்னையில் தமிழகத்தின் 11 மாவட்டங்களைச் சேர்ந்த 44 ஊராட்சிமன்றத் தலைவர்கள் மற்றும் 30 தன்னார்வத் தொண்டு நிறுவனப் பிரதிநிதிகள் கூடி ஊராட்சி அரசாங்கம் குறித்த சட்டம், கொள்கை மாற்றம், நிதி நிலை அறிக்கைக்கான கோரிக்கை மனுவை இறுதி செய்து முக்கிய அரசியல் கட்சிகளிடம் அளித்தனர். அரசியல் கட்சிப் பிரதிநிதிகள் சில முக்கிய கோரிக்கைகளை தமிழக சட்டமன்றத்தில் நடைபெறும் பட்ஜெட் கூட்டத்தொடர் 2012ல் எழுப்புவதாக உறுதி அளித்துள்ளனர்.

அக்டோபர் 2011 தேர்தலில் தேர்ந்தெடுக்கப்பட்ட பஞ்சாயத்து தலைவர்களாகிய நாங்கள் பஞ்சாயத்து அரசாங்கம்தான் முதல் அரசாங்கமாக கருதுகிறோம். நாங்கள் கிராமங்களின் சுய தேவைகளை நிறைவு செய்வதற்கான வேலைகளில் குறிப்பாக விளிம்பு நிலையில் உள்ள மக்களின் அடிப்படைத் தேவைகளை பூர்த்தி செய்யவும், சுரண்டலுக்கு எதிராகவும் சமமற்ற மற்றும் அதிகார உறவுமுறைகள் தகர்த்தெறியவும், பொதுமக்களை பாதுகாக்கவும் ஈடுபட்டு வருகின்றோம். எங்களை மத்திய மாநில அரசுகளின் திட்டங்களை நிறைவேற்றும் நபர்களாக நடத்த வேண்டாம். தமிழக அரசு உடனடியாக எங்களுக்கு அதிகாரங்களையும் நிதியையும் பகிர்ந்தளித்து அரசின் உண்மையான பிரதிநிதிகளாக செயல்பட அனுமதிக்க வேண்டும். இதற்கு முக்கியமாக தமிழ்நாடு பஞ்சாயத்து சட்டத்தில் திருத்தங்கள் கொண்டுவரவேண்டும். ஆகவே தமிழக அரசு, அரசியல் கட்சிகள் மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள் எங்களுடைய கோரிக்கைகளை ஏற்று அதற்கேற்ப மாற்றங்களை கொண்டுவர வேண்டுகிறோம்.

### அறிமுகம்

அரசமைப்பு சாசனத்துக்கான 73, 74–வது திருத்தங்கள் மக்களுக்கு அதிகாரம் வழங்குவதிலும் அடிமட்டத்தில் ஜனநாயகத்தைக் கட்டுவதிலும் சட்டவரம்புகளுக்கு உட்பட்ட ஒரு முக்கிய அஸ்திவாரமாக அமைந்துள்ளன. இவை உண்மை நடப்புகளாக மாறவேண்டுமானால், தொடர்ச்சியான மேம்பாடு, பங்கேற்பு ஜனநாயகம் தேவை. இவை இரண்டும் ஒன்றிலிருந்து ஒன்று பிரிக்க முடியாதவையாகும், வேறுபடுத்த முடியாதவையாகும். அடிமட்டத்தில் ஜனநாயகத்தை பலப்படுத்துவது, கூட்டாட்சி என்பதை மறுவரையறை செய்வது ஆகியவை அதிகாரங்களைப் பரவலாக்குவதாக மட்டுமல்லாமல், உழைக்கும் வர்க்கத்தையும் ஏழை மக்களின் இதர பிரிவினரையும் அணிதிரட்டி அதிகாரம் வழங்குவதாகவும் இருக்க வேண்டும்.

தமிழ்நாட்டில், 73வது சட்டத்திருத்தத்தில் உள்ள 29 அதிகாரங்களும், 74வது சட்டத்திருத்தத்தில் உள்ள 18 அதிகாரங்களும் 1994ம் ஆண்டின் தமிழக பஞ்சாயத்துச் சட்டத்தில் திருத்தம் செய்வதன் வாயிலாகக் உள்ளாட்சிகளுக்கு வழங்கப்படவில்லை. தாழ்த்தப்பட்டோர், பழங்குடியினர், பெண்கள் ஆகியோருக்கான இட ஒதுக்கீடுகள், மாநில நிதி ஆணையம் அமைத்தல், மாநிலத் தேர்தல் ஆணையம் அமைத்தல் போன்ற கட்டாயமாகச் செய்தாக வேண்டிய ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. ஆனால், உள்ளாட்சிகளுக்குத் தேர்ந்தெடுக்கப்படும் பிரதிநிதிகள் அதிகாரமற்றவர்களாக, பல்வேறு திட்டங்கள் அமலாக்கப்படுவதிலும் பொதுப் பணிகளிலும் அதிகாரிகளுக்கு உதவுகிறவர்கள் என்பதாக மட்டுமே, அவ்வப்போது அரசாணைகள் மட்டும் வெளியிடுவதன் மூலம் அதிகாரப் பரவல் என்பதைச் சுருக்கியுள்ளது தமிழக அரசு. இன்று வரையில் அதிகாரங்களோ, நிதியோ, மாநில அரசுப் பணியாளர் ஏற்பாடுகளோ பரவலாக்கப்படவில்லை. அவை மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அமைப்பின் ஆய்வுக்கு உட்பட்டவையாக ஆக்கப்படவில்லை.

**தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994 மற்றும் இந்திய அரசியல் சாசனச் சட்டம் ஆகியவற்றில் சட்டமாற்றம் கொண்டு வந்து கிராமசபையின் அதிகாரங்களைப் பலப்படுத்த வேண்டும்**

இந்திய அரசியல் சாசனச் சட்டத்தில் 243A பிரிவின்படி, கிராமசபையானது கிராம ஊராட்சியின் வாக்காளர் பட்டியலில் பதிவு பெற்றிருக்கும் நபர்களைக் கொண்ட அமைப்பாகும். மாநிலத்தில் சட்டமன்றத்திற்கு கொடுக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் கீழ் செயல்படுவது போல், கிராமசபையும் கிராம அளவில் அத்தகைய அதிகாரங்களைச் செயல்படுத்தலாம் (தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1974–ன் கீழ் வகுக்கப்பட்டுள்ள விதிகள்). கிராமசபையானது கிராமத்திட்டம் மற்றும் ஆண்டின் நிதித்திட்டத்தை அங்கீகரிக்கும் அமைப்பாகவும், ஊராட்சியில் ஒப்படைக்கப்பட்டுள்ள திட்டங்களை அமல்படுத்துவதைப் பரிசீலனை செய்யும் அமைப்பாகவும், தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994, அத்தியாயம் 11, கிராமசபையை வரையறை செய்வதன் மூலம், அதன் அதிகாரங்களை மாநில அரசு நீர்த்துப் போகச் செய்துள்ளது.

ஊரக வளர்ச்சித்துறையின் அரசு ஆணை MS.No. 152ல், கிராம சபையின் குறைவெண் வரம்பு மற்றும் கூட்டம் நடத்தும் வழிமுறைகள் போன்ற பிற செயல்பாடுகளை வரையறுத்துள்ளது. இருப்பினும், கிராமசபை தனது அதிகாரங்களைப் பயன்படுத்தி உண்மையான வாழ்வாதாரப் பிரச்சனைகளைக் கணக்கில் கொள்ளாமல், மாவட்ட நிர்வாகத்தின் கட்டளைகளை செயல்படுத்தும் அமைப்பாகவே உள்ளன. கிராமசபை மட்டிலுமே, கிராம அளவில் உள்ள அனைத்துப் பெண்கள், தாழ்த்தப்பட்ட வகுப்பினர், பழங்குடியினர் மற்றும் ஏழை மக்கள் ஆகியோரை உள்ளடக்கிய அனைத்து கிராம மக்களும் பங்கேற்கும் மற்றும் கிராமங்களை பாதிக்கும் பிரச்சனைகள், நலத்திட்டங்கள் போன்றவற்றை விவாதிக்கும் அமைப்பாக உள்ளது. இது ஒரு நாடாளுமன்றம் போன்று செயல்பட வேண்டும்.

கிராம சபை உறுப்பினர்கள் அதிகாரப் பரவலாக்கத்தின் முக்கியத்துவத்தை சரியாக உள்வாங்காமல் இருப்பதால்தான் அவர்களின் பங்கேற்பு மற்றும் முடிவெடுக்கும் தன்மை குறைவாக உள்ளது. எந்த ஒரு தொழிலையும், தொழிற்சாலையையும் உள்ளாட்சிப் பகுதிக்குள் துவங்கும்பொழுது கிராமப் பஞ்சாயத்துக்களின் அனுமதி பெற வேண்டும் என சட்டங்கள் கூறுகிறது. ஆனால் இந்த விதிமுறை சிறிதளவும் கூட கடைபிடிக்கப்படுவதில்லை. இதில் பாதிக்கப்பட்ட குடும்பங்கள் குறைகளைச் சொல்ல வழியில்லாமல் போராட்டங்களில் ஈடுபடவேண்டியுள்ளது. கிராமசபைகளில் சுற்றுச்சூழல் ஆளுகை, வன ஆதாரங்களின் நிர்வாகம் போன்றவை முக்கியமானவையாகும். உள்ளூர் மக்கள் மேற்கண்ட பொருட்களில் விவாதத்தில் ஈடுபட்டால்தான் அவை வளம் பெறும், பாதுகாக்கப்படும். எங்கெல்லாம் உள்ளூர் மக்கள் இதை கையில் எடுக்கின்றார்களோ அப்பொழுது ஊராட்சி நிர்வாகம் செம்மையாக நடைபெறுகிறது. கிராம சபைகள் மக்களை ஒருங்கிணைப்பதற்கும் வளர்ச்சித் திட்டங்களை திட்டமிடுவதற்கும், அழிவுப் பூர்வமான திட்டங்களை தடுப்பதற்கும் நல்ல ஆயுதமாக பயன்படுத்தப்படலாம். அநேக ஊராட்சிகளில் கிராம சபை மற்றும் ஊராட்சி மன்றம் பெரிய வளர்ச்சித் திட்டங்களை எதிர்த்து தீர்மானங்கள் இயற்றியுள்ளன, அனுமதிச் சான்றும் மறுக்கப்பட்டுள்ளது. இது போன்ற நடவடிக்கைகள் அரசின் திட்டங்களில் மாறுதலை கொண்டுவந்துள்ளது. அதுமட்டுமில்லாமல் உற்பத்தியாளர்களின் கலாச்சாரத்திலே மாறுதல்கள் ஏற்பட்டுள்ளது. ஆகவே கிராம சபைகளுக்கு அதிகாரம் கொடுப்பதற்கு அரசியல் சாசனத் திருத்தங்கள் கொண்டு வரவேண்டும். கிராம சபைகள் அதிகாரங்கள் கொண்டதாக, முடிவெடுக்கக்கூடிய அமைப்பாக, மாவட்ட ஆட்சியரின் தலையீடு இல்லாத அமைப்பாக மாற வேண்டும். கிராம சபைகள் நாடாளுமன்றம் போல செயல்பட வேண்டும்.

கிராம சபைக்குத் திட்டமிடல், நிர்வாகத் தணிக்கை மற்றும் உள்ளூர் அளவில் தேவையான நிர்வாக அதிகாரம், வாழ்வாதாரங்கள் மீதான மேளாண்மை மற்றும் கட்டுப்பாடு குறித்த கொள்கை முடிவுகளை எடுக்க அதிகாரத்தினை வழங்கி அவற்றை செயல்படுத்தும் பொறுப்பும் கிராம ஊராட்சிகளிடமே இருக்க வேண்டும். கிராம சபை கூடத்தின் குறைவெண்வரம்பில் 33% பெண்களை உள்ளடக்க வேண்டும்.

கிராம சபைக்கான பொருள், தேவையின் அடிப்படையில் அந்தந்த கிராம ஊராட்சியால் தான் முடிவு செய்யப்பட வேண்டும். மாவட்டத் தலைவர் அலுவலகத்திலிருந்து அனுப்பப்படும் பொருள்கள் அதனுடன் சேர்த்துக்கொள்ளப்படலாம். நிறைவேற்றப்படும் தீர்மானங்களை நடைமுறைப் படுத்துவதற்குத் தேவையான ஒத்துழைப்பு / நடவடிக்கையை சம்மந்தப்பட்ட அதிகாரத்துவ அமைப்புகள்/ துறைகள் எடுக்க வேண்டும். அத்தீர்மானம் குறித்த நடவடிக்கைக் குறிப்பை அடுத்த கிராம சபைக் கூட்டத்திற்குள் சம்மந்தப்பட்ட அதிகாரத்துவ அமைப்பு சமர்ப்பிக்க வேண்டுமாறு மாநில அரசு உத்திரவிட வேண்டும். குறிப்பாக, ஊராட்சி ஒன்றியம், மாவட்ட ஊராட்சி, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை போன்றவைகளின் கீழ் மேற்கொள்ளப்படும் திட்டப்பணிகள் அனைத்திற்கும் கிராம சபைகளின் ஒப்புதலை அவசியம் பெற வேண்டும். தாய் திட்டத்தின்

கீழ் ஊராட்சியில் 20 லட்சம் வரை பெற கூடிய பணிகள் அனைத்தும் கிராம சபையின் ஒப்புதலுடன் கிராம ஊராட்சியால் தான் மேற்கொள்ளப்பட வேண்டும்.

### அரசியல் சாசன 73வது சட்டதிருத்தத்தின் படி உள்ளாட்சிகளுக்கான 29 துறைகளுக்கான அதிகாரங்கள் உடனடியாக வழங்கப்பட வேண்டும்

மாநில அரசுகள் ஊராட்சிகளுக்குப் பகிர்ந்தளிக்க வேண்டிய 29 துறைகளுக்கான அதிகாரம் மற்றும் பொறுப்புகளில் பாதிக்கு மேல் சுற்றுச்சூழல் நிர்வாகம், வாழ்வாதார மேம்பாடு மற்றும் வறுமை ஒழிப்பு சார்ந்தவையாகும். இருப்பினும் இன்றுவரை மாநில அரசுகள், அதிலும் முக்கியமாக தமிழ்நாடு அரசு, அவர்களிடமுள்ள அதிகாரங்களை ஊராட்சிகளுக்குப் பகிர்ந்தளிக்கவில்லை. மாநில அரசானது போதிய திட்டமிடும் அதிகாரத்தையும், பொறுப்பையும் அளிக்கவில்லை. உள்ளாட்சிகள் தயாரிக்கும் திட்டங்கள் ஏற்றுக்கொள்ளப் படுவதில்லை. அதே போன்று வளர்ச்சித் திட்டங்கள் மற்றும் ஒதுக்கீடு போன்றவை ஊராட்சி வழியாக நடைமுறைப்படுத்தப்படுவதில்லை. ஊராட்சிகளின் பங்கு சரியாக வரையறுக்கப்படவில்லை. ஊராட்சிகள், அரசின் திட்டங்களை அமல்–படுத்துபவைகளாக இருக்கின்றன. மாநில அரசின் வளர்ச்சித் துறைகளுக்கு, அதற்கான அமைப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன. பொது விநியோகத் திட்டம், கல்வி, சுகாதாரம், குடிநீர், முறைசாரா எரிசக்தி போன்றவற்றின் மேலாண்மை மற்றும் நிர்வாக அதிகாரம் ஊராட்சிக்கு இல்லை. கடந்த பல ஆண்டுகளாக இதுகுறித்து அரசியல் கட்சிகள், தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமன்ற உறுப்பினர்கள், திட்ட நிர்வாகிகள் ஆகியோருடன் தமிழ்நாடு ஊராட்சி அரசாங்கப் பெண் தலைவர்களின் கூட்டமைப்பு வழக்காடி ஆதரவைத் திரட்டிய பின்னரும் இந்நிலை நீடிக்கிறது. மாவட்ட நிர்வாகம்தான் அதிக அதிகாரங்களைக் கொண்டதாக உள்ளது. இருப்பினும் ஊராட்சியின் கட்டுப்பாட்டில் உள்ள நிலங்கள், ஊராட்சியில் உள்ள வரிவிதிப்பு குறித்த செலவினக் கணக்குகள் போன்றவற்றின் ஆளுகை குறித்து நூற்றுக்கணக்கான பெண்கள் மற்றும் தலித் ஊராட்சிமன்றத் தலைவர்களுக்கு விழிப்புணர்வு கொடுக்கப்பட்டுள்ளது.

இந்திய அரசியல் சாசனத்தின் 11 ஆவது அட்டவணையில் ஊராட்சி அரசாங்கத்திடம் மாநில அரசு ஒப்படைக்கலாம் எனக் கூறப்பட்டுள்ள 29 துறைகளுக்கான அதிகாரங்கள் குறித்து, மாநில அரசு மேற்கொள்ள வேண்டிய அதிகார, நிதி பரவலாக்கம் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தங்கள் குறித்த தனது தெளிவான கொள்கை முடிவை தமிழக அரசு அறிவிக்கவில்லை. அரசின் உடனடி நடவடிக்கையாக 29 துறைகளுக்கான ஊழியர்கள், மேலாண்மை மற்றும் கட்டுப்படுத்தும் அதிகாரத்தை மூன்றடுக்கு ஊராட்சிகளுக்கு வழங்கக் கோருகிறோம். முதல் கட்டமாக பின்வரும் துறைகளுக்கான அதிகாரங்களை ஒப்படைக்க வேண்டுகிறோம்.

- கல்வி (ஆரம்பகால குழந்தைப் பராமரிப்பு மற்றும் வளர்ச்சி உள்ளிட்டு)
- சுகாதாரம் மற்றும் ஊட்டச்சத்து
- பொதுவிநியோகம்
- வேளாண்மை
- பாசனம், நீர்வளமேம்பாடு மற்றும் நீர்வள பாதுகாப்பு
- நிலச்சீர்த்திருத்தம் மற்றும் நில உபயோக மேலாண்மை
- கிராமப் பொது வளங்கள் மீதான கட்டுப்பாடு
- கனிம வளம்
- சமூகக் காடுகள், சிறுகாடுகளின் வளங்கள்
- சாதி, வருமான சான்றிதழ் விநியோகம்
- எவ்வித தொழிற்சாலைகள் மற்றும் ரியல் எஸ்டேட்டுகள் அனுமதி வழங்கும் அதிகாரம் / மாசுக் கட்டுபாடு

29 துறைகளில் உள்ள இனங்களின் கீழ் முறையே வறுமை ஒழிப்பு, பெண்கள் மற்றும் குழந்தைகள் நலம், சமூக நலம் (ஊனமுற்றோர் மற்றும் மனநலம் குன்றியோர் நலம் உள்ளிட்டு) நலிவடைந்த பிரிவினர் நலம் குறிப்பாக தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியினர் நலம் ஆகியவற்றில் ஊராட்சிகள் பொருளாதார மேம்பாடு மற்றும் சமூக நீதிக்காக திட்டங்கள் தயாரிக்கவும் அவற்றை செயல்படுத்தவும் ஊராட்சிகளுக்கு அதிகாரம் வழங்க வேண்டும்.

### தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் பிரிவு 205 உள்ளிட்ட மாவட்ட ஆட்சியரின் வரைமுறையற்ற அதிகாரங்கள் நீக்கப்படவேண்டும்

தமிழக ஊராட்சிகள் சட்டம் 1994 ன் அத்தியாயம் 10 பிரிவு 205 அரசு அதிகாரிகளுக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர்கள் மீது மிகுந்த அதிகாரத்தை வழங்குவதால் அவ்வத்தியாயம் நீக்கப்படவேண்டும். உள்ளாட்சி அரசாங்கம் என்பது ஒரு அரசியல் சாசன அரசாங்கமாதலால் மத்திய மாநில அரசுகளின் அதிகாரிகள் அதற்கு பதில் சொல்லும் பொறுப்புள்ளவர்கள். மாவட்ட ஆட்சித்தலைவர் ஊராட்சித் தலைவர்களை பதவிநீக்கம் செய்வது சுய சார்புடைய உள்ளாட்சி முறைக்கு எதிரானது. ஆகவே தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் பிரிவு 205 நீக்கப்படவேண்டும்.

தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994, ஊராட்சி ஆய்வாளருக்கு அதாவது மாவட்ட ஆட்சியருக்கு எல்லையில்லாத அதிகாரங்களை கொடுத்துள்ளது. ஊராட்சி ஆய்வாளர் அதாவது மாவட்ட ஆட்சியருக்கு வரிவிதிப்பு(பிரிவு 147,171,198B), அனுமதி வழங்கல் (பிரிவு 148), பஞ்சாயத்துகளை உருவாக்குதல் (பிரிவு 4,6,8,101,217,218), தீர்மானங்களை ரத்து செய்தல்(பிரிவு 202,203), பதவி நீக்கம் செய்தல் (பிரிவு 204,205), இடஒதுக்கீடு – சுழற்சி முறை (பிரிவு 11), ஆவணங்கள் (பிரிவு 92,94,99) போன்றவற்றில் அதிகாரங்கள் கொடுக்கப்பட்டுள்ளது. ஊராட்சிகள் தங்களது நிர்வாகக் கடமைகளை முறையாக நடைமுறைப்படுத்துவதற்கு மேற்கண்ட அதிகாரங்கள் தடையாக உள்ளது. மேலும் மாவட்ட ஆட்சியருக்குக் கொடுக்கப்பட்ட அதிகாரங்கள் அரசியல் சாசன சட்டத்திற்கு எதிராகவும், தன்னிச்சை–யாகவும் உள்ளது.

ஊராட்சி ஆய்வாளர் அதாவது மாவட்ட ஆட்சியருக்கு கொடுக்கப்பட்ட அதிகாரங்களை தமிழக அரசு உடனடியாக திரும்பப்பெறவேண்டும். அவை மீண்டும் கிரதம,, ஒன்றிய மற்றும் மாவட்ட பஞ்சாயத்துகளுக்குக் கொடுக்கப்படவேண்டும். தேர்ந்தெடுக்கப்பட்ட பஞ்சாயத்துகளின் மீதான புகார்களை விசாரிக்க மாவட்டம் மற்றும் மாநில அளவில் குறை தீர்க்கும் ஆணையம் ஒன்றை ஏற்படுத்தவேண்டும்.

**ஊராட்சிகள் சுய அரசாங்கங்களாக செயல்பட கூடுதல் நிதி ஒதுக்கப்பட வேண்டும்**

ஊராட்சிகளுக்கான மாநில அரசின் நிதி சதவீதம் அதிகரிக்கப்பட்டு வழங்கப்படவேண்டும் என்ற முதலாம், இரண்டாம் மற்றும் மூன்றாம் மாநில நிதி ஆணையத்தின் பரிந்துரையின் மீது அரசின் போதுமான நடவடிக்கையை கோருகிறோம். மாநில நிதி ஆணையத்தின் பரிந்துரைகளை கவனத்தில் கொண்டு எங்களது கோரிக்கையானது ஊராட்சியின் தங்குதடையற்ற நிர்வாகம் மற்றும் வளர்ச்சிப் பணிகளுக்கு போதுமான நிதியாக 1996 ஆம் ஆண்டு 8ரூ மாக இருந்த மாநில அரசின் உள்ளாட்சிகளுக்கான நிதி, தற்போது 2011 – 2012ல் தான் 10.5ரூ மாக உயர்த்தப்பட்டுள்ளது. 1996–லிருந்து நிதி அதிகரிக்கப்படாததைக் கருத்தில் கொண்டு ஒவ்வொரு ஆண்டும் 1 சதவீதமாக அதிகரிப்பு என கணக்கிட்டு தற்போது உடனடியாக 18ரூ வீதமாக உயர்த்தக் கோருக்கிறோம். மத்திய மாநில அரசின் ஊராட்சிகளுக்கான திட்ட நிதி ஊராட்சிகளை நேரடியாக சென்றடையும் வகையில் நிர்வாக மாற்றம் கொண்டுவரப்பட கோருகிறோம்.

**ஊராட்சிகளுக்கான ஒப்படைக்கப்பட்ட / பகிர்ந்து கொள்ளப்படும் வருவாய் இனங்கள்**

வருவாய் இனங்களான தலவரி, தலமேல் வரி, முத்திரைத் தாள் மேல்வரி (80 சதவீதம்) . கேளிக்கை வரி (70 சதவீதம்), மற்றும் கனிமங்கள் மீதான உரிமக் கட்டணம் (100 சதவீதம்) இவை வருவாய்த்துறை, மாவட்ட சார்பதிவாளர், வர்த்தக வரித்துறை மற்றும் புவியியல் மற்றும் சுரங்கத்துறையால் ஊராட்சி ஒன்றியங்கள் மூலம் கிராம ஊராட்சிகளுக்கு மூன்று மாதத்திற்கொருமுறை ஒப்படைக்கப்பட வேண்டும். ஆனால் இந்த நிதி, மாநில அரசின் நிதிநிலையைக் காரணம் காட்டி குறித்த காலத்தில் பல்வேறு ஊராட்சிகளிடம் ஒப்படைக்கப்–படாததால் ஊராட்சிகள் பெரும்நிதி நெருக்கடியைச் சந்தித்து வருகின்றன.

இவற்றை சரிக்கட்டுவதில் காலதாமதம், பகிர்ந்தளிப்பதில் சமச்சீரற்ற நிலையை தவிர்க்க அமைக்கப்பட்டுள்ள குழு இந்நிதி சீராகவும் விரைவாகவும் ஊராட்சிகளை சென்றடையும் வகையில் செயல்பட வேண்டும் என பரிந்துரைக்கிறோம். ஊராட்சி அரசாங்க அமைப்புகளுக்கு சொந்தமான இவ்வரியினங்கள் அந்தந்த துறையில் வசூலிக்கப்பட்டு அரசுக் கருவூலத்தில் சேர்க்கப்பட்டு மாநில பட்ஜெட்டில் இடம் பெறுகின்றன. இம்முறைக்கு மாற்றாக வசூலிக்கப்படும் இவ்வருவாய் இனங்களை நேரடியாக ஊராட்சிகள் கணக்கிற்கு வரவு வைக்க வேண்டும் என்பது எங்களது முக்கியக் கோரிக்கையாகும்.

**ஊராட்சிகளுக்கான மின்கட்டணத்திற்கு முழுமையான மானியம் வழங்கப்பட வேண்டும்.**

முன்பு அலகு ஒன்றிற்கு ரூ.1.60 ஆக இருந்த மின் கட்டணம், பின்னர் அலகுக்கு ரூ.3.40 ஆக உயர்ந்தது. மீண்டும் மின் கட்டணம் ரூ.3 ஆக குறைக்கப்பட்டது. சமீபத்தில் தமிழ்நாடு அரசு மின்கட்டணத்தை அலகு ஒன்றிற்கு ரூ.5.50 ஆக உயர்த்த உள்ளது. இந்த நடவடிக்கையை நாங்கள் கடுமையாக எதிர்க்கின்றோம். மேலும் மின் கட்டணத்திற்கு முழு மான்யம் வேண்டும் என்று கோருகின்றோம்.

**பயனீட்டாளர் பட்டியல் முழுமையாக ஊராட்சியிடம் ஒப்படைக்கப்பட வேண்டும்**

வீட்டு வசதித் திட்டம் மற்றும் பிற திட்டங்கள் குறித்து ஊராட்சி மற்றும் கிராம சபை இறுதி செய்யும் பயனீட்டாளர் பட்டியல், எந்தவித அரசியல், சாதிய மற்றும் வசதி படைத்தோரின் இடையூறு இல்லாது முடிவு செய்யப்பட வேண்டும்.

### வறுமைக் கோட்டிற்குக் கீழுள்ளவர்கள் பட்டியல் ஊராட்சி மற்றும் கிராம சபையால் மட்டுமே இறுதி செய்யப்பட வேண்டும்

தகுதியான குடும்பங்கள் மட்டுமே இப்பட்டியலில் இடம் பெறுவதை கிராம ஊராட்சிகள் மிகச் சரியான முறையில் செய்ய முடியும். கிராம சபை இறுதி செய்த பட்டியலை எந்தவித மாற்றமுமின்றி, அரசியல் கட்சி குறுக்கீடு இன்றி மாநில, மத்திய அரசுகள் ஏற்றுக்கொள்ள வேண்டும். அரசுத் துறைகள் இதில் தலையிடக்கூடாது.

### ஊராட்சிகளில் பெண் மற்றும் தலித் தலைவர்கள் சுதந்திரமாக செயல்படுவது உறுதிசெய்யப்பட வேண்டும்

இந்திய அரசு 73வது மற்றும் 74வது அரசியலமைப்பு திருத்தங்களில் அதிகாரப்பரவலாக்கம் என்ற கண்ணோட்டத்தை அளித்திருக்கின்றது. இதில் முக்கியமாக பெண்களுக்கு 33ரூ இட ஒதுக்கீடு தலித்துகள் மற்றும் பழங்குடி இன மக்களுக்கும் ஒதுக்கீடு போன்றவை உறுதி செய்யப்பட்டுள்ளது. இட ஒதுக்கீட்டில் உற்சாகமளிக்கக்கூடிய விஷயம் என்னவென்றால் 33ரூ ஒதுக்கீடு பெண்களுக்கு செய்திருந்தாலும் 38ரூ பெண்கள் உள்ளாட்சித் தேர்தல்களிலே வெற்றி பெற்றுள்ளார்கள். ஆனால் இவ்விஷயம் உண்மையிலேயே பெண்களை அதிகாரமுள்ளவர்களாக்கவில்லை. குறிப்பாக விளிம்பு நிலையில் உள்ள தலித்துகளும், பழங்குடியின மக்களும் சமவாய்ப்புகள் பெறவில்லை. பெண்களும், தலித்துகளும் நிறைய சவால்களை அன்றாடம் சந்திக்க வேண்டிய நிர்பந்தம் உள்ளது. அதிகாரத்தினால் அவர்கள் பயன்படுத்தப்படுகிறார்கள்.

நிறைய தேர்ந்தெடுக்கப்பட்ட பெண்கள் அவர்களின் கணவர் பின்னாலோ அல்லது அவர்கள் குடும்பத்தினரின் ஆண்கள் பின்னாலோதான் நிர்வாகம் செய்கின்றார்கள். ஆண்கள் இச்சூழல்களில் நிர்வாகத்தை கையில் எடுத்துள்ளனர். பெண் தலைவர்கள் மீது பலசமயங்களில் கொடூரமான தாக்குதல்கள் நடைபெற்றுள்ளது. பஞ்சாயத்துகளின் ஆய்வாளர்கள் (மாவட்ட ஆட்சியர்) நூற்றுக்கணக்கான தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர்களை பதவிநீக்கம் செய்துள்ளார்கள். நூற்றுக்கணக்கான பெண்கள், புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தாலும் சுதந்திரமாக செயல்பட கோரிக்கை வைத்துள்ளார்கள். ஆண் பஞ்சாயத்து உறுப்பினர்களின் (சாதி, அரசியல்) கோரிக்கைகளை, வழி நடத்துதல்களை ஏற்காத பெண் பஞ்சாயத்து தலைவர்கள் பல சவால்களை சந்திக்க நேரிடுகிறது.

பல நூற்றாண்டு காலமாக பொது வாழ்க்கையில் பங்கேற்பு மற்றும் அரசியல் அதிகாரத்தில் பங்கேற்பதில் பாகுபடுத்தப்பட்ட பெண்கள் மற்றும் தலித் தலைவர்கள், தேர்ந்தெடுக்கப்பட்ட உள்ளாட்சி தலைவர்களாக சுதந்திரமாக செயல்பட அவர்களுக்கு திறன், அதிகாரப்பயிற்சி தேவை. தேர்ந்தெடுக்கப்பட்ட பெண்கள், தலித் மற்றும் பிற நலிந்த பிரிவினர் சிறந்த முறையில் அவர்களது உரிமைகளை நிலைநாட்டி செயல்பட்டால் மட்டுமே உண்மையான அடித்தட்டு ஜனநாயகமும், மக்கள் அதிகாரமும் பரவலாக்கப்பட்ட அரசாங்கமும் நிறைவேற்றப்பட்டதாக கருத முடியும்.

### நிர்வாக அதிகாரம்

ஊராட்சிப் பணிகளுக்கு (மத்திய, மாநில அரசு நிதியுதவி பெறும் திட்டங்கள் உள்ளிட்டு) எந்த ஒரு வரையறையுமின்றி நிர்வாக அனுமதி அளிக்கும் அதிகாரம் ஊராட்சி மன்றங்களுக்கு மட்டுமே வழங்கப்பட வேண்டும். இது சம்மந்தமாக அதிகாரிகளுக்கு வழங்கப்பட்டிருக்கும் அதிகாரங்களை நீக்க வேண்டும் என பரிந்துரைக்–கின்றோம். கிராம ஊராட்சியில் தேவையான பராமரிப்புப் பணிகளை, குறிப்பாக மின்சாரக் கம்பி பழுதுபார்த்தல், மின் விளக்குகள் பராமரிப்பு போன்ற பணிகளுக்கு அந்தந்த ஒன்றிய அளவில் போதுமான பணியாளர்களை நியமித்து உடனுக்குடன் அப்பணிகள் செய்து முடிக்கப்பட வேண்டும். கிராம ஊராட்சிப் பணியாளர்கள், உதவியாளர், எழுத்தர், மக்கள் நலப்பணியாளர், குடிநீர் தொட்டி இயக்குனர், துப்புரவு பணியாளர்களின் மிகக் குறைந்த மதிப்பூதியம் உடனடியாக அதிகரிக்கப்பட வேண்டும்.

### கிராமப் பொது வளங்கள், நீர் ஆதாரம்

அனைத்து பொதுநீர் வள ஆதாரங்களையும் கிராம ஊராட்சிகளிடம் ஒப்படைப்பதற்கான சட்டப்பிரிவு 84 தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தில் சேர்க்கப்பட வேண்டும். ஊராட்சி அரசாங்கச் சட்டத்தின் பிரிவு 159, 160 ல் பொது நிலங்கள் மற்றும் வளங்களில் ஊராட்சி அமைப்புகளின் முடிவுகள் / தீர்மானங்களை ரத்து செய்யவோ, மாற்றம் செய்யவோ மாவட்ட ஆட்சியருக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரம் நீக்கப்பட வேண்டும்.

அனைத்து ஊராட்சிகளிலும் ஊராட்சிக்குச் சொந்தமான பல ஏக்கர் கணக்கிலான நிலங்கள் பெரும் நிலச்சுவான்தாரர்களிடமும், கோவில் நிலம் என்ற பெயரில் பெரும்பரப்பிலான நிலங்கள் குத்தகைக்கு விடப்பட்டும் உள்ளன. ஆக்கிரமிப்புகளை அகற்றுவதற்கு வருவாய் மற்றும் போலீஸ் அலுவலர்கள் ஊராட்சித் தீர்மானத்திற்கு கட்டுப்பட்டு ஒத்துழைக்க வேண்டும் என்ற வழிவகை தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தில் இல்லை. இதனால் ஊராட்சித் தலைவர்கள் இந்த ஆக்கிரமிப்புகள் மீது நடவடிக்கை எடுக்க உதவியின்றி உள்ளனர்.

ஆக்கிரமிப்புகளை அகற்றும் அதிகாரம், ஒரு நிர்வாக அதிகாரமாக ஊராட்சித் தலைவருக்கே வழங்கப்பட வேண்டும்.

### கிராம ஊராட்சியும் கிராம வரைபடம் மற்றும் கிராம பொது வளங்கள்

கிராம வரைபடம் மற்றும் கிராம பொது வளங்கள் போன்றவை குறித்த ஆவணங்களைப் பராமரித்து வருவதற்குத் தேவையான அனைத்தும் கிராம ஊராட்சிகளிடம் ஒப்படைக்கப்பட வேண்டும். கிராம வரைபடங்களை மறுவகைப்படுத்துதல், நில உபயோக மேலாண்மை, பொதுச் சொத்து வளங்களில் மேற்கொள்ளப்படும் மாற்றங்கள் குறித்த அனைத்து பரிந்துரைகளும் கிராம சபையின் ஒப்புதலுக்குப் பிறகு ஊராட்சியால் மேற்கொள்ளும்படிக்கு அதிகாரங்கள் ஒப்படைக்கப்பட வேண்டும். ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்கள் மட்டுமே மணல் குவாரிகளுக்கு அனுமதி வழங்கவும் கண்காணிக்கவும், அதிக சுரண்டல் மற்றும் சட்ட விரோத குவாரிகள் மீது நடவடிக்கை எடுக்கவும் அதிகாரம் பெற்றிருக்க வேண்டும்.

### சான்றிதழ் வழங்குதல்

சாதி, வருமானச் சான்றிதழ் வழங்கும் பொறுப்பு வருவாய்த் துறையிடமிருந்து மாற்றப்பட்டு, ஊராட்சிகளால் வழங்கப்படும்படி சட்டத்திருத்தம் கொண்டுவர வேண்டும். இலவசப்பட்டா வழங்குவதற்கு ஊராட்சி மன்றத்தால் தேர்ந்தெடுக்கப்பட்டு அனுப்பப்படும் பட்டியலில் உள்ள நபர்களுக்கே மாவட்ட வருவாய் நிர்வாகம் பட்டா வழங்க வேண்டும். புதியதாக வழங்கப்படும் ''பட்டா'' எதுவாக இருந்தாலும் ஊராட்சி மன்றத்தின் அனுமதியோடு வழங்கப்பட வேண்டும்.

### மாவட்டத் திட்டமிடல் குழு

மாநில அரசு, மாவட்டத் திட்டமிடல் குழுக்களுக்கு தேர்தல் நடத்திய பின்னும், இத்திட்டமிடல் குழுக்களுக்கு எந்தவித செய்லபாடோ, அதிகாரமோ, நிதியாதாரமோ வழங்காதது இவற்றின் செயல்படாத்தன்மைக்கே வித்திடும். இந்திய அரசியல் சாசனத்தின் விதி 243 D ன்படி உருவாக்கப்பட்டுள்ள இம்மாவட்டத் திட்டமிடல் குழுக்களுக்கு அதிகாரம் மற்றும் கடமைகளை விவரித்து உடனடியாக மாநில அரசு சட்ட அறிவிக்கை (Gazette) ஒன்றை வெளியிடக் கோருகிறோம்.

### மதிப்பூதியம்

ஊராட்சி மன்றப் பிரதிநிதிகளுக்கு, மக்கள் சேவைக்கான அவர்களுடைய உழைப்பிற்கு ஊதியமாக குறைந்த பட்சம் ரூபாய் 5,000/– வழங்கக் கோருகிறோம். புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட கிராம ஊராட்சித் தலைவர்களுக்கான பயிற்சி, குறிப்பாக அவர்களின் அதிகாரங்கள், கணக்குப் பராமரிப்பு, கூட்டங்கள் நடத்ததல், திட்ட செயலாக்கம் போன்றவற்றிற்குத் தேவையான பயிற்சிகள் ஒன்றிய அளவில் நடத்தப்பட வேண்டும்.

### மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் நிதி ஒதுக்கீட்டை அதிகப்படுத்தி ஊராட்சி அரசாங்கத் தலைவர்களின் வேலைப் பளுவைக் குறைக்க வேண்டும்

- ஊரக ஊதிய அமைப்பை ஒரு நிரந்தர தன்மை கொண்டதாக்கும் நோக்கில் கொண்டுவரப்பட்ட இத்திட்டத்தின்படி, தினக்கூலி ரூ.119 என்பது பணி மேற்கொள்ளும் அனைவருக்கும் உறுதி செய்யப்பட வேண்டும். ஊதியத்தை கால தாமதமின்றி வழங்கவேண்டும். தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டத்தில் நடைபெற்ற பணிகளை அளவீடு செய்வதற்கு 6 ஊராட்சிகளுக்கு ஒரு என்ஜினியர் என்பதால் பணியை அளவிட்டு கொடுப்பது காலதாமதமாகிறது. இதனை சரிசெய்ய உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.
- தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டத்தில், பணியிடத்தில் செய்து தரப்படவேண்டும் என்று கூறப்பட்டுள்ள குடிநீர் வசதி, மருத்துவ வசதி, நிழற்குடை, குழந்தைகள் காப்பகம் போன்றவற்றை மாநில அரசு தன் நிதியிலிருந்து உடனடியாக செய்து தர வேண்டும்.
- பணிக்கு வரும் மக்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப போதுமான பணியாளர்கள் நியமிக்கப்பட வேண்டும்.

### சட்டமன்ற மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் உள்ளூர் வளர்ச்சி நிதி

சட்டமன்ற மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்களிடம் நாங்கள் கோருவது அவர்களது தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தினை ஊராட்சிகள் மூலமே செயல்படுத்த வேண்டும் என்பதே. சட்டமன்ற, பாராளுமன்ற உறுப்பினர் நிதி, வளர்ச்சிப் பணிக்கு பயன்படுத்தப்படும்போதும் அந்தந்த ஊராட்சி மன்றப் பிரதிநிதிகளைக் கட்டாயம் கலந்து ஆலோசித்துத் திட்டங்களை நிறைவேற்ற வேண்டும்.

### மூன்றடுக்கு ஊராட்சிகளை இணைத்தல்

மூன்றடுக்கு ஊராட்சிகளுக்குள் தொடர்பு ஏற்படுத்தப்பட வேண்டும். கிராமசபையிலிருந்து திட்டமிடல் துவங்கி அது கிராம ஊராட்சி, ஊராட்சி ஒன்றியம், மாவட்ட

ஊராட்சிகளின் திட்டத்தால் தொகுக்கப்பட்டு மாவட்டத் திட்டமிடல் குழு மாவட்டத்திற்கான திட்டத்தைத் தயாரிக்கும் முறை கொண்டுவரப்பட வேண்டும். வளர்ச்சிப் பணிகளுக்குத் திட்டமிடல் மற்றும் நிதி ஒதுக்கீடுகள் குறித்த ஒட்டுமொத்த நடைமுறையும் ஊராட்சிகளின் மூன்றடுக்குகளுக்கும் தெளிவாக அரசு ஆணை மூலம் வழங்கப்பட வேண்டும். வட்டார வளர்ச்சி அலுவலகத்தின் அலுவலர்கள் மற்றும் அவர்களது சேவைகள் கிராம ஊராட்சியால் கோரப்பட்டால் தவிர இந்த நடைமுறையில் அவர்கள் எந்தப் பங்கும் வகித்தல் கூடாது. கிராம ஊராட்சியின் ஆண்டுத் திட்டத்தின் நகல், ஊராட்சி ஒன்றியத்திற்கு அனுப்பப்பட்டு மாவட்ட ஊராட்சியிடம் சமர்ப்பிக்கப்பட வேண்டும். இந்தத் தொடர்பு ஒரு முக்கிய தேவையாதலால், தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994ல் மூன்றடுக்கு ஊராட்சியிலும் தொடர்பை ஏற்படுத்தத் தேவையான மாற்றங்கள் கொண்டுவருவது அவசியம்.

### மாவட்ட ஊராட்சியை அதிகாரமுடையதாக்குவது

மாவட்ட ஊராட்சிகளின் பொறுப்பு, ஆலோசனை வழங்குவதாக மட்டும் இருப்பதற்கு பதில் மாவட்ட ஊராட்சியானது ஊராட்சி அரசாங்கம் குறித்து முடிவு செய்யும் ஒரு அதிகார அமைப்பாக கருதப்பட்டு ஊராட்சிகளுக்குத் தேவையான நிதி, நிர்வாகப் பணியாளர்கள் அமர்த்தப்பட்டு, ஊரக வளர்ச்சித் துறை மானியக் கோரிக்கையின் கீழ் மற்றும் அதன் கீழ் வரும் அனைத்துத் தலைப்பு மற்றும் உப தலைப்புகளின் நிதி ஒதுக்கீடுகளும் மாவட்ட ஊராட்சியிடம் ஒப்படைக்கப் படவேண்டும் எனப் பரிந்துரைக்கின்றோம்.

பொதுக் கல்வி, மருத்துவம் பொதுச் சுகாதாரம், குடிநீர் வழங்கல், துப்புரவு, வீட்டு வசதி, ஆதி திராவிடர், பழங்குடியினர் ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன், சத்துணவு, சமூகப் பணிகள், ஊரக வளர்ச்சி சிறப்புத் திட்டங்கள், தரிசு நில மேம்பாடு, ஊரக வேலைவாய்ப்பு, ஏனைய ஊரக வளர்ச்சித் திட்டங்கள், ஆதி திராவிடர்களுக்கான சிறப்புக் கூறுகள் திட்டம், சிறுபாசனம், நவீன எரிசக்தி ஆதாரங்கள், உள்ளாட்சி மன்றங்களுக்கும், ஊராட்சி நிறுவனங்களுக்கும் ஒதுக்கீடுகளும், ஊரக வளர்ச்சித் திட்டங்கள் குறித்த மூலதனச் செலவு போன்றவை அந்தந்த மாவட்டத்தில் மாவட்ட ஊராட்சியால் திட்டமிடப்பட்டு, செயல்படுத்தப்பட வேண்டும்.

### கேரளா ஊராட்சிகள்

கேரளா ஊராட்சிகளுக்கு பல வகையான அதிகாரங்களும், அதிகமான நிதி ஒதுக்கீடும் (40% க்கும் கூடுதலான) வழங்கப்பட்டுள்ளது. கிராம சமை மற்றும் வார்டு சபைகளுக்கு வரவு செலவுத் திட்டம், தணிக்கை அறிக்கை, பல்வேறு திட்டங்கள், பொது வேலைக்கான திட்ட மதிப்பீடுள்ள பயனாளிகள் பட்டியல் இறுதி செய்தல் உள்ளிட்ட பலவற்றை விவாதிக்க, முடிவு எடுக்க அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது இது தவிர கிராம வளர்ச்சித் திட்டங்களில் எதற்கு முன்னுரிமை அளிப்பது, அதன் பிரதிநிதிகளைத் தேர்வு செய்வது, நிபுணர்கள் உதவியுடன் திட்ட அறிக்கை தயாரிப்பது, வளர்ச்சி அறிக்கைகளைத் தயாரிப்பது ஆகியவற்றில் முடிவு செய்யும் அதிகாரமும் கிராம சபைகளுக்கு உள்ளது.

தேர்ந்தெடுக்கப்பட்ட ஊராட்சித் தலைவர்களை பதவி நீக்கம் செய்யும் அதிகாரம் அரசு அதிகாரிகளுக்கு வழங்கப்படவில்லை மாறாக, நீதிபதிகள் உள்ளிட்டவர்களைக் கொண்ட 'ஆம்பட்ஸ்மென்' குழு அமைக்கப்பட்டு அந்தக் குழுவிற்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது. 'ஆம்பட்ஸமென்' குழுவின் கருத்து கேட்காமல் ஊராட்சிகள் நிறைவேற்றும் தீர்மானங்களை மாற்றவோ, ரத்துசெய்யவோ அரசுக்கு அதிகாரம் இல்லை.

மாவட்ட ஊராட்சிகளுக்கு அதிக அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளது. மாவட்டத் திட்டமிடல் குழுவின் தலைவர் மாவட்ட ஊராட்சித் தலைவர் தான். மாநில அரசு, மாநில அளவிலான திட்டங்களை தயாரிக்கும் போது மாவட்டத் திட்டமிடல் குழுவின் பரிந்துரைகளையும் முன்மொழிதல்களையும் கண்டிப்பாக கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டும். மாநில அரசின் திட்டங்கள் அமல்படுத்தப்படுவதை கண்காணிக்க, மதிப்பீடு செய்ய மாவட்டத் திட்டமிடல் குழுவிற்கு அதிகாரம் உண்டு.

மூன்றடுக்கு ஊராட்சிகளிடையே தொடர்பு உண்டு. கிராம ஊராட்சித் தலைவர்கள், ஒன்றிய ஊராட்சிக் குழுவில் உறுப்பினராகவும், ஒன்றிய ஊராட்சித் தலைவர்கள், மாவட்ட ஊராட்சிக் குழுவில் உறுப்பினர்களாகவும் உள்ளனர். ஊராட்சித் தலைவர்களுக்கு மாத ஊதியமாக சுமார் ரூ.5000/– வரை வழங்கப்படுகிறது.

**ஊராட்சித் தலைவர்கள் கூட்டமைப்புகளின் சம்மேளனம் – தமிழ்நாடு, தமிழக ஊராட்சி அரசாங்கப் பெண் தலைவர்கள் கூட்டமைப்பு, தலித் பஞ்சாயத்துத் தலைவர்கள் கூட்டமைப்பு, ஊராட்சி அரசாங்கத்தை அதிகாரம் பெறச் செய்வதற்கான அரசுசாரா அமைப்புகளின் தமிழகக் கூட்டமைப்பு**

# விழுப்புரம் மாவட்டம், முகையூர் ஒன்றியம், காடகனூர் ஊராட்சித் தலைவர் மற்றும் உறுப்பினர்கள் எதிர்கொள்ளும் சாதியப் பாகுபாடு குறித்த உண்மை அறியும் குழுவின் அறிக்கை

## முன்னுரை

2011ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் நடைபெற்ற ஊராட்சிப் பதவிகளுக்கான தேர்தலில் விழுப்புரம் மாவட்டம், முகையூர் ஒன்றியம், காடகனூர் பஞ்சாயத்தில் வெற்றிபெற்ற தாழ்த்தப்பட்ட (தலித்) இனத்தைச் சேர்ந்த ஊராட்சித் தலைவர் நாராயணன் மற்றும் வார்டு உறுப்பினர்கள் எஸ். இளவரசி (4வது வார்டு), முத்துலிங்கம் (5வது வார்டு), ஆர். இளவரசி (6வது வார்டு) ஆகியோர் கிராமசபை மற்றும் பொதுக்கூட்டங்களில் உயர்சாதியின மக்கள் முன் நாற்காலியில் அமராமல் நின்று கொண்டே கூட்டங்களை நடத்துவதாக பத்திரிக்கைகளில் 22.11.2011 அன்று வெளியான செய்தியைத் தொடர்ந்து, மனித உரிமை மற்றும் ஆராய்ச்சி அமைப்பு, சென்னை, SASY விழுப்புரம், HRDF, காஞ்சிபுரம் ஆகிய தன்னார்வ அமைப்புகள் ஒருங்கிணைந்து நேரில் சென்று கண்டறிந்த கள ஆய்வு அறிக்கை பின்வருமாறு.

## குழுவில் இடம் பெற்றவர்கள்

உண்மை அறியும் குழு 28 நவம்பர் 2011 அன்று விழுப்புரம் மாவட்டம் காடகனூர் ஊராட்சியில் தனது ஆய்வை நடத்தியது. அதில் கீழ்கண்ட நபர்கள் இடம் பெற்றிருந்தனர்.

1. திருமிகு.P.தமிழரசி, ஒருங்கிணைப்பாளர், மனித உரிமை மேம்பாடு மற்றும் ஆராய்ச்சி அமைப்பு.
2. திருமிகு. N.சித்ரா, ஒருங்கிணைப்பாளர், ஊராட்சி அரசாங்கப் பெண் தலைவர்கள் கூட்டமைப்பு.
3. திருமிகு.லலிதா, ஒருங்கிணைப்பாளர், SASY, விழுப்புரம் மாவட்டம்.
4. திருமிகு.ரமேஷ், ஒருங்கிணைப்பாளர், HRDF, காஞ்சிபுரம் மாவட்டம்.
5. திருமிகு.பால்ராஜ், ஒருங்கிணைப்பாளர், HRDF, காஞ்சிபுரம் மாவட்டம்.

## சந்தித்த நபர்கள்

1. நாராயணன், ஊராட்சி தலைவர், காடகனூர் ஊராட்சி, விழுப்புரம்
2. பாலு (எ) ஜகனாதன் – 2வது வார்டு உறுப்பினர், காடகனூர் ஊராட்சி, விழுப்புரம்.
3. D. முத்துலிங்கம்– 5 வது வார்டு உறுப்பினர், காடகனூர் ஊராட்சி, விழுப்புரம்.
4. R. இளவரசி–6 வது வார்டு உறுப்பினர், காடகனூர் ஊராட்சி, விழுப்புரம்.
5. பூங்கான், முன்னாள் தலைவர், காடகனூர் ஊராட்சி, விழுப்புரம்.
6. காந்தி, காடகனூர் ஊராட்சி, விழுப்புரம்.
7. வேணி (க/பெ) நாராயணன், ஊராட்சி தலைவர், காடகனூர் ஊராட்சி, விழுப்புரம்.

## சந்தித்த நபர்கள் (அரசு அலுவலர்கள்)

1. திருமிகு. ராஜேந்திரன், வட்டார வளர்ச்சி அலுவலர், முகையூர் ஒன்றியம், விழுப்புரம் மாவட்டம்.
2. திருமிகு.ஈஸ்வரன், ஊராட்சி உதவி இயக்குநர், விழுப்புரம் மாவட்டம்.
3. திருமிகு.நேரு, எழுத்தர், காடகனூர் ஊராட்சி,விழுப்புரம் மாவட்டம்.

## காடகனூர் – கிராமம் ஒரு கண்ணோட்டம்

காடகனூர் கிராமம் விழுப்புரம் மாவட்டத்திலிருந்து சுமார் 34 கி.மீ.தொலைவில் அமைந்துள்ளது. இக்கிராமப் பஞ்சாயத்தில் சுமார் 2500 மக்கள் வசித்து வருகின்றனர். இதில் ஆதிக்க சாதி மக்களாகக் கருதப்படும் ரெட்டியார், கோனார், கௌண்டர் ஆகிய மக்களை உள்ளடக்கி சுமார் 200 குடும்பங்களும், தலித் இனத்தைச் சேர்ந்த (பள்ளர், பறையர், அருந்ததியர்) மக்கள் சுமார் 150 குடும்பங்களும் அடங்கும். மொத்தம் உள்ள 2500 மக்களில் ஓட்டுரிமை உள்ள மக்களின் எண்ணிக்கை 1260.

இக்கிராமம் தமிழகத்தின் அனைத்து கிராமங்களைப் போல ஊர்பகுதி மற்றும் காலனிப்பகுதி என்று இரண்டாகப் பிரிக்கப்பட்டுள்ளது. ஊர் பகுதியில் ஆதிக்க சாதியின மக்களும், காலனிப் பகுதியில் தலித் இன மக்களும் வசித்து வருகின்றனர். ஆதிக்க சாதியின மக்களின் குடியிருப்புகள் பெரும்பாலும் கான்கிரீட் வீடுகளாகவும், காலனிப் பகுதியில் உள்ள குடியிருப்புகள் பெரும்பாலும் ஓலை வீடுகளாகவும் இருக்கின்றன.

இக்கிராமத்தில் ஒரே ஒரு அரசு ஆரம்பப் பள்ளி மட்டுமே இருக்கின்றது. இதில் அனைத்து இன மக்களின்

குழந்தைகளும் கல்வி கற்கின்றனர். இக்கிராமத்திலுள்ள குழந்தைகள் உயர்கல்வி பெற வேண்டுமானால் 3கி.மீ. தொலைவிலுள்ள ஆலம்பாடி அல்லது 7கி.மீ. தொலைவிலுள்ள அறங்கண்டநல்லூர்க்குச் செல்லவேண்டும்.

இவ்வூரில் பள்ளியைத் தவிர வேறெங்கும் சமத்துவத்தை காணமுடியாது. ஏனெனில் குடிநீர் வரும் தொட்டியிலிருந்து ஏனைய அனைத்தும், ஊர் மக்களுக்குத் தனி, காலனி மக்களுக்குத் தனி என்ற நிலைதான் இன்றளவும் இருந்து வருகின்றது.

காடகனூர் ஊராட்சியில் மேல்சாதியின மக்கள் பெரும்பாலும் நில உடமையாளர்களாகவும், முதலாளிகளாகவும் மற்றும் வட்டிக்கு கடன் கொடுக்கும் தொழில் செய்பவர்களாகவும் இருக்கின்றனர். இங்கு தலித் மக்கள் பெரும்பாலும் மேல்சாதியின மக்களின் தோட்டங்களில் கூலி வேலை செய்பவர்களாக இருக்கின்றனர். தலித் இன ஆண்கள் சிலபேர் ஒன்றிணைந்து, பருவகாலங்களில் **(Season)** பெங்களூர் சென்று பழங்களை மொத்த விலைக்கு வாங்கி அங்கேயே விற்பனையும் செய்துவிட்டு வரும் தொழிலை மேற்கொண்டு வருகின்றனர்.

### உள்ளாட்சித் தேர்தல்

காடகனூர் கிராம ஊராட்சி காலங்காலமாக ஆதிக்க சாதியின மக்களின் கட்டுப்பாட்டில்தான் இயங்கி வந்திருக்கின்றது. 2006 ஆம் ஆண்டிற்கு முன்புவரை காடகனூர் ஊராட்சியில் தலித் இனத்தைச் சேர்ந்த மக்கள் ஒருவர் கூட ஊராட்சி வார்டு உறுப்பினர் பொறுப்பில் கூட இருந்ததில்லை, என்பதே இதற்கு சான்று.

2006 ஆம் ஆண்டு காடகனூர் ஊராட்சி தாழ்த்தப்பட்ட (தலித்) இன மக்களுக்காக ஒதுக்கப்பட்டது. இதனையடுத்து ஊர் மக்கள் (ஆதிக்க சாதி) அனைவரும் ஒன்று கூடி கலந்தாலோசித்து, உள்ளாட்சித் தேர்தலில் இதே ஊரைச் சேர்ந்த, தங்களுக்கு பணிந்து நடக்கக்கூடிய, தலித் இனத்தைச் சேர்ந்த ஒருவரை தேர்ந்தெடுக்க வேண்டும் என முடிவு செய்து அதன்படி **பூங்கான்** (45 வயது) என்பவரை ஊராட்சித் தலைவராகவும், இதே இனத்தைச் சேர்ந்த கண்ணம்மாள், தனபாக்கியம், காத்தவராயன், ஜோசப், மணி மற்றும் ஆதிக்க சாதியைச் சேர்ந்த ஏழுமலை, காசியம்மாள், சங்கர், லலிதா ஆகியோரை வார்டு உறுப்பினர்களாகவும் தேர்ந்தெடுத்துள்ளனர்.

பூங்கான் இத்தேர்தலில் 475 ஓட்டுக்களைப் பெற்று பெருவாரியான ஓட்டு வித்தியாசத்தில் வெற்றி பெற்றிருக்கின்றார். அதன்பின் தொடர்ந்து அவர் பதவியிலிருந்த 5 ஆண்டுகாலமும், பூங்கானும் மற்ற தலித் வார்டு உறுப்பினர்களும், மேல்சாதி உறுப்பினர்கள், மக்களின் முன்பு நாற்காலியில் அமராமலேயே கிராம சபை மற்றும் பொதுக் கூட்டங்களில் பங்கேற்றிருக்கின்றனர். அடுத்து வந்த உள்ளாட்சி தேர்தலிலும் (2011 ஆம் ஆண்டு) காடகனூர் ஊராட்சி தலித் இன மக்களுக்காக ஒதுக்கப்பட்டது. பழையபடியே ஆதிக்க சாதியின மக்கள் அனைவரும் ஒன்றுகூடி தேர்தலுக்கு 2 மாதத்திற்கு முன்பு பஞ்சாயத்து தலைவர் பதவியையும், வார்டு உறுப்பினர்கள் பதவியையும் ஏலம் விட்டுள்ளனர்.

இது குறித்து இதே பகுதியைச் சேர்ந்த பாலு (எ) ஜகனாதன் (ரெட்டியார்) மாவட்ட செயலாளர், (தலித் இன மக்கள் விடுதலை இயக்கம்), திருக்கோவிலூர் – அறங்கண்டநல்லூர் காவல் நிலைய ஆய்வாளர் (S.P) கண்ணன் என்பவரிடம் புகார் அளித்துள்ளார். ஆனால் அவர் புகாரினை பதிவு செய்யாமல் திருப்பி அனுப்பியுள்ளார். இந்தக் காவலர் (கண்ணன்) மீது ஏற்கனவே சக ஊழியர் (காவலர்) ஒருவர் எஸ்.சி, எஸ்.டி தடுப்புச்சட்டத்தின் கீழ் புகார் கொடுத்துள்ளது குறிப்பிடத்தக்கது. ஜகனாதன் உடனே இப்புகாரினை மாவட்ட ஆட்சியர் மணிமேகலையின் கவனத்திற்கு கொண்டு சென்றுள்ளார். மாவட்ட ஆட்சியரின் தலையீடு காரணமாக காடகனூர் ஊராட்சிப் பதவிகளுக்கான ஏலம் நிறுத்தப்பட்டது. மேலும் இப்புகாரினை ஏற்க மறுத்த அறங்கண்டநல்லூர் காவல்நிலைய S.P. கண்ணன் இடமாற்றம் செய்யப்பட்டார்.

இதனையடுத்து 2011 காடகனூர் உள்ளாட்சி தேர்தலில், தலித் இனத்தைச் சேர்ந்த பூங்கான் (முன்னாள் தலைவர்), ராஜேந்திரன், கோவிந்தசாமி, நாராயணன் ஆகிய நான்கு பேர் பஞ்சாயத்துத் தலைவர் பதவிக்குப் போட்டியிட்டனர். இதில் நாராயணன் மொத்தம் 371 வாக்குகளைப் பெற்று ஊராட்சி தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். இவர் ஏற்கனவே 2006 உள்ளாட்சித் தேர்தலில் போட்டியிட்டு தோல்வியடைந்தவர். மேலும் P.கலியபெருமாள் (BC) துணைத்தலைவராகவும், பாலு (எ) ஜகனாதன்(2வது வார்டு உறுப்பினர்), R.ராஜா (3வது வார்டு உறுப்பினர்), எஸ்.இளவரசி(4வது வார்டு உறுப்பினர், D. முத்துலிங்கம் (5வது வார்டு உறுப்பினர்), R.இளவரசி (6வது வார்டு உறுப்பினர் ஆகியோரும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

### சம்பவத்தின் பின்னணி

2011 உள்ளாட்சி தேர்தலை அடுத்து நவம்பர் 2ஆம் தேதி, தமிழக அரசின் இலவச அரிசி வழங்கும் திட்டம் குறித்து சிறப்பு கிராமசபைக் கூட்டம் கூட்டப்பட்டது. இந்தக் கூட்டத்திலும் வழக்கப்படியே தலித் இனத்தைச் சேர்ந்த

ஊராட்சி தலைவரும், வார்டு உறுப்பினர்களும் நின்று கொண்டும், ஆதிக்கசாதி வகுப்பைச் சார்ந்த உறுப்பினர்கள் மற்றும் துணைத்தலைவர் ஆகியோர் நாற்காலியில் அமர்ந்து கொண்டும் கூட்டத்தை நடத்தியிருக்கின்றனர்.

■ ■ ■

**இவ்வூரில் பள்ளியைத் தவிர வேறெங்கும் சமத்துவத்தை காணமுடியாது. ஏனெனில் குடிநீர் வரும் தொட்டியிலிருந்து ஏனைய அனைத்தும், ஊர் மக்களுக்குத் தனி, காலனி மக்களுக்குத் தனி என்ற நிலைதான் இன்றளவும் இருந்து வருகின்றது.**

■ ■ ■

இக்கூட்டத்தில் இலவச அரிசியை மக்களுக்கு பகிர்ந்தளிப்பது குறித்து பாலு(எ) ஜகனாதனுக்கும் (2வது வார்டு உறுப்பினர்) மற்ற உறுப்பினர்களுக்கும் கருத்து வேறுபாடு ஏற்பட்டுள்ளது. இக்கிராமசபைக் கூட்டம் நடைபெற்ற பொழுது பாலு(எ) ஜகனாதனின் நண்பர் சுரேஷ் என்பவர் புகைப்படம் எடுத்துள்ளார். இப்புகைப்படத்தில் தலித் இன ஊராட்சித் தலைவர் மற்றும் வார்டு உறுப்பினர்கள் மற்ற உயர்சாதியின் உறுப்பினர்கள் முன்பு நின்று கொண்டே கூட்டத்தை நடத்துவது போன்ற படங்கள் பதிவாகியுள்ளன. ஜகனாதன் இப்புகைப்படத்தினையும், இந்த சம்பவம் குறித்த செய்தியையும் பத்திரிக்கைகளுக்குத் தெரிவித்துள்ளார். பத்திரிக்கைகளில் இச்செய்தி 22.11.2011 அன்று புகைப்படத்துடன் வெளியாகியுள்ளது. செய்தி வெளியான உடனேயே 22.11.2011 அன்று காலை 8.00 மணி அளவில் காவல்துறை ஆய்வாளர் காடகனூர் கிராமத்திற்கு விரைந்துள்ளார். அவரைத் தொடர்ந்து தாசில்தார், BDO ராஜேந்திரன், ஊராட்சி இணை இயக்குநர் ஆகியோர் நேரில் சென்று விசாரணை நடத்தி மாவட்ட ஆட்சியருக்கு அறிக்கை சமர்ப்பித்துள்ளனர்.

இவ்வறிக்கையின் பேரில் விழுப்புரம் மாவட்ட ஆட்சியர் மணிமேகலை, பாலு (எ) ஜகனாதன் மற்றும் முன்னாள் ஊராட்சித் தலைவர் பூங்கான் ஆகியோரை முதலில் அழைத்து விசாரித்துள்ளார். அப்போது பாலு (எ) ஜகனாதன் பத்திரிக்கைகளில் வெளிவந்த புகைப்படங்கள், முன்னாள் ஊராட்சித் தலைவர் பூங்கான் தன் அலுவலகக் குறிப்பேட்டில் தான் பதவியிலிருந்த 5 ஆண்டுகாலமும் மேல்சாதி மக்கள் தன்னை தலைவருக்கான நாற்காலியில் அமர அனுமதிக்கவில்லை என்று கைப்பட எழுதி கையொப்பமிட்ட கடிதத்தையும், 2006 முதல் 2011 வரை நடந்த ஊராட்சிக் கூட்டங்களில் தலித் தலைவர் மற்றும் உறுப்பினர்கள் மற்ற ஆதிக்க சாதியினர் முன் நின்றுகொண்டே இருக்கும் புகைப்படங்கள் ஆகிய ஆதாரங்களை அளித்துள்ளார். பின்பு மாவட்ட ஆட்சியர், தற்போதைய ஊராட்சி தலைவர், துணைத்தலைவர், வார்டு உறுப்பினர்கள், தண்ணீர் திறந்துவிடும் நபர் ஆகியோரையும் அழைத்து விசாரணை நடத்தியுள்ளார். விசாரணைக்குப் பின்பு ஊராட்சித் தலைவர் மற்றும் மற்ற உறுப்பினர்களை கண்டித்து, ஊராட்சித் தலைவர், உறுப்பினர்களின் பொறுப்புகள் குறித்து அறிவுரை வழங்கி அனுப்பியுள்ளார்.

**வாக்குமூலங்கள்**
**நாராயணன், ஊராட்சித் தலைவர்**

இங்கு 1400 ஓட்டு உள்ளது. இதில் 700 ஓட்டு பெற்று வெற்றி பெற்றேன். இதில் 6 வார்டு உறுப்பினர்கள் இருக்கிறார்கள். இதில் மூன்று நபர் SC, மூன்று நபர் BC. என்னுடைய தொழில் விவசாயம். விவசாயம் இல்லாத நாளில் பெங்களூரு சென்று பழ வியாபாரம் செய்வென். மாதம் சராசரியாக நாலாயிரம் (4000) வருமானம்தான் கிடைக்கிறது. இந்தத் தேர்தலுக்காக மூன்றரை லட்சம் செலவு செய்துள்ளேன். கொஞ்சம் நிலம் இருந்தது, அதை வித்து இந்தத் தேர்தலுக்கு செலவு செய்தேன். நான் SC என்பதற்காக இங்கு எந்த பிரச்சனையும் யாரும் தருவது இல்லை. ஆனால், ஜெகன்நாதன்தான், அவர் துணை தலைவராக முடியவில்லை என்று பொறாமைப்பட்டு இந்த மாதிரி பொய் பிரச்சாரம் செய்துகொண்டு இருக்கார். இங்கு ஏலம் விடும் பொருட்கள் கூட சரிசமமாகத்தான் பிரித்து SCக்கும் BCக்கும் செலவு செய்யப்படுகிறது. Nov.22ஆம் தேதி சிறப்பு கிராமசபா கூட்டத்தில் அனைவரும் பேசி தீர்மானம் போட்ட பிறகு எழுந்து வெளியில் வரும்பொழுது அப்படியே இருங்கள் என்று சுரேஷ் என்கின்ற போட்டோ கிராபர் படம் எடுத்தார். அதைக் கொண்டு சென்ற ஜெகன்நாதன் தினமலர் பேப்பருக்கு கொடுத்து பிரச்சாரம் செய்துவிட்டார்.

அன்றே 22ம் தேதி CID Police AD. Panchayat, BDO என்று அனைவரும் இங்கு (காடகனூர்) வந்து ஒவ்வொரிடமும் விசாரணை செய்தார்கள். அதன்படி இந்த ஊராட்சி அலுவலகத்தில் இருந்த சில போட்டோக்கள் எல்லாம் எடுத்துச் சென்றார். அடுத்து கலெக்டர் மணிமேகலை 23ம் தேதி எங்கள் 6 பேரையும் கூப்பிட்டு தலைவர், தண்ணீர் ஆப்ரேட்டர், முன்னாள் துணை தலைவர் இப்பொழுது உள்ள துணை தலைவர் கலிய பெருமாள், வீராசாமி, வார்டு உறுப்பினர் முத்துலிங்கம், ஜெகன்நாதன் எல்லோரையும் கூப்பிட்டு தனிதனியாக விசாரித்தார். அதன்டி சில ஆலோசனைகளையும்

வழங்கி சில நபர்களை எச்சரித்தும் அனுப்பி வைத்தார், வரும் காலங்களில் இங்குள்ள பள்ளியை (இப்பொழுது 5ஆம் வகுப்பு வரை உள்ளது), நடுநிலைப் பள்ளிகளாக மாற்ற வேண்டும். இங்குள்ள தண்ணீர் பிரச்சனையையும் தீர்க்கணும்.

### ஜெகன்நாதன் என்கின்ற பாலு, 2வது வார்டு உறுப்பினர்

நான் மக்கள் முன்னேற்றக் கழகம் மாவட்ட தலைவர் ஜான்பாண்டியன் கட்சியில் விழுப்புரம் மாவட்டச் செயலாளர் பதவியில் உள்ளேன். எங்கள் ஊரில் ஊராட்சித் தேர்தலுக்கு முன்பு, பதவிகளை ஏலம்விடுவது வழக்கம். அதுபோல், இந்த முறையும் ஊராட்சி பதவிகளை ஏலம்விட இருந்தனர். நான் இது தொடர்பாக, விழுப்புரம் காவல்துறை அதிகாரியிடம் புகார் தெரிவிக்கச் சென்றேன். அப்பொழுது அங்கு இருந்த கண்ணன் என்கிற காவல்துறை அதிகாரி ரிப்போர்ட்டை வாங்காமல், ஊரே ஒத்துபோகுது உனக்கு என்னடா என்று திட்டி அனுப்பிவிட்டார், அதன்பிறகு மாவட்ட ஆட்சியரிடம் முறையிட்டேன். பின்பு, இந்த காவல்துறை அதிகாரியை தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினர் வன்கொடுமைத் தடுப்புச் சட்டம் (SC-ST(PoA)Act) மூலம் நடவடிக்கை எடுத்து வேறு இடத்துக்கு மாற்றி உள்ளார்கள். இந்த ஊராட்சி பதவி ஏலம் 3 லட்சமும், வார்டு உறுப்பினர் பதவி 25000 ஏலம்விடுவதாக இருந்தது. அதை தடுத்து நிறுத்திவிட்டேன். இந்த பணத்தைக் கோவிலுக்கும் தெருவுக்கு செலவு செய்வதாக இருந்தது.

### இதற்கு முக்கிய காரணமானவர்கள்

1. கந்தசாமி தர்மகர்த்தா
2. அருணாசலம் விவசாயி
3. பாஸ்யம் என்கின்ற சங்கர் நிதி அலுவலர் (Finance.)
4. சுப்ரமணி (Pump Operator.)

இவர்கள்தான் இந்த ஊரில் உள்ள எல்லா பிரச்சனைக்கும் காரணம் ஆனவர்கள். இவர்கள் சொல்வதைதான் இந்த ஊர் மக்கள் கேட்கணும். கேட்காமல் எதிர்ப்பவர்களை அவர்களிடம் உள்ள பலகீனத்தை பயன்படுத்தி அவர்களை பூஜ்யம் ஆக்குவது இவர்களுடைய வேலை. இந்தத் தேர்தலுக்கு நாராயணுக்கு ஒன்றரை லட்சம் பணம் கொடுத்திருக்கிறார்கள். இவர் பினாமி போல் உள்ளவர்தான் என்றும் துணைத் தலைவர் கலிய பெருமாள். அவர் துணைத் தலைவராக வருவதற்கு வார்டு உறுப்பினர் 5 நபருக்கு 50 ஆயிரம் கொடுத்ததாகவும் தெரியவந்தது. Ex ஊராட்சித் தலைவர் பூங்கான் தானே முன்வந்து நான்தான் 5 வருடகாலம் நாற்காலியில் உட்காரவில்லை இந்தத் தலைவராவது உட்கார்ந்து வேலை செய்யணும் என்றும் எழுதி கொடுத்துதான் மாவட்ட ஆட்சியரிடம் புகார் கொடுத்தோம்.

இந்த மாதம் சிறப்பு கிராமசபா கூட்டம் நடைபெற்றது. அப்பொழுது அங்கு ஆட்கள் உட்கார்ந்து இருந்தனர். தலைவர் நின்று கொண்டிருந்தார். நான்தான் வார்டு உறுப்பினர் முத்துலிங்கத்தை நாற்காலியில் உட்கார வைத்தேன். அப்பொழுது நாராயணன், கண்ணைக் காண்பித்து பல்லைகடித்து நாக்கை கடித்து எழுந்திருக்க சொல்லி மறைமுக டார்ச்சர் கொடுத்தார். அதைப்பார்த்து அவர் எழுந்துகொண்டார். நான், ஏன் எழுந்தாய் என்று அவரைத் திட்டினேன். இப்படிச் செய்யும்போது நான் எப்படி உட்காருவது என்று சொன்னார். அதனால், எனக்கு நிறைய கோபம் வந்தது. பூங்கானும் நானும் சேர்ந்துதான் மாவட்ட ஆட்சியரிடம் புகார் மனு கொடுத்தோம். ஆனால், இப்பொழுது பூங்கான் நான் அப்படி புகார் கொடுக்கவில்லை என்றும், நானாகவேதான் தேர்தலில் மக்கள் ஓட்டு போட்டதற்கு மரியாதை கொடுப்பதற்காக நின்றுகொண்டு வேலை செய்தேன் என்று சொல்கிறார். அவரை ஊராட்சியின் எழுத்தராக உள்ள நேரு என்பவர் சில வவுச்சர் இல்லாமல் இருக்கு, உங்கள் கணக்கில், ஆகையால், இதையெல்லாம் பார்த்தால் நீங்கள் 5 லட்சம் பணம் கட்ட வேண்டியது வரும். அதனால் நீங்கள் ஓட்டுபோட்ட மக்களுக்கு மரியாதை கொடுக்கவே நின்று கொண்டு ஊராட்சியில் பணி செய்தேன் என்று சொல்லுங்கள் என்று மிரட்டியுள்ளார். அதனால்தான், பூங்கான் பயந்துகொண்டு இப்பொழுது மாற்றிச் சொல்கிறார். இப்பொழுது எங்கள் ஊரில் இப்பிரச்சனைக்குப் பின்பு டீக்கடையில் கூட பிளாஸ்டிக் டம்ளர் கொடுத்தவர்கள், இப்போது சில்வர் டம்ளர் கொடுக்கிறார்கள். சந்தோஷமாக இருக்கிறது. இருந்தாலும் என் உயிருக்கு ஆபத்து இருப்பதால், இரண்டு நபருடன் சேர்ந்து செல்ல வேண்டியுள்ளது. என் மனைவி ரொம்ப பயப்படுகிறார் போலீஸ் ஸ்டேஷனில் ஒரு புகார் கொடுக்கலாம் என்றிருக்கிறேன்.

### D. முத்துலிங்கம், வார்டு உறுப்பினர், வயது 31

நான் 10ஆம் வகுப்பு படித்துள்ளேன். என் மனைவி வசந்தா வயது 21. மூன்றுமாத ஆண் குழந்தை உள்ளது. சென்ற மாதம் சிறப்பு கிராம சபை நடத்தினோம். அப்போது அந்தக் கூட்டம் முடிந்து வெளியில் வரும்பொழுது, அப்படியே கொஞ்சம் எல்லோரும் இருங்க என்று சொல்லி, ஜெகனாதன் போட்டோகிராபர் சுரேஷிசிடம் சொல்லி படம் எடுக்கச் சொன்னார். அவர் துணைத் தலைவருக்கு போட்டியிட்டார். ஆனால், வார்டு மெம்பர்கள் இவருக்கு ஓட்டு போடாத காரணத்தினால் பொறாமையால் இந்த ஜகன்நாதன் இப்படி எல்லாம் செய்கிறார். இதுவரைக்கும் இந்த காடகனூரில் எந்தவிதமான சாதிப் பிரச்சனைகளும் இருந்ததில்லை. இந்த ஜெகன்நாதன்தான் இல்லாததையும் பொல்லாததையும் சொல்லி கொண்டு திரிகிறார்.

**இளவரசி, வார்டுமெம்பர் (விவசாயம்) (35 வயது)**

நாங்கள் இந்த காடகனூரில் எல்லோரும் சரிசமமாகதான் வாழ்ந்து கொண்டு இருக்கிறோம். எங்களிடம் மேல் ஜாதி, கீழ்ஜாதி பிரச்சனை இல்லை என்று இருந்தாலும் Ex ஊராட்சி தலைவர் பூங்கான் இந்த 5 வருடகாலம் நாற்காலில் உட்காராமல்தான், அவர் பணியை ஊராட்சியில் நடத்தினார். ஏன் என்று கேட்டால் என்னை நம்பி அனைவரும் பாரபட்சம் பார்க்காமல் ஓட்டு போட்டதால் அதற்கான மரியாதை செலுத்துகிறேன் என்று சொல்கிறார்.

**பூங்கான், Ex ஊராட்சி தலைவர்**

இவர் கடந்த 5 வருட காலம் ஊராட்சி தலைவராக இருந்தபோது, ஒரு நாள் கூட அந்த நாற்காலியில் உட்கார்ந்தது கிடையாது. இதைப்பற்றி அவரிடம் கேட்டபோது அவர் சொல்லியது என்னவென்றால் நான் இந்த ஊராட்சித் தேர்தலில் போட்டியிட்டப்ப இந்த மக்கள் அதிக ஓட்டு போட்டதால் அதற்கு மரியாதை கொடுக்கும் நிமித்தமாக நின்றேன். யாருடைய வற்புறுத்தலுக்காகவும் நான் நிற்கவில்லை. நானேதான் நின்றேன். இதுபற்றி நான் பேச விரும்பவில்லை.

**காந்தி (விவசாயம்) (58 வயது) ஊராட்சி தலைவர் நாராயணனின் பக்கத்து வீட்டுக்காரர்**

ரெட்டியார் பாலு என்கின்ற ஜெகன்நாதன் துணைத் தலைவருக்கு போட்டியிட்டதால் அவருக்கு SC மக்கள் ஓட்டு போடவில்லை, அதனால் வார்டு மெம்பரான அவர் துணைத் தலைவராக முடியவில்லை என்கின்ற காரணத்தினால், பொய்யான தகவலை பத்திரிக்கைக்கு கொடுத்து வீன் பிரச்சாரம் செய்துவிட்டார். எப்பொழுதும் ஏதாவது குற்றம் கண்டுபிடித்து மக்களிடம் இருக்கின்ற ஒற்றுமையை குலைப்பது ஜெகன்நாதனுடைய வேலையாக இருக்கிறது.

**வேணி, ஊராட்சி தலைவர் நாராயணின் மனைவி:**

இங்கு செருப்புகூட காலில் போட்டு நடக்க முடியாத நிலை இருந்தது. இப்பொழுது காலம் மாறிவிட்டது. என் கணவர் மூன்றாவது முறையாக தேர்தலில் நின்று வெற்றி பெற்றார். முதல் இரண்டுமுறை தோல்வி அடைந்துவிட்டார். எங்களுக்கு மூன்று குழந்தைகள் உள்ளனர். முதலாவது மகள் கவிதா. அவளுக்கு திருமணம் ஆகிவிட்டது. இரண்டாவது மகன் ஏழுமலை B.A. Computer Science படிக்கிறான். மூன்றாவது மகன் விக்னேஷ் 11ஆம் வகுப்பு படித்துக் கொண்டு இருக்கிறான். இவருடன் போட்டி போட்டு தேர்தலில் நின்றவர்கள், முன்னாள் தலைவர் பூங்கான், ராஜேந்திரன், கோவிந்தசாமி. எங்களுக்கு விவசாயம்தான் தொழில். விவசாய வேலை இல்லாதபோது பெங்களூரு சென்று பழ வியாபாரம் செய்துவிட்டு வருவார், அதை வைத்துக்கொண்டுதான் எங்கள் குடும்பம் ஓடுகிறது.

**ராஜேந்திரன், BDO முகையூர் ஒன்றியம்**

நான் பேப்பர் பார்த்துதான் இந்த News தெரியும். உடனே நாங்கள் விரைந்து வந்து விசாரணை நடத்தினோம். இரண்டு பக்கமும் விசாரணை செய்தோம். எனக்கு தெரிந்து இந்த மாதிரி பிரச்சனை நடக்கவில்லை என்றுதான் நினைக்கிறேன். Ad. Panchayatக்கிட்டயும் தனிதனியாக வாக்குமூலம் கொடுத்து உள்ளார்கள். அது உண்மை என்று தெரிந்தால், அதற்கான நடவடிக்கை எடுப்போம்.

**S. ஈஸ்வரன்: (ஊராட்சி இணை இயக்குநர், விழுப்புரம் மாவட்டம்)**

நான் இப்பொழுதுதான் முதல் முறையாக இந்த ஊரில் இந்த பதவியை ஏற்றேன். (பத்திரிகை செய்தி) பார்த்து காடகனூரில் நானும் என்னுடைய உதயியாளரும் சென்று, ஒவ்வொரு பகுதியாக சுமார் 6 மணி நேரம் விசாரணை செய்தோம். அதன்பின் விசாரணையில் நாங்கள் கண்டவைகளை அறிக்கையாக தயாரித்து, விழுப்புரம் மாவட்ட ஆட்சியர் மணிமேகலையிடம் கொடுத்துள்ளோம். தலித் ஊராட்சித் தலைவர்கள் ஒடுக்கப்படுவது, சமுதாயத்தில் பரவலாகக் காணப்படுகின்றது. நான் விழுப்புரம் மாவட்டத்திலுள்ள ஊராட்சி தலைவர்களுக்கு பல்வேறு பயிற்சிகளை ஏற்பாடு செய்து, நடைமுறைப்படுத்தி வருகின்றேன். மாவட்ட ஆட்சியர் மணிமேகலை, காடனூர் ஊராட்சி முன்னாள் தலைவர், உறுப்பினர்கள், தற்போதுள்ள தலைவர், உறுப்பினர்கள், தண்ணீர் விடும் ஆள், ஊராட்சி எழுத்தர் ஆகியோரை நேரடியாக அழைத்து விசாரித்து, கண்டித்துள்ளார். இனி மேலிடத்தில் இருந்து எடுக்கும் முடிவுகளை செயல்படுத்த உள்ளோம்.

**கண்டறிந்த உண்மைகள்**

1) காடகனூர் ஊராட்சியிலுள்ள தலித் இன மக்கள் தங்கள் தொழில் முதலிய அனைத்து தேவைகளுக்கும் ஆதிக்க சாதியின மக்களையே அண்டிவாழும் நிலை உள்ளதால் அவர்களை பகைக்கும் துணிவில்லாமல் ஆதிக்கசாதியின மக்களின் கட்டுப்பாட்டுக்குள்ளேயே தற்போதும் இருந்து வருகின்றனர்.

2) முன்னாள் ஊராட்சி தலைவர் பூங்கான், தான் பதவியிலிருந்த காலத்தில், ஆதிக்கசாதி மக்களின் கட்டுப்பாட்டிற்கு பணிந்து ஊராட்சி கூட்டங்கள்

அனைத்திலும் நின்றுகொண்டே இருந்திருக்கிறார். தற்போது 2011ஆம் ஆண்டு உள்ளாட்சி தேர்தலில் போட்டியிட்டு தோல்வியடைந்ததால், பாலுவின் தூண்டுதலின் பெயரியல் ஊக்கம் பெற்று, தன்னுடைய பதவிகாலங்களில் நின்றுகொண்டே பணி செய்ததை Letter padல் எழுதி கையொப்பமிட்டுக் கொடுத்துள்ளார். ஆனால், தற்போது தான் விரும்பியே நின்றதாகவும் தன்னை யாரும் கட்டாயப்படுத்தவில்லை என்று கூறுவதிலிருந்து அவர் மேல்சாதியின மக்களால் அச்சுறுத்தப்பட்டிருக்கின்றார் என்பது தெளிவாகின்றது.

3) ஊராட்சி இணை இயக்குநர், மாவட்ட ஆட்சியர் தற்போதைய தலைவர் மற்றும் உறுப்பினர்களைக் கண்டித்தார் என்று கூறுவதிலிருந்து தவறு நடந்துள்ளது ஊர்ஜிதமாகின்றது.

4) காடகனூர் கிராமத்தில் சாதிப் பாகுபாடுகள் கடுமையாக இருப்பதை, தனித்தனி குடியிருப்புப் பகுதிகள், தனித்தனி நீர்தொட்டிகள் நீர் திறந்துவிடும் நபரில் கூட, தலித்துகளுக்கு தனி நபர், மேல்சாதியினருக்குத் தனிநபர் போன்றவற்றிலிருந்து உணரலாம்.

5) அரசாங்கத்தின் ஊரக வேலைவாய்ப்பு திட்டத்தின் கீழ் (MNREGA) வேலை அளிக்கும்போது கூட, தலித்துகள் தனியாகவும், மற்ற மக்கள் தனியாகவுமே பணியமர்த்தப்படுகின்றனர். அனைத்து மக்களும் கலந்து வேலை செய்வதில்லை.

6) மாவட்ட ஆட்சியரின் எச்சரிக்கைக்குப் பின்னர் நடந்த கிராமசபை கூட்டத்தில் அனைத்து நாற்காலிகளும் எடுக்கப்பட்டு, அனைவரும் தரையில் அமர்ந்து கிராமசபை கூட்டங்களை நடத்தியுள்ளனர். இதிலிருந்து மேல்சாதியின மக்கள், தங்களுக்கு இணையாக தலித் மக்கள் நாற்காலியில் அமர்வதை விரும்பவில்லை என்பதை அறியலாம்.

## பரிந்துரைகள்

1. பிரச்சனை குறித்த ஆய்வினை உடனே செய்து அதன் மீதான நடவடிக்கையினை துரிதப்படுத்த வேண்டும். தலித் மக்கள் இன்னும் ஒடுக்கப்பட்டவர்களாக இருக்கிறார்கள். நமது அரசியல் அமைப்பு சட்டத்தில் வழங்கப்பட்டுள்ள உரிமைகளை பயன்படுத்தி தலித் ஊராட்சித் தலைவர்களை பாதுகாப்பதுடன், மாவட்ட மற்றும் மாநில நிர்வாகம் இப்பிரச்சனையில் தலையிட்டு தலித் மற்றும் பழங்குடியின ஊராட்சித் தலைவர்கள் மீதான ஒடுக்குமுறை மற்றும் வன்முறையை தடுக்க வேண்டும்.

2. விழுப்புரம் மாவட்டம், முகையூர் ஒன்றியம், காடகனூர் ஊராட்சித் தலைவர் மற்றும் வார்டு உறுப்பினர்கள் அவர்கள் பணியை எந்த ஒரு இடையூறும் இல்லாமல் நிறைவேற்ற, சாதிய ஒடுக்குமுறை இல்லாமல் செயல்பட, உள்ளாட்சி துறை அமைச்சர் உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும்.

3. தலித் ஊராட்சித் தலைவர்களின் சுதந்திரமான செயல்பாட்டிற்கு எதிராக அச்சுறுத்தல் உள்ள ஊராட்சி கூட்டங்களில் மாவட்ட ஆட்சியர் நேரடியாக பங்கேற்க வேண்டும். இதன்மூலம் தலித் தலைவர்கள் ஆதிக்க சாதியினர் அதிகாரப் பார்வையிலிருந்து மீண்டு ஊராட்சி நலன் கருதி சில தீர்மானங்களை எடுக்க முடியும்.

4. விழுப்புரம் மாவட்டம் முகையூர் ஒன்றியம் காடகனூர் முன்னாள் ஊராட்சித் தலைவர் திரு. பூங்கான் அவர்கள் 5 வருடகாலம், அவருடைய இருக்கையில் அமராமலே ஊராட்சியை நடத்தி வந்துள்ளார். இம் மாதிரி நிலைமை வருங்காலங்களில் நடக்காமல் இருக்க, உள்ளாட்சி அரசாங்கத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட தலித் மக்களுக்கு தன்னம்பிக்கை வளரும்படி அரசு தொடர் பயிற்சிகளை அளிக்க வேண்டும்.

5. ஊராட்சித் தலைவர் பதவியும் வார்டு உறுப்பினர் பதவியும் ஆதிக்க சாதியினர் அதிகாரத்தில் சிக்கி ஏலம்விடும் கலாச்சாரம் மாறாமல் இன்னும் சில இடங்களில் நடைபெறும் நிகழ்வுகளாக இருப்பதால் ஊராட்சித் தேர்தலின்போது (மாவட்ட ஊரக வளர்ச்சி துறையின்) கண்காணிப்பு மிகவும் அவசியமாகிறது.

6. மத்திய மாநில அரசுகளின் திட்டம், நிதி குறித்த அனைத்து விபரங்களும், தலித் தலைவர்களுக்கு BDO (வட்டார வளர்ச்சி அலுவலகம்) துணை இயக்குநர் ஆகியோரால் ஊராட்சி தலைவருக்கு அவ்வப்போது விளக்கப்பட வேண்டும்.

7. ஊராட்சி நிர்வாகம் குறித்து, தலித் பஞ்சாயத்து தலைவர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்துவதுடன், பினாமியாக இல்லாமல் அடிமைதனத்தை களைந்து, தானே முன் வந்து செயல்பட ஊராட்சி தலைவர்களுக்கு தைரியம் ஊட்டுவதுடன் பூங்கான் போன்றவர்களுக்கு தலித்தின் உரிமைகளை எடுத்துரைத்து, ஆதிக்க சாதியினரின் அதிகார செயல்பாட்டை எதிர்த்து போராடச் செய்ய வேண்டும்.

# உள்ளாட்சித் தேர்தலும் மக்கள் எதிர்பார்ப்பும்

**இன்றைக்கு உள்ளாட்சிகளைக் கடுமையாகப் பாதித்துக் கொண்டிருப்பது நிதிப் பற்றாக்குறையே. குடிநீர் விநியோகம், தெருவிளக்கு பராமரிப்பு, சாலை பராமரிப்பு, பொது சுகாதார மேம்பாடு ஆகியவற்றில் முன்னேற்றம் காண நிதி மிகவும் முக்கியம்.**

– எஸ். நூர் முகமது

உள்ளாட்சி தேர்தல்கள் நடந்து முடிந்துவிட்டன. அரசியல் கட்சிகள் தேர்தல் பரபரப்பிலிருந்து விலகி இதர பணிகளில் ஈடுபடத் துவங்கிவிட்டன. மக்களும் தங்களது அரசியல் ஜனநாயகக் கடமை முடிந்து, அரசும், உள்ளாட்சி நிர்வாகங்களும் என்ன செய்யப் போகின்றன என்று ஆவலோடு எதிர் நோக்கத் துவங்கியுள்ளனர். அரசியல் சட்டத் திருத்தத்தின் மூலமாக உள்ளாட்சி தேர்தல் நடத்துவது கட்டாயமாக்கப்பட்ட பின்னர் தமிழகத்தில் ஆளும் கட்சிகளுக்கு முன்னர் போல் தன் விருப்பத்திற்குத் தேர்தலைத் தள்ளி வைக்கச் சாத்திய மில்லாமல் போய்விட்டது. எனவே, தான் தேர்தலில் வெற்றிபெற தங்களது சகல திறனையும் பயன்படுத்துகின்றனர். சாம, பேத, தான, தண்டம் என்பார்களே, அனைத்துமே தேர்தலில் பயன்படுத்தப்படுகின்றன. இந்த தேர்தலைப் போல் உள்ளாட்சிகளில் எந்த காலத்திலும் பணம் வெள்ளமாய் ஓடியது இல்லை.

ஆளும் கட்சியினர் மட்டுமல்ல பிரதானக் கட்சியினரும் பணத்தை வாரி இறைத்தனர். ஆளும் கட்சிக்கு வாக்களித்தால்தான் அரசின் திட்டங்களும், நல உதவிகளும், வளர்ச்சிப் பணிகளும் தங்கள் பகுதிக்கு வரும் என்று வாய் கூசாமல் கூறினர் ஆளும் கட்சியினர். இந்த பழக்க தோஷத்தால் தானோ என்னவோ அதிமுக அரசில் அமைச்சராக இருக்கும் குமரி மாவட்ட அதிமுக மாவட்டச் செயலாளர், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சிக்கு வாக்களித்து, அஇஅதிமுக வேட்பாளரின் டெபாசிட்டைப் பறித்த குழித்துறை நகராட்சி மக்களைப் பார்த்து பகிரங்கமாக, உங்கள் தலையில் மண்ணை வாரிப் போட்டுவிட்டீர்கள். இனி உங்களுக்கு அரசின் எந்த திட்டமும் வராது என்று கூறி, தனது அரசியல் சட்ட கடமையை நிறைவேற்றியுள்ளார். மேலும் அதிகார துஷ்பிரயோகங்களும் அதிக அளவில் நடைபெற்றன.

இத்தகைய பல காரணங்களால் நடந்து முடிந்த உள்ளாட்சி தேர்தலில் ஆளும் அஇஅதிமுக அதிக இடங்களைக் கைப்பற்றியுள்ளது. 10 மாநகராட்சி மேயர்களும், அனைத்து மாவட்ட ஊராட்சி தலைவர்களும், பெரும்பான்மையான நகராட்சி, பேரூராட்சி, ஊராட்சி, ஊராட்சி ஒன்றியத் தலைவர்களும் ஆளும் கட்சியைச் சார்ந்தவர்களே. மிகக் குறைந்த இடங்களில்தான் இதர கட்சியினர் வெற்றி பெற்றுள்ளனர். ஆளும் கட்சிக்கு வாக்களித்தால் தான் வளர்ச்சிப் பணிகள், திட்டங்கள். நல உதவிகள் வந்து சேரும் என்ற நம்பிக்கையில் மக்கள் வாக்களித்துள்ளனர். எனவே அரசுக்கு, மக்களின் எதிர்பார்ப்புக்கு ஏற்ப செயல்பட வேண்டிய கடமை உள்ளது. இன்று பெருவாரியான நகரங்களும், கிராமங்களும் மிகவும் பரிதாப நிலையில்தான் உள்ளன. நான்கு வழிச்சாலைகள், பிரம்மாண்ட பாலங்கள் என்று ஒரு புறம் இருந்தாலும் சென்னை நகரமே எப்படி இருக்கிறது என்பதை இம்மாதம் பெய்த கன மழை அம்பலப்படுத்தியுள்ளது.

■ ■ ■

**மாநில நிதிக் கமிஷன்கள் பல அமைத்தும் உள்ளாட்சிகளுக்கு வரி வருவாயில் வெறும் 10 சதவிகிதம் மட்டுமே வழங்கப்படுகிறது. யானைப் பசிக்குச் சோளப் பொரி என்பது போல் இந்த குறைந்த அளவு நிதியை வைத்துக்கொண்டு உள்ளாட்சிகளால் மக்களின் எந்த எதிர்பார்ப்பையும் ஈடு செய்ய முடியாது.**

■ ■ ■

பாதாளச் சாக்கடைக்கும், கழிவு நீருக்கும் இடையே நடந்த போராட்டத்தில் சாக்கடைகள் வெற்றி பெற்றுவிட்டன. சாலைகளில், தெருக்களில் மட்டுமின்றி, வீடுகளிலும் சாக்கடை நீர் புகுந்து அனைவருக்கும் சவால்விட்டது. இதில் பரிதாபத்துக்கு உரியவர்கள் சாதாரண மக்களே. எங்குமே வடிகால்கள் இல்லை. சாலைகள் காணாமல் போய்விட்டன. அங்கெல்லாம் மரணக்குழிகளே மக்களுடன் மல்லுக்கு நிற்கின்றன. குடிநீருடன் சாக்கடை கலந்து எல்லா நோய்களும் அழையா விருந்தாளியாக வந்து மக்களை பதம் பார்க்கின்றன. 700வது கோடி குடிமகன் இந்தியாவில் பிறந்துள்ளான் என்று நாம் பெருமையுடன் உரிமை கொண்டாடிக் கொண்டிருக்கும் வேளையில், விதவிதமான நோய்களை உற்பத்திச் செய்யும் கொசுக்களின் உற்பத்தியில் நமது நகரங்களும், கிராமங்களும் சாதனைப் படைத்து, மக்களைச் சோதித்துக் கொண்டிருக்கின்றன. சுகாதாரத் திட்டங்கள் பெரும்பாலும் கைவிடப்பட்டுவிட்டன.

நமது உள்ளாட்சிகளில் இன்று பெரும்பாலும் போதுமான ஊழியர்கள் இல்லை. அரசு அதைப் பற்றி கவலைப்படுவதில்லை. கேட்டால், எல்லாவற்றையும் அவுட் சோர்சிங் செய்ய திட்டமிடுகின்றனர். போகிற போக்கைப் பார்த்தால், அமைச்சர் பெருமக்களைத் தவிர மற்ற அனைத்தும் அவுட் சோர்சிங் என்ற நிலை ஏற்பட்டுவிடலாம். வேலை வாய்ப்புகளை உருவாக்கி மக்கள் நலப் பணிகளை சீராகச் செய்ய ஏற்பாடு செய்ய வேண்டிய தமிழக அரசு, திடீரென மக்கள் நலப்பணியாளர்களை எல்லாம் கூண்டோடு பணி நிக்கம் செய்து புண்ணியம் தேடிக்கொண்டுள்ளது. மாதாமாதம் பல லட்சம் பேருக்குப் பல கோடி ரூபாய் ஊதியம் கொடுப்பதால் ஆட்சியாளர்களுக்கு என்ன லாபம் ?

ஆனால், அவுட் சோர்சிங் என்றால் அதுவும் கமிஷன் தரும் கற்பகத் தருவல்லவா என்றே எண்ணுகின்றனர். இதனால் மிகப்பெரும் பாதிப்புக்கு உள்ளாவது உள்ளாட்சிகளும் தான். அரசு இத்தகைய போக்கைக் கைவிட்டு, உள்ளாட்சிகள் அனைத்திற்கும் போதுமான ஊழியர்களை, குறிப்பாக பொது சுகாதார ஊழியர்களை நியமிக்க வேண்டும் என்றும், நகராட்சிப் பணிகளும், சுகாதாரப் பணிகளும் தொய்வின்றி நடப்பதை உத்தரவாதப்படுத்த வேண்டும் என்றும் மக்கள் எதிர்ப்பார்க்கிறார்கள்.

இன்றைக்கு உள்ளாட்சிகளைக் கடுமையாகப் பாதித்துக் கொண்டிருப்பது நிதிப் பற்றாக்குறையே. குடிநீர் விநியோகம், தெருவிளக்கு பராமரிப்பு, சாலை பராமரிப்பு, பொது சுகாதார மேம்பாடு ஆகியவற்றின் முன்னேற்றம் காண நிதி மிகவும் முக்கியம். ஆளும் கட்சியினரே அதிக எண்ணிக்கையில் வெற்றி பெற்றுள்ள இந்த நிலையிலாவது உள்ளாட்சிகளுக்கு அதிக நிதி வழங்க அரசு முன்வருமா என்பதே அனைவர் முன்னும் இருக்கும் கேள்வி. மாநில நிதிக் கமிஷன்கள் பல அமைத்தும் உள்ளாட்சிகளுக்கு வரி வருவாயில் வெறும் 10 சதவிகிதம் மட்டுமே வழங்கப்படுகிறது. யானைப் பசிக்குச் சோளப் பொரி என்பது போல் இந்த குறைந்த அளவு நிதியை வைத்துக்கொண்டு உள்ளாட்சிகளால் மக்களின் எந்த எதிர்பார்ப்பையும் ஈடு செய்ய முடியாது. வாக்களித்த மக்களுக்கு நியாயம் வழங்க இயலாது.

எனவேதான் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி, அரசின் மொத்த வருவாயில் 30 சதவிகிதம் உள்ளாட்சிகளுக்கு வழங்க வேண்டுமென்று தொடர்ந்து வற்புறுத்தி வருகிறது. அந்த தொகையும் பாரபட்சமின்றி மக்கள் தொகைக்கு ஏற்ப, விருப்பு வெறுப்பிற்கு இடமின்றி அனைத்து உள்ளாட்சிகளுக்கும் வழங்கப்பட வேண்டும். அந்த நிதியைப் பயன்படுத்தி உள்ளாட்சிகள் தங்களுக்குள் திட்டமிட்டு, மக்களின் தேவை அறிந்து உரிய திட்டங்களை நிறைவேற்ற பயன்படுத்திட அனுமதிக்க வேண்டும்.

தற்போது உள்ளாட்சிகளுக்கு சுயமாகச் செயல்படும் அதிகாரங்கள் மறுக்கப்பட்டே வருகின்றது. மாநில சுயாட்சி கோஷமிடும் திராவிடக் கட்சிகளுக்கு, உள்ளாட்சிகளுக்கு அதிகாரம் வழங்குவது என்றால் வேம்பாகக் கசக்கிறது. உள்ளாட்சிகள் அனைத்தும், அரசையும், அதிகாரிகளையும் அனைத்திற்கும் அண்டி நிற்க வேண்டுமென்ற நிலையேத் தொடர்கிறது. இந்த நிலை மாற உள்ளாட்சிகள் உண்மையான சுயசார்பு அமைப்பாக இயங்கும் வகையிலும், சுயமாகச் செயல்படும் வகையிலும் உரிய அதிகாரம் வழங்கப்பட வேண்டுமென்றும் தொடர்ந்து குரல் எழுப்பி வருகிறோம்.
உள்ளாட்சிகளுக்கான தேர்தலில் சமீப காலமாக அதிகமான பணம் செலவழிக்கப்படுகிறது. ஊராட்சி உள்ளிட்ட வார்டு தேர்தலுக்காகக் கூட பல லட்சம் ரூபாய் சில வேட்பாளர்களால் செலவழிக்கப்பட்டுள்ளதாக அறிகிறபோது மலைப்பாக உள்ளது. இந்த நிலை ஒவ்வொரு தேர்தலிலும் வளரக் காரணமே உள்ளாட்சி பொறுப்பையே பணம் கொழிக்கும் தொழிலாக பலர் நினைப்பதுதான். எனவே, தேர்தலில் பணத்தை முதலீடு செய்து ஐந்து ஆண்டுகளில் அதைவிட பல மடங்கு சம்பாதித்துக்கொள்ளலாம் என்ற எண்ணமே அதற்கு அடிப்படை. எனவே, திட்டங்களுக்கான தொகை இப்படி ஒழுகிப் போவதால் திட்டங்கள் முறையாக நடைபெறுவதில்லை. தரமற்ற பணிகளாகவும், சில நேரங்களில் பணிகள் நடக்காமலேயே பணத்தை பங்கு வைத்து எடுக்கும் நிகழ்வுகளும் உண்டு.

இதற்கு தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் மட்டுமின்றி அரசு அதிகாரிகளின் துணையும் உண்டு. எனவே, தான் இத்தகைய ஊழல்களையும் முறைகேடுகளையும் தடுக்க உரிய சட்டப் பாதுகாப்பு வேண்டுமென்று மார்க்சிஸ்ட் கட்சி கோருகிறது. மாவட்ட நீதிபதி தலையிலான ஊழல் தடுப்பு ஆணையம் அல்லது ஆம்பட்ஸ்மேன் அமைப்பு ஊழல் நடக்காமல் கண்காணிக்கவும், ஊழல் நடைபெற்றால் விசாரணை நடத்தி மக்கள் பிரதிநிதிகளானாலும், அரசு அதிகாரிகளானாலும் அவர்கள் தவறு செய்தவர்கள் என்று நிரூபிக்கப்பட்டால் தண்டனை வழங்கும் அதிகார அமைப்பாக அது அமைய வேண்டுமென்றும் கோருகிறோம். உண்மையில் உள்ளாட்சியில் நல்லாட்சி அமைய இந்த யோசனைகளை அரசு பரிசீலிக்குமா, அதற்கான சட்டப்படியான நடவடிக்கைகள் எடுக்க முன்வருமா ? என்பதே நம் முன்னால் இருக்கும் கேள்வி.

**ஆதாரம்:** தீக்கதிர்

# தலித்களுக்குள் தலித்!
# தலித் பெண்களின் வாழ்க்கைச் சூழல்

தாழ்த்தப்பட்ட இன மக்களுக்கான இட ஒதுக்கீட்டை வழங்கியுள்ள 73வது அரசியல் சாசன சட்டத்திருத்தம், அதில் மூன்றிலொரு பங்கு தலித் பெண்களுக்கு அளிக்கப்பட வேண்டுமென்பதைக் கட்டாயமாக்கியிருக்கிறது. இச்சட்டத்திருத்தத்தை உறுதி செய்யும் விதத்தில் மாநில அரசுகளால் இயற்றப்பட்டுள்ள சட்டங்களும் கூட தலித் பெண்களுக்கான மூன்றிலொரு பங்கு இடஒதுக்கீட்டை வலியுறுத்தியுள்ளன. இப்போது நடைமுறையில் உள்ள இடஒதுக்கீடு தொடர்பாக வெளிவந்துள்ள பல்வேறு ஆய்வுகளின் முடிவுகள், இட ஒதுக்கீட்டால் விளைந்த பயன் குறித்து முரண்பட்ட தகவல்களைக் கொண்டுள்ளன. எந்த மாநிலங்களில் பெண்களின் கல்விநிலை, சமூக நிலை, வேலை நிலை ஆகியவை உயர் மட்டத்தில் உள்ளனவோ அந்த மாநிலத்தில் உள்ள பெண்கள் இந்த இடஒதுக்கீட்டைத் தங்களின் முன்னேற்றத்திற்கான படிக்கல்லாகப் பயன்படுத்திக்கொள்கிறார்கள். சிற்சில இடங்களில் பெண்கள் தாங்கள் முடிவெடுக்க வேண்டிய பொருளின் தன்மைக்கு ஏற்றவாறும், அதற்காக அவர்கள் முன் வைக்கப்படுகிற வழிமுறைகளாலும் மாறுபட்ட சூழல் ஏற்பட்டுள்ளது.

■ ■ ■

**சில மாநிலங்களில், கீழ்நிலையிலுள்ள வகுப்பினருக்கு அளிக்கப்படும் இடஒதுக்கீட்டை அரை குறையாக அனுமதிப்பது அல்லது அடியோடு மறுப்பது என்ற நிலையில் உயர் வகுப்பினர் உள்ளனர். இதன் விளைவாக பெண்கள் உள்ளிட்ட உள்ளாட்சி உறுப்பினர்கள் வன்முறைத் தாக்குதலுக்கு ஆளாக்கப்படுகின்றனர்.**

■ ■ ■

அதிகாரத்தின் பொருள் என்பதே, குடிநீர் பிரச்சனை, கழிவறைகள் கட்டுதல், கிராமச்சாலைகள் மற்றும் கிணறுகள் அமைத்தல், பள்ளிகளில் ஆசிரியர் நியமனம், சாராயக்கடைகளை ஒழித்தல் ஆகியவை போன்ற பிரச்சனைகளுக்கு முன்னுரிமை அடிப்படையில் தீர்வு காண்பதுதான். இதற்கான எடுத்துக்காட்டுகள் நம் கண் முன்பாகவே உள்ளன. மகாராஷ்டிர மாநிலம், ஜல்காவோ மாவட்டத்தின் விட்னர் கிராமப் பெண்கள் தமது குழந்தைகள் விளையாடுவதற்கென விளையாட்டுத்திடல் ஒன்றையே புதிதாக உருவாக்கியுள்ளனர்.

127 பெண்கள் தம் கணவருக்குப் பூர்வீகச் சொத்தில் பங்காகக் கிட்டிய நிலங்களைத் தமது பெயருக்கு மாற்றம் செய்து தாழ்த்தப்பட்டோர் வசிக்கும் குடியிருப்புப் பகுதிகளில் கழிப்பறைகளைக் கட்டியுள்ளனர். மத்திய பிரதேசத்தின் பித்காரா கிராமப் பெண்களோ இன்னும் ஒருபடி மேலே சென்று 27 அம்சத் திட்டம் ஒன்றை வகுத்து அதன் அடிப்படையில் கல்வி மற்றும் சமூக உட்கட்டமைப்புப் பயன்பாட்டுக்கான கட்டிடக் கட்டுமானம் மற்றும் இதர பணிகளைத் துவக்கியுள்ளனர். புனேவிற்கு அருகாமையில் உள்ள பிரம்மாங்கர் கிராமத்தின் 7 உறுப்பினர் கொண்ட ஊராட்சியின் அனுபவம் மற்றும் செயல்திட்டமும் மேற்கண்டவற்றை ஒத்தே உள்ளன. சில மாநிலங்களில் தலித் பெண்கள் தமது நிலையை வலுப்படுத்திக்கொள்ள இட ஒதுக்கீடு உதவியாகவே உள்ளது.

நமது நாட்டின் மற்ற பகுதிகளில், எங்கெல்லாம் குடும்பம் மற்றும் சமுதாயத்தில் பெண்களின் நிலை தலை–முறைகளாகத் தொடர்ந்து தாழ்வாக உள்ளதோ, பொது நிகழ்ச்சிகளில் பெண்களில் பங்கேற்பு என்பது சொல்லிக்கொள்ளும் படியாக இல்லையோ அங்கு, எடுத்துக்காட்டாக, வடக்குச் சமவெளிப் பகுதிகளில் தலித் பெண்களின் இடஒதுக்கீட்டால் எந்தவொரு பெரிய மாற்றமும் ஏற்பட்டுவிடவில்லை. இட ஒதுக்கீட்டினால் ஏற்பட்ட மாற்றம் ஆமை வேகத்தில் என்றே சொல்லலாம். இட ஒதுக்கீடு ஒன்றினால் மட்டுமே பெண்கள் தம் நிலையில் முன்னேற்றம் காணவும், உள்ளாட்சி அமைப்புகளில் அவர்கள் ஊக்கத்துடன் பங்கேற்கவும் செய்துவிட முடியாது எனும் கருத்தை ஒத்து ஆய்வறிக்கை முன் வைக்கிறது.

பெண்கள் என்ற முறையில் போதிய அனுபவம் இல்லாத நிலையில் பொது வாழ்வு அல்லது நிகழ்வுகள் ஆகியவற்றில் பெண்கள் செயலூக்க மிக்க முறையில் பங்கேற்பது கடினம். இன்னும் சொல்வதானால் சுதந்திரமான முறையில் வாக்களிப்பதே பெண்களால் இயலாத நிலையில் பொது வாழ்வில் சிறப்பாகச் செயல்படுவது மிகக் கடினம். ஆய்வு நடவடிக்கைகளில் சுட்டிக்காட்டப்படும் பெண் தலைவர்கள் யாவருமே, தமது

வீட்டிலுள்ள (உண்மையான அதிகாரத்தைத் தன் வசம் வைத்துள்ள) ஆண்களின் பெயரளவுப் பிரதிநிதிகளேயாவர்.

சில மாநிலங்களில், கீழ்நிலையிலுள்ள வகுப்பினருக்கு அளிக்கப்படும் இடஒதுக்கீட்டை அரை குறையாக அனுமதிப்பது அல்லது அடியோடு மறுப்பது என்ற நிலையில் உயர் வகுப்பினர் உள்ளனர். இதன் விளைவாக பெண்கள் உள்ளிட்ட உள்ளாட்சி உறுப்பினர்கள் வன்முறைத் தாக்குதலுக்கு ஆளாக்கப்படுகின்றனர். மத்தியப் பிரதேச மாநிலத்தின் நான்கு நிகழ்வு தொடர்பான ஆய்வு முடிவுகள் இம்மாநிலத்தின் அதிகாரவர்க்கத்தின் அடக்குமுறைப் போக்கு இன்னும் முடிவுக்கு வரவில்லை என்பதை வெளியுலகுக்கு உணர்த்துகின்றன. தேர்தல் நடத்தப்பட்டே ஆக வேண்டுமென உறுதியாக நின்ற தலித் பெண்கள் உயர்சாதியினரால் கடுமையாகத் தாக்கப்பட்டனர், கற்பழிக்கப்பட்டனர் அத்தோடு நில்லாமல் மிக இழிவான முறையில் சித்திரவதை செய்யப்பட்டனர். தலித் குடும்பங்களுக்குச் சொந்தமான நிலங்கள் உயர் வகுப்பினரால் அபகரிக்கப்பட்டன. ஏனெனில், இதுகாணும் உயர்சாதியினர் தங்கள் வசம் வைத்திருந்த அதிகாரத்தை கீழ் சாதியினருக்கு ஒப்படைக்கத் தயாராக இல்லை.

ஆதிக்க சக்திகள் தமது அதிகாரத்தைத் தம்மிடமே தொடர்ந்து தக்கவைத்துக்கொள்ள எளிய வழிமுறையொன்று உள்ளது. அது போலி வேட்பாளர்களை நிறுத்துவது, அதாவது எப்போதும் தம் சொல்லுக்குக் கட்டுப்படுகிற, அடிமை போன்ற ஒருவரை வேட்பாளராக நிறுத்தி வெற்றி பெறச் செய்வது. ஆனால், அதிகாரமனைத்தையும் ஆதிக்க சாதியினரான தம்மிடமே அதிலும் குறிப்பாக ஆண்களிடமே வைத்துக்கொள்வது.

பெண்கள் குறிப்பாக தலித் பெண்கள் தமக்கான உரிமைகளைக் கையகப்படுத்திக் கொள்ள இயலாத சூழலே உள்ளது. இதுவே எல்லாப் பிரச்சனைகளுக்கு மூலவேராகும். தாழ்த்தப்பட்டோருக்கான குறிப்பாக தலித் பெண்களுக்கான இடஒதுக்கீடு, உருவக அளவில் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. ஆனால், உறுதியாக அமலாக்கப்படுவது அரிதான ஒன்றாக இருக்கிறது என ஆய்வு கூறுகிறது. இப்போதுள்ள அதிகாரவர்க்க அமைப்பில் அதாவது ஆதிக்க சக்திகளின் அதிகாரத்தில் மிகச்சிறிய மாற்றம் கொண்டுவர வேண்டுமென்றாலும் கடுமையான எதிர்ப்பு எழுகிறது. சில சமயங்களில் வன்முறை வடிவத்திலும் கூட அது வெளிப்படுகிறது (மேத்யூ மற்றும் நாயக் 1996). போதுமான அளவுக்கு சமூக ஆதரவு அமைப்புகளின் துணையின்றி அரசு இப்பிரச்சனையில் எவ்வாறு தலையிடுவது என்பதும், எந்த எல்லைவரை அது செயல்பட முடியும் என்பதும் கேள்விக்குறி, இதேபோன்ற சம்பவங்கள் தமிழ்நாடு, ராஜஸ்தான் மற்றும் பீகாரில் நடைபெற்றதாகத் தகவல்கள் கூறுகின்றன (மேத்யூ 2004) நாயக் 1996)

■ ■ ■

**தாழ்த்தப்பட்ட மக்களினப் பெண்தலைவர்கள் சந்திக்கும் முக்கியமானதொரு தடைக்கல் தமக்கெதிராக ஆதிக்க சக்திகளால் கொண்டுவரப்படும் நம்பிக்கையில்லாத் தீர்மானம் ஆகும்.**

■ ■ ■

தலித் பெண்கள் போதிய கல்வியறிவின்மை, தகவல்கள் கிடைக்கப் பெறலாம் மற்றும் தங்கள் குடும்பத்திலுள்ள ஆண்களைச் சார்ந்தே செயல்பட வேண்டிய சூழ்நிலை ஆகியவை காரணமாக உள்ளாட்சி அமைப்புகளில் தங்களது கடமையை நிறைவேற்றுவதில் ஏராளமான இடர்பாடுகளைச் சந்திக்கின்றனர். தாழ்த்தப்பட்ட மக்களினப் பெண்தலைவர்கள் சந்திக்கும் முக்கியமானதொரு தடைக்கல் தமக்கெதிராக ஆதிக்க சக்திகளால் கொண்டுவரப்படும் நம்பிக்கையில்லாத் தீர்மானம் ஆகும். இந்த ஆதிக்க சக்திகள் தம்மிடம் இதுவரை இருந்து வந்த அதிகாரம் அனைத்தும் ஒரு ஏழைக் குடும்பத்தைச் சேர்ந்தவரிடம் அதுவும் ஒரு பெண்ணிடம் சென்று குவிந்துள்ளதை நெடுங்காலம் பொறுத்துக்கொள்ள இயலுவதில்லை.

### மக்கள் மன்றங்களில் சமூக உள்ளடக்கம் – தலித்துகள்

மக்களாட்சிப் பரவல் முறையின் விளைவாக ஏற்பட்டுள்ள மிகச் சிறப்பான மாற்றங்களில் ஒன்று சிற்றூராட்சிகளின் தலைவர்களாக தாழ்த்தப்பட்ட மக்களினப் பிரதிநிதிகள் தோன்றியிருப்பது. நமது சிற்றூர்களில் முடிவெடுக்கும் அதிகாரம் கொண்ட பாரம்பரியமான சாதீயப் பஞ்சாயத்துகள் முடிவெடுப்பதில் தாழ்த்தப்பட்டோரையும் இணைத்துக் கொள்ள இதுவரை மறுதலித்து வந்துள்ளன. நமது ஊரகப் பகுதிகளின் சமூக அரசியல் வாழ்வு என்பது பெரும்பாலும் ஆதிக்க சாதிகளின் கையில் இருந்த நிலையில், தாழ்த்தப்பட்டோர் இதுவரை எதிர்ப்புக் குரலெழுப்பவியலாத, கையறு நிலையிலுள்ள பார்வையாளர்களாகவே இருந்து வந்துள்ளனர்.

நமது நாட்டின் மரபார்ந்த மக்களாட்சி நடைமுறை நீண்ட காலமாக அமலாக்கப்பட்டு வருகிற காரணத்தாலும், தாழ்த்தப்பட்டோருக்கான இடஒதுக்கீடு என்ற புரட்சிகரமான செயல்முறை காரணமாகவும் நமது ஊரக

இந்தியாவின் சமூக அரசியலில் தலைகீழ் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. ஆயினும், இதில் கவனிக்கப்பட வேண்டிய ஆழமான பிரச்சனை என்னவெனில், தாழ்த்தப்பட்டோருக்கான தொகுதிகளில் வெற்றி பெற்று வரும் தாழ்த்தப்பட்டோரினப் பிரதிநிதிகளில் பெரும்பாலோர் எழுத்தறிவின்மை காரணமாக தமது உறவினராலோ அல்லது ஆதிக்க சக்திகளாலோ, ஆதிக்கம் செய்யப்படும் நிலையில் உள்ளனர். இத்தகைய நிலையில் இடஒதுக்கீடு என்பதன் முக்கியமான நோக்கம் தொடர்ந்து சிதைக்கப்பட்டு வருகிறது.

பஞ்சாயத்து அமைப்புகளில் இருவகையான மிகப்பெரும் பாகுபாடுகள் நிலவுகின்றன. இதில் முதலாவது, தாழ்த்தப்பட்டோர், பஞ்சாயத்து நடவடிக்கைகள் வளர்ச்சி நடவடிக்கைகள், திட்டங்கள் போன்ற அனைத்திலிருந்தும் விலக்கப்பட்டு வருகின்றனர். தேர்தலில் போட்டியிட்டு வென்ற தாழ்த்தப்பட்டோரினப் பிரதிநிதிகளின் தேர்தல் வெற்றி செல்லாது என அறிவிக்கப்பட்டு குறிப்பிட்ட கால இடைவெளிக்குப்பின் அவரது இடம் வெற்றிடமாக்கப்பட்டுவிடுகிறது. இரண்டாவது ஒன்றிய அளவில் அல்லது மாவட்ட அளவில் வெற்றி பெற்று வருகிற தலித் பிரதிநிதிகள் மீது எவ்வளவு விரைவாக இயலுமோ அவ்வளவு விரைவாக நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவரப்பட்டு பொறுப்பிலிருந்து விலக்கப்பட்டுவிடுகிறார்கள். இத்தகைய நடைமுறை தாழ்த்தப்பட்டோரினப் பிரதிநிதிகள் தேர்தல் காலங்களில் தமக்குரிய உரிமையைப் பயன்படுத்தி உள்ளாட்சி அமைப்புகளில் பொறுப்புக்கு வருவதற்கு பெரும் தடைக்கல்லாயிருக்கிறது.

சாதீய சக்திகளுடன் சமரசம் செய்து கொள்வதோ அல்லது ஊழல் அரசியலுக்கு அடிபணிந்துபோவதோ இவற்றில் ஏதாவது ஒன்றை கைகொள்ளும் தலித் பிரதிநிதிகள் மட்டுமே வீழ்ச்சியிலிருந்து தப்பிப் பிழைக்க வாய்ப்பு உண்டு. அரசியல் சாசனத்தின் 73வது சட்டத்திருத்தம் ஒடுக்கப்பட்ட மக்களை சமூகத்துடன் ஒன்றிணைக்கத்–தக்க வல்லமை மிக்க கருவியாகக் கருதப்படுகிறது. இச்சட்டத்திருத்தத்தை முறையாக அமல்படுத்துவது மட்டுமே இதுவரை ஊரக சமூகத்தில் புறக்கணிக்கப்பட்ட மக்களுக்கு நீதி வழங்குவதாக அமையும்.

**முடிவுரை:**

இந்திய சமூகத்தின் சமூக மாற்றத்திற்கான வல்லமைமிக்க ஆற்றலை வெளிப்படுத்தும் வலிமை மிக்க ஆயுதமாக 73வது சட்டத்திருத்தம் தோன்றியுள்ளது. மக்களாட்சி மன்றங்கள் குறித்த இந்தச் சட்டத் திருத்தத்திற்குப் பிந்தைய காலகட்டத்தில் தேச முன்னேற்றத்திற்கான புதிய சாத்தியப்பாடுகளை உறுதிப்படுத்துவதற்கு, ஆட்சி அமைப்பின் அஸ்திவாரமாக உள்ள ஊராட்சி அமைப்புகள் மிக வலிமையாக இருக்க வேண்டியது அவசியமாகும். தலித்துகள் மற்றும் இதர நலிந்த பகுதியினருக்கான இடஒதுக்கீடு அளிக்கப்பட்டு அதன்மூலம் அவர்களை சமூகத்தின் சமபங்காளிகளாக வளர்த்தெடுப்பதற்கு இந்தச் சட்டத்திருத்தம் பெருமளவு உதவியுள்ளது.

ஆயினும் இடஒதுக்கீடு ஒன்றினால் மட்டுமே இம்மக்களாட்சி முறையை முழுமையாக நிறைவு செய்ய இயலாது. கல்வி மற்றும் வேலைவாய்ப்பு ஆகியவற்றில் அரசு ஆற்றும் பணிகள் தலித்துகள் தங்கள் தகுதி மற்றும் விழிப்புணர்வு ஆகியவற்றை வளர்த்துக்கொள்ள உதவிட இயலும். சிவில் சமூகம் மற்றும் அரசியல் கட்சிகள் இவற்றின் துணை கொண்டு அரசியல் இயக்கங்களிலும் அவர்கள் ஒளிவீசுவார்கள். இந்திய சமூகத்தில் ஆயிரமாயிரம் ஆண்டுகளாய்த் தொடரும் அடக்குமுறை, மனித நேயமின்மை, பழமையின் பால் மாறாத பற்று ஆகியவற்றின் வரலாறு, சிற்றூர் அளவில் செயல்படுகின்ற, மக்கள் தங்களைத் தாங்களே சுயமாக ஆளுகின்ற சிற்றூராட்சி அமைப்புகளை செயலக்கத்துடன் தொடர்ச்சியாகச் செயல்பட வைப்பதன்மூலம் இந்திய சமூகத்தில் ஆயிரமாயிரம் ஆண்டுகளாய்த் தொடர்ந்து நிலவி வரும் சாதீய அடக்குமுறை, மனித நேயமின்மை, மாற்றத்திற்கு எதிராக நிற்பது ஆகியவை எதிர்கால இந்திய வரலாற்றின் பக்கங்களில் கடந்தகாலத் தீமைகளாக முடித்து வைக்கப்பட்டுவிடும்.

ஆதாரம்: ***SOCIAL ACTION VOL 62 JANUARY – MARCH 2012***

## நூறு நாள் வேலை புதிய நடைமுறை அமல்

கிராமப்புற வேலை வாய்ப்புத் திட்டம், புத்தாண்டு முதல், இரண்டு பிரிவாக பணி மேற்கொள்ள அரசு முடிவு செய்துள்ளது. இதை யொட்டி அனைத்து வார்டுகளிலும் உள்ள மக்கள், அவர்கள் விரும்பிய நாட்களில் எப்போது வேண்டுமானாலும் வேலை செய்யலாம் என்ற நடைமுறையை கொண்டு வர உள்ளது.

இதற்காக, 500 தொழிலாளர்கள் உள்ள கிராமத்தில், இரண்டு பிரிவாகப் பிரித்து, ஒவ்வொரு பிரிவிற்கும், பணித்தபொறுப்பாளர் நியமிக்கப்பட்டு வேலை செய்ய உள்ளனர். பரிசோதனை அடிப்படையில், கடலூர் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள பெரிய கிராமங்களான, ராமாபுரம், நடுவீரப்பட்டு உள்ளிட்ட ஐந்து கிராமங்களில், இத்திட்டம் முதலில் செயல்படுத்தப்பட உள்ளது. வரும் புத்தாண்டு முதல் அனைத்து கிராமங்களிலும், இந்த புதிய நடைமுறை செயல்பாட்டிற்கு வரவுள்ளது.

**ஆதாரம்:** தினமலர் (27.12.2011)

# இருந்த வீடும் போச்சு

## கலைஞர் வீடு கட்டும் திட்டப் பயனாளிகள் கண்ணீர்

–கே. ஹென்றி

கலைஞர் வீடு கட்டும் திட்டத்தில் கடன் வாங்கி வீட்டை கட்டிய ஏழைப் பயனாளிகள், தவணைத் தொகை கிடைக்காமல் கடனில் மூழ்கி அவதிக்குள்ளாகி உள்ளனர். தமிழகத்தில் முந்தைய திமுக ஆட்சி கான்கிரீட் வீடுகள் கட்டும் திட்டத்தை அறிமுகப்படுத்தியது. ரூ.75 ஆயிரம் மதிப்பில் கட்டப்பட்ட இந்த வீடுகளைப் போல் வேலூர் மாவட்டத்திலும் 99,059 குடிசைகள் தகுதியானவையாக தேர்வு செய்யப்பட்டது. இத்திட்டத்திற்கு ரூ.75 ஆயிரம் போதாது அதை ரூ.1 லட்சமாக உயர்த்த வேண்டும் என மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி கோரிக்கை வைத்தன.

இதற்கிடையில், நடந்த சட்டமன்ற தேர்தலில் ஆட்சிமாற்றம் ஏற்பட்டது. அதன் பிறகு கலைஞர் வீட்டு வசதித் திட்டத்தில் வீடு கட்ட அரசு நிதி ஒதுக்கவில்லை. பசுமை வீடுகள் அமைத்து அதில் சூரிய சக்தி மின் விளக்கு அமைக்கப்படும் என அதிமுக அரசு அறிவித்த திட்டம் செயல் வடிவில் உள்ளது. இவைகள் ஒருபுறம் இருக்க, தமிழகம் முழுவதும் கடந்த திமுக ஆட்சியில் 12,620 ஊராட்சிகளில் 21 லட்சம் குடிசை வீடுகளை கான்கிரீட் வீடுகளாகக் கட்ட முடிவு செய்தது. 2011–11ஆம் ஆண்டில் 3 லட்சம் வீடுகள் கட்ட நிதி ஒதுக்கீடு செய்து, ரூ.75 ஆயிரம் மானியம் என அறிவித்தது. இவ்வீடுகளை உள்ளாட்சி மூலம், பொதுப்பணித்துறையினரால் கட்டி முடித்திருக்கலாம். ஆனால், பயனாளிகளே வீடுகட்டி கொள்ளலாம் என கூறி அரசு சிமெண்ட் வழங்கியது. இதனால், ஏழைகள் கடன் வாங்கி பேஸ் மட்டம் போட்டது முதல் முடிக்கும் வரை தவணை முறையில் மானியத்தொகை வழங்கப்பட்டது. கட்டுமான பொருள்களின் விலை ஏற்றத்தால் ஏழைகள் வீடு கட்டி முடிக்க முடியாமல் மிகவும் அவதிப்பட்டனர்.

இந்நிலையில் தேர்தல் நெருங்கவே தேர்வு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு டோக்கன் வழங்கப்பட்டது. அதை வைத்து கொண்டு வேதனையோடு நிற்கின்றனர். வேலூர் மாவட்டத்தில் முதல் கட்டமாக 15,679 கான்கிரீட் வீடுகள் கட்ட நிதி ஒதுக்கப்பட்டது. இதில் 1,230 வீடுகள் கட்டப்பட்டு பயனாளிகளுக்கு வீடுகள் வழங்கப்பட்டது. தேர்வு செய்யப்பட்ட 99059 பயனாளிகளில், மீதமுள்ளவர்களுக்கு மீண்டும் ஆட்சிக்கு வந்தால் வீடு கட்டி தருவோம் என கூறி டோக்கன் மட்டும் வழங்கினர். இத்திட்டத்திற்கு நிதி முழுமையாக ஒதுக்கிய பிறகும், நிதி வந்து சேராததால், வீடுகளை முழுமையாக கட்டி முடிக்காமல் கண்ணீர் கடனில் மூழ்கி உள்ளனர். குறிப்பாக, ஆற்காடு ஒன்றியத்தில் தாஜ்புரா ஊராட்சியில் உள்ள கன்னிக்கோயில் மற்றும் அருந்ததி பாளையத்தில் முதற்கட்டமாக 2010ல் 20 வீடுகளும், இரண்டாம் கட்டமாக 2011ல் 20 வீடுகளும் ஒதுக்கப்பட்டது.

இதில் முதல்கட்டமாக ஒதுக்கீடு செய்யப்பட்ட வீடுகளில் 7 வீடுகள் முடிக்கப்பட்டுள்ளது. அவர்களுக்கு தவணை தொகை வழங்கப்படவில்லை. இரண்டாம் கட்டமாக ஒதுக்கீடு செய்யப்பட்ட வீடுகளில் சில வீடுகளுக்கு முதல் தவணையும் சில வீடுகளுக்கு இரண்டாம் தவணையுமாக பணம் கொடுக்கப்பட்டது. அனைத்து ஆவணங்களும் அதிகாரிகளிடம் கொடுக்கப்பட்டது. வீடுகட்டப்பட்டு, 5வது கடைசி தவணை தொகைக்கான ரசீதையும் ஊராட்சி நிர்வாகம் அளித்துள்ளன. ஆனால், அத்தொகையை ஊராட்சி நிர்வாகம் இதுவரை கொடுக்கவில்லை என வேதனையோடு கூறுகிறார் கன்னியப்பன்.

இரண்டாம் கட்டமாக வீடுகள் ஒதுக்கப்பட்ட பயனாளிகளில் ஒருவரான மல்லிகா கூறும்போது; கடன் வாங்கி பேஸ் மட்டம் போட்டேன். ஆனால், எங்களுக்கு இதுவரை பணம் ஒதுக்கவில்லை. 12 மூட்டை சிமெண்ட் மட்டுமே கொடுத்துள்ளனர் என்றார். இதேபோன்று அருந்ததிபாளையத்தைச் சேர்ந்த ஜெயவேலு, “கடன் வாங்கி வீடு கட்டியுள்ளேன். கடன் கொடுத்தவர்கள் தினமும் வந்து நச்சரிக்கிறார்கள். இதே நிலை நீடித்தால் தற்கொலை செய்வதைத் தவிர வேறு வழி இல்லை” என்று வேதனையோடு கூறினார். கன்னிக்கோயில் தெருவைச் சேர்ந்த குப்பாய் (60) “வீடுகட்டி கொடுப்பதாக கூறி இருந்த குடிசை வீட்டையும் இடித்துவிட்டு, மின் இணைப்பையும் துண்டித்து விட்டு தற்போது நான் நடுத்தெருவில் அனாதையாக நிற்கும் அவலை நிலையில் உள்ளேன்” என கண்ணீரோடு கூறினார்.

இதுகுறித்து வட்டார வளர்ச்சி அலுவலக அதிகாரிகளிடம் கேட்டபோது, பணி முடிந்துள்ள வீடுகள் குறித்து அரசுக்கு தகவல் அனுப்பப்பட்டுள்ளது. நிதி ஒதுக்கீடு செய்தவுடன் உரியவர்களுக்கு பணம் அளிக்கப்படும் என்றார். இதேபோன்ற நிலை ஆற்காடு ஒன்றியம் மட்டுமல்ல மாவட்டத்தின் பல்வேறு ஊராட்சிகளிலும் உள்ளது. அரசு நிதி ஒதுக்கப்பட்டு, கட்டப்பட்ட வீடுகளுக்கு தவணைத் தொகை வழங்கி ஏழைகளின் கண்ணீரைத் துடைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதே பாதிக்கப்பட்டவர்களின் வேதனை குரல்.

**ஆதாரம்:** தீக்கதிர் – 8.12.2011

## ஓட்டுக்குப் பணம் என்பது ஜனநாயகத்தின் குரல்வளையை முறிக்கும் செயல் என்பதோடு கிரிமினல்கள் தொடர்ந்து அரசியலில் செல்வாக்கு செலுத்த உதவும் ஓர் வாய்ப்பு என்பதையும் கவனத்தில் வைப்போம்.

தமிழகத்தில் உள்ளாட்சித் தேர்தல் நடந்து முடிந்து தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் பதவிப்பிரமாணமும் எடுத்துக்கொண்டுவிட்டனர்.

ஐந்து ஆண்டுகளுக்கு ஒருமுறை வரும் தேர்தல் திருவிழாவாக இது நடந்து முடிந்துள்ளது. பஞ்சாயத்து ராஜ் சட்டம் அமலுக்கு வந்து 20 ஆண்டுகள் ஆகிவிட்டன. ஐந்து ஆண்டுகளுக்கு ஒருமுறை தேர்தல் நடைபெற வேண்டும் என்ற இச்சட்டத்தின் காரணமாக இத்தேர்தல் நடைபெற்றுள்ளது. இதன் உண்மையான நோக்கம் என்பது கிராம அளவில் அதிகாரம் பகிர்ந்தளிக்கப்பட்டு மக்களின் அடிப்படைத் தேவைகள் உடனுக்குடன் செய்து கொடுக்கப்பட வேண்டும் என்பதுதான். ஆனால், கடந்தகால அனுபவம் என்னவென்றால், இருக்கக்கூடிய குறைந்தபட்ச அதிகாரமும் குறைந்த நிதி ஒதுக்கீடும் தவறான வழியில் பயன்படுத்தப்பட்டு வந்துள்ளன என்பதுதான். குறைந்தபட்ச அதிகாரம் மற்றும் நிதியுள்ள உள்ளாட்சி அமைப்புக்களுக்கு தேர்தல் என்றாலும் பிரதான கட்சிகள் வரிந்து கட்டிக்கொண்டு தனது கட்சி ஊழியர்களை களத்தில் நிறுத்துகின்றன. சட்டமன்றத் தேர்தலில், நாடாளுமன்றத் தேர்தலில் வாய்ப்புக் கிடைக்காதவர்கள் இதில் இணைத்துக் கொள்ளப்படுகின்றனர். முதலாளித்துவ அரசியல் கட்சிகளைப் பொறுத்தமட்டில் இது கிராம அளவில் செல்வாக்கும் முதலீட்டில்லா பணம் காய்ச்சி மரம். உள்ளாட்சி அமைப்புகள் மூலம் கட்சியில் உள்ள அனைவரும் சம அளவில் வருவாய் பெற ஏற்படுத்தப்படும் ஏற்பாடு.

மாநில அரசு இப்படியான தேர்தலை தனக்கு சாதகமான ஒருவரை வைத்து நடத்தி முடிக்க விரும்புகின்றது. அதன்படி தற்பொழுது மாநில தேர்தல் ஆணையராக ஓய்வு பெற்ற அதிகாரி நியமனத்திலிருந்து இத்தேர்தல் நடைமுறை ஆரம்பமானது என்பதும் அது மத்திய தேர்தல் ஆணையத்திற்கு கட்டுப்பட்டதல்ல என்பதும் இங்கு கவனிக்க வேண்டியதாகும். ஆட்சியாளர்களின் நேரடிக்கட்டுப்பாட்டில் இத்தேர்தல் நடந்தது என்றால் மிகையல்ல. ஆகையால் தேர்தல் எப்படி நடந்து முடிந்திருக்கும் என்று சொல்ல வேண்டியதில்லை. ஆளும் கட்சி என்ன விரும்புகிறதோ அதை அப்படியே செய்து முடித்த பெருமையும் கடந்த முறை உள்ளாட்சித் தேர்தலில் நடந்த அத்துமீறல்களைவிட இம்முறை குறைவான அளவிலேயே நடந்து முடிந்துள்ளது என்று தனக்குத்தானே பாராட்டும் அளவுக்கு தேர்தல் ஆணையப்பணிகள் இருந்தன.

தேர்தல் வன்முறைகளில் ஒருவர் கூட இறக்கவில்லை என்று ஏன் சொல்லாமல்விட்டார் என்று தெரியவில்லை. ஆளும்கட்சி வேட்பாளர்களை தேர்வு செய்து அறிவித்த பின், தேர்தல் நடைமுறைகளை வெளியிட்டும் தேர்தல் பணிகளில் பெரும்பாதி முடிந்தபின் அனைத்துக்கட்சிக் கூட்டத்தைக் கூட்டி தேர்தலை சிறப்பாகவும் அசம்பாவிதம் ஏதுமின்றியும் நடத்துவதற்கு திட்டமிட்டதிலிருந்து ஆளும் கட்சிக்கு எவ்வாறு சாதகமாக இருந்தது என்பதும் தேர்தல் விதிமுறைகள் எவ்வாறெல்லாம் மீறப்பட்டன என்பது நமக்குத்தெரியும்.

நீதிமன்றம் தலையிட்டு வாக்கு எண்ணிக்கையை வெப்கேமிரா கொண்டு கண்காணிக்க உத்தரவிட்ட பிறகே அதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. ஆனால், அதற்கு முன்பே தேர்தல் தள்ளு முள்ளுகள் எல்லாம் நடந்து முடிந்துவிட்டன. சட்டமன்ற தேர்தல் போல், தேர்தல் அறிவிக்கப்பட்டது முதல் தேர்தல் நடைமுறைகள் கண்காணிப்போ பண விநியோகத்தைத் தடுக்க குழுக்களோ அமைக்கப்படவில்லை. இது திருமங்கலம் பார்முலா தங்குதடையின்றி நடக்க மிக மிக வசதியாக இருந்தது. வாக்காளர்களை வாகனங்களில் கூட்டி வருவதும் அவர்களுக்கு பதில் கூட்டி வந்தவர்களே ஓட்டுப்போட்டதும் நடந்துள்ளது. காவல் ஆய்வாளர்கள், தேர்தல் பார்வையாளர்கள் ஆகிய எவரிடம் புகார் அளித்தாலும் நடவடிக்கையில்லை.

நடந்து முடிந்துள்ள உள்ளாட்சித் தேர்தல், மத்திய தேர்தல் ஆணையத்தின் கட்டுப்பாட்டிற்குள்தான் இருக்க வேண்டும் என்பதையும் அதன் ஆணையர் ஓய்வுபெற்ற ஒருவராக இல்லாமல் பதவியில் உள்ள, மத்திய தேர்தல் ஆணையம் தேர்வு செய்யும் ஒருவராக அவர் இருப்பதுவே சிறந்த நடைமுறை என்பதை உணர்த்தியுள்ளது.

ஜனநாயகத்தின் ஆரம்பக் கட்ட மக்கள் பிரதிநிதிகளைத்

தேர்வு செய்யும் ஓர் அமைப்பு என்பதால் இத்தேர்தலில் நேர்மையை விரும்பும் அனைத்து ஜனநாயக சக்திகளும் இதற்கு முயற்சிக்க வேண்டும். மேலும் தனி மனிதனுக்கு ஓட்டு என்பதைவிட கட்சிக்கு ஓட்டு என்ற விகிதாச்சார தேர்தல் முறையைக் கொண்டு வருவதன் மூலம்தான் ஓட்டுக்குப் பணம் கொடுப்பதை தடுக்க முடியும்.

அடுத்து “உள்ளாட்சியில் நல்லாட்சி” என்ற கோஷம் அனைவராலும் உச்சரிக்கப்பட்டது. உள்ளாட்சிக்கு அரசியல் தேவையில்லை. நல்லவர்கள் தான் வரவேண்டும் என்ற கருத்து உள்ளது. ஆனால், நடைமுறையில் செலவு செய்து ஜெயிக்கும் நபராக, சாதி, மதம் போன்றவற்றிற்கு உட்பட்டு வேட்பாளர்கள் தேர்வு செய்யப்படுகின்றனர். சட்டமன்ற, நாடாளுமன்ற தேர்தலில் சீட்டுக்குப் பணம் வாங்குவது போல் பல லட்சம் வரை பெற்றுக்கொண்டே உள்ளாட்சி தேர்தலிலும் சீட் தரப்பட்டுள்ளது. சீட் கிடைக்காதவர்கள் சுயேச்சையாக போட்டியிட்டது மட்டுமல்லாமல், தனது கட்சி தன்னிடம் ரூ.5 லட்சம் கேட்டது, நான் கொடுக்கவில்லை. அதனால் தனக்கு சீட் கொடுக்கவில்லை என்று மக்கள் மத்தியில் பிரச்சாரம் செய்தனர். மறுபக்கம் அந்தக் கட்சி கடந்த 5 ஆண்டுகளாக சம்பாதித்த தொகையில் இருந்து கொடுப்பதற்கென்ன என்று எதிர்ப்பிரச்சாரம் செய்யப்பட்டது. மேலும் ஆளும் கட்சிக்கு வாக்களித்தால் இலவசங்கள் வழங்கப்படும் என வாக்குறுதியும் அளிக்கப்பட்டது.

திருவண்ணாமலை, கார்கோணம் ஊராட்சித் தேர்தலில் புடவை, மூக்குத்தி, பணம் ரூ.500 கொடுத்தும், தோற்றபின், வேட்பாளர் இவற்றை திரும்ப வசூல் செய்துள்ளார். சேலம் மாவட்டம் வாழப்பாடி துக்கியாம்பாளையம் வேட்பாளர் தான் கொடுத்த பணத்தை திரும்பப் பெற்றுள்ளார். சிதம்பரம் 28வது வார்டில் வேட்டி, சேலை கொடுத்தும் தோற்றுவிட்டதால், தான் கொடுத்ததை திரும்பக் கொடுக்குமாறு வேட்பாளர் கேட்டதால் கோபமுற்ற மக்கள் அதனை அவரது வீட்டு முன்பு கொட்டி தீ வைத்துள்ளனர். போச்சம்பள்ளியில் மூக்குத்தி, தோடு, பணம், அரிசி, புடவை ஆகியவை கொடுத்தும் தோற்றுள்ளார். அவர் கொடுத்த நகைகள் கவரிங் என்பது பிறகு தெரியவந்துள்ளது. இவை பத்திரிகைகளில் வந்துள்ள செய்திகள்தான்.

எந்த ஊதியமும் இல்லாத இப்பதவிகளுக்கு ஊராட்சி முதல் மாநகராட்சி வரையான மக்கள் பிரதிநிதிகள் இதுபோன்று மக்களுக்கு பணம், பொருள் கொடுத்துள்ளதும் பல்வேறு வாக்குறுதிகளை அளித்துள்ளதும் யோசிக்க வேண்டியவை. உள்ளாட்சி முதல் நாடாளுமன்றம் வரையுள்ள மக்கள் பிரதிநிதிகள் திட்ட ஒதுக்கீட்டில் சுமார் 10 சதவீதம் வரை கமிஷன் பெறுவதால் தான் ஓட்டுக்கு லஞ்சம் கொடுப்பதும் தில்லுமுல்லுகள் செய்வதும் தொடர்கிறது. இது தவிர ஊராட்சி, பேரூராட்சி, நகராட்சி, மாவட்ட ஊராட்சி மற்றும் மாநகராட்சிகளில் மறைமுகமாக நடந்த துணைத் தலைவர் தேர்தல்களிலும் பல உறுப்பினர்கள் கடத்தப்பட்டும், விலை பேசப்பட்டும் விலைக்கு வாங்கியும் தேர்தல் நடந்திருப்பது நமது ஜனநாயகத்தின் கருப்புப் பக்கங்கள்.

மறுபக்கம் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி நேர்மையானவர்களை (தலித்துகளைக் கூட பொது தொகுதியில்) மட்டுமே வேட்பாளர்களாக நிறுத்தி, வேட்பாளர் எவ்வித செலவும் செய்யாமல் கட்சியே செலவு செய்து, வேட்பாளர் பதவிக்கு வந்தால் அவர் கமிஷன் வாங்காத கவுன்சிலராக, தலைவராக இருப்பார் என்றும் அரசின் திட்ட நிதிகள் முழுமையும் நலத்திட்டங்களுக்கு பயன்படுத்துவோம் என்றும் சொன்னபோது படித்தவர்கள் மத்தியிலும், நடுத்தட்டு மற்றும் மேல்தட்டு மக்கள் மத்தியிலும் பெரும் வரவேற்பு இருந்தது. ஆனால், தற்பொழுது நடைபெற்ற தில்லுமுல்லுகளுக்கு முன்பு அது எடுபடவில்லை.

மக்கள், சட்டமன்றத் தேர்தல் அல்லது நாடாளுமன்றத் தேர்தல்களில் அன்றைய சூழ்நிலையில் தங்களைப் பாதிக்கும் கொள்கைகளுக்கு எதிராக கிளர்ந்தெழுவதையும், ஊழல் பேர்வழிகள், அரசு சொத்தை கொள்ளையடித்து குடும்பச் சொத்தாக மாற்றியவர்கள் என்று இனம் கண்டு தேர்தலில் ஓட்டளித்து, தங்களது ஜனநாயகக் கடமையை நிறைவேற்றுவது போல் சிந்திக்காமல், மக்களுக்கு கிடைக்க வேண்டிய பலன்கள் ஒரு சிலரின் படுக்கை அறையை அலங்கரிக்கும் பொருளாக மாறுவதைக் கண்டு கவலைப்படாதவர்களாகவே பலரும் உள்ளனர். ஒரு சிலர் தேர்தல் பணிக்கு சென்றுவிடுவதும் அவர்கள் ஓட்டளிக்க முயற்சிப்பதில்லை என்பதும் சிலர் போடும் ஓட்டும் செல்லாமல் போவதும் கவலையளிக்கும் ஓர் நிகழ்வாகும்.

இப்படி ஒவ்வொருவரும் கவலைப்படாததின் விளைவு, தேர்தலில் தில்லு முல்லு செய்பவர்கள் வெற்றி பெற்று அதிகாரத்திற்கு வந்துவிடுகின்றனர். இவர்கள் அரசு புறம்போக்கில் உள்ள மரங்கள், மணல் போன்றவற்றைத் திருடி விற்பனை செய்பவர்களாக, புறம்போக்கு நிலங்களுக்கு பட்டா வாங்கித்தருவதாக, முதியோர் உதவித்தொகை வாங்கித் தருவதாக சொல்லி மக்களிடம் பணம் வாங்கி லட்சாதிபதிகளாக வலம் வந்து கொண்டுள்ளனர்.

இன்னொரு பக்கம், சமீபகாலமாக லஞ்சத்திற்கு எதிராக பல இயக்கங்கள் நடந்துகொண்டே உள்ளன. படித்த, நடுத்தர மற்றும் மேல்தட்டு மக்கள்அதில் பெரிய அளவில் பங்கெடுத்துவருகின்றனர். இதுவரை லஞ்சம் வாங்கிய அரசு ஊழியர்கள் மீது மட்டுமே கைது நடவடிக்கைகள் எடுக்கும் நிலை இருந்தது. தற்பொழுது அரசியல்வாதிகளும் லஞ்சம் வாங்கியதற்காக சிறை செல்வது அதிகரித்துவிட்டது. அங்கொன்றும் இங்கொன்றுமாக நடக்கும் இதுபோன்று இல்லாமல் அரசுப்பணிகளுக்கு லஞ்சம் வாங்கும் அனைவர்மீதும், வருமானத்திற்கு அதிகமான சொத்து சேர்க்கும் அனைவர் மீதும் வழக்கு தொடுக்கப்பட்டு தண்டிக்கப்பட வேண்டும்.

ஓட்டுக்குப் பணம் கொடுத்தவர்களும் வாங்கியவர்களும் இன்று ஜெயிலில் இருப்பதும் ஓர் முன்னேற்றமான நிகழ்வாகும். எனவே, நாடாளுமன்ற, சட்டமன்றத் தேர்தலில் ஓட்டுக்குப் பணம் கொடுப்பவர்கள் மீது வழக்குப் போடுவது போல, உள்ளாட்சித் தேர்தலில் ஓட்டுக்குப் பணம் வாங்குபவர்கள் மீதும் வழக்குகள் போட்டு கடுமையான கண்காணிப்பு மற்றும் நடவடிக்கைகள் எடுப்பதன் மூலம் இதைத்தடுக்க அனைவரும் யோசிக்க வேண்டிய நேரம் வந்து விட்டதாகவே தோன்றுகிறது. ஓட்டுக்குப் பணம் என்பது ஜனநாயகத்தின் குரல்வளையை முறிக்கும் செயல் என்பதோடு, கிரிமினல்கள் தொடர்ந்து அரசியலில் செல்வாக்கு செலுத்த உதவும் ஓர் வாய்ப்பு என்பதையும் கவனத்தில் வைப்போம். மக்கள் மத்தியில் கொண்டு செல்வோம்.

**கட்டுரையாளர்,**
**மாவட்ட வருவாய் அலுவலர் (ஓய்வு)**

# கிராம நிர்வாகத்தில் தலையீடு வட்டார வளர்ச்சி அதிகாரிகளைக் கண்டித்துப் போராட முடிவு

நிர்வாகத்தில் பிடிஓக்கள் தலையிட்டால் மக்களை ஒன்றுதிரட்டிப் போராடுவோம் என ஊராட்சித் தலைவர்கள் எச்சரித்துள்ளனர். தமிழக அரசின் ஏழை மக்களுக்கான இலவச பசுமை வீடுகள் கட்டும் திட்டத்தின் கீழ் பயனாளிகள் தேர்வு செய்யப்பட்டு ஆணை வழங்கப்பட்டு வருகிறது.

சேலம் மாவட்டம் கெங்கவல்லி ஒன்றியத்தில் 14 ஊராட்சிகளில் இதற்கான பயனாளிகள் தேர்வு செய்யப்பட்டுள்ளனர். அவர்களுக்கு கட்டுமான பணி தொடங்குவதற்கான ஆணையை அந்தந்த ஊராட்சித் தலைவர்களே பயனனாளிகளிடம் வழங்கினர்.

இந்நிலையில் ஆணையில் திருத்தம் இருப்பாதாகக் கூறி வட்டார வளர்ச்சி அலுவலர்கள் (பிடிஓ) பயனாளிகளிடம் இருந்து ஆணையை திரும்பப் பெற்றுச் சென்றுள்ளனர். கூடமலையில் 10 வீடு கட்ட ஆணை வழங்கப்பட்டுள்ளது. 2 தினங்களுக்கு முன் அங்கு சென்ற அதிகாரிகள் ஆணையை திரும்ப வாங்கிச் சென்றுள்ளனர். இது போல நாடுவலூர், ஆணையம்பட்டி உட்பட 12 பஞ்சாயத்துக்களில் பயனாளிகளுக்கு வழங்கப்பட்ட ஆணையை அதிகாரிகள் திரும்பப் பெற்றுள்ளனர்.

இதை அறிந்த அப்பகுதி ஊராட்சித் தலைவர்கள் அதிர்ச்சியடைந்தனர். இது குறித்த நேற்று முன்தினம் கொங்கவல்லி வட்டார வளர்ச்சி அலுவலகத்தில் கூட்டம் நடந்தது. இதில் பிடிஓக்கள் ராஜேந்திரன், விஜய் ஆனந்த் கலந்து கொண்டனர். பயனாளிகளுக்கு வழங்கப்பட்ட ஆணையை திரும்பப் பெற்றதை ஊராட்சித் தலைவர்கள் கண்டித்தனர்.

கிராம சபைக் கூட்டத்தில் பயனாளிகள் தேர்வு செய்யப்பட்டு அரசு மூலம் பணி ஆணையும் வழங்கியதை அதிகாரிகள் திரும்பப் பெற்றதை ஏற்க முடியாது. கிராம ஊராட்சி நிர்வாகத்தில் அதிகாரிகள் தலையிட்டால் கிராம மக்களை ஒன்று திரட்டி போராட்டத்தில் ஈடுபடுவோம் என ஊராட்சித் தலைவர்கள் எச்சரித்தனர்.

**– தினகரன், 11.1.2012**

# புதுக்கோட்டை அருகே தீண்டாமைக் கொடுமை தலித் ஊராட்சித் தலைவர் தேசியக் கொடி ஏற்றத்தடை

புதுக்கோட்டை, ஜன. 27: மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஊராட்சிமன்றத் தலைவர் தலித் வகுப்பைச் சேர்ந்தவர் என்கிற ஒரே காரணத்திற்காக, குடியரசு தின விழாவில் கொடியேற்ற விடாமல் தடுத்துள்ள தீண்டாமைக் கொடுமை புதுக்கோட்டை மாவட்டத்தில் அரங்கேறியுள்ளது.

**இதுகுறித்து மார்க்சிஸ்ட் கட்சியின் மாவட்டச் செயலாளர் எம்.சின்னத்துரை, செய்தியாளர் கூட்டத்தில் கூறியதாவது:**

கறம்பக்குடி ஒன்றியத்தில் நான்கு ஊராட்சிகளில் மார்க்சிஸ்ட் கட்சியைச் சேர்ந்தவர்கள் தலைவர்களாக உள்ளனர். இதில் கரு.வடதெரு ஊராட்சி மன்றத் தலைவராக இருப்பவர் கலைமணி அண்ணாதுரை, தலித் வகுப்பைச் சேர்ந்தவர். இவரது கணவர் அண்ணாத்துரை மார்க்சிஸ்ட் கட்சியின் ஒன்றியக்குழு உறுப்பினராக உள்ளார்.

ஊராட்சித் தலைவர் கலைமணி அண்ணாத்துரையை கொடியேற்ற விடமாட்டோம் என சாதி ஆதிக்க சக்திகள் திட்டமிட்டது தெரியவந்தது. இத்தகவல் கிடைத்ததும் குடியரசுதின விழாவில், ஊராட்சிமன்றத் தலைவர் கொடியேற்றுவதற்கு உரிய பாதுகாப்பு வழங்க வேண்டுமென வடகாடு காவல்நிலையத்தில் கடந்த 19.1.2012 அன்று கலைமணி அண்ணாத்துரை மனுக்கொடுத்துள்ளார். இதே கோரிக்கையை வலியுறுத்தி 24.1.2012 அன்று ஆலங்குடி காவல் துணைக் கண்காணிப்பாளரிடமும் மனுக்கொடுத்துள்ளனர்.

இந்நிலையில் குடியரசு தினத்தன்று கரு.வடதெரு ஊராட்சிமன்ற அலுவலகத்தின் முன்பு ஊராட்சிமன்றத் தலைவர் கலைமணி அண்ணாத்துரை கொடியேற்றும்போது, துணைத் தலைவர் ரெங்கம்மாளின் மகன் குமார், வீராச்சாமி மற்றும் 20 பேர் திடீரெனப் புகுந்து, தலைவர் கலைமணியை சாதிப் பெயரைச் சொல்லி, இழிவாகப் பேசி தாக்கிவிட்டு, தேசியக் கொடியை தாங்களே ஏற்றியுள்ளனர்.

இவ்வூராட்சியைச் சார்ந்த ராஜா குடியிருப்பு ஊராட்சி ஒன்றியத் தொடக்கப்பள்ளியிலும் ஊராட்சித் தலைவரை கொடியேற்றவிடாமல் சாதி ஆதிக்க வெறியர்கள் தடுத்து தலைமை ஆசிரியரை ஏற்ற வைத்துள்ளனர். கண்ணியான் கொல்லை கிராமத்தில் உள்ள ஊராட்சி ஒன்றியத் தொடக்கப் பள்ளியில் சாதி ஆதிக்க வெறி பிடித்த பாஞ்சாலன் என்பவர் கொடியேற்றியுள்ளார்.

இச்செயல் சுதந்திர இந்தியாவின் தேசிய அவமானமாகும். தலித் ஊராட்சிமன்றத் தலைவர் தேசியக்கொடி ஏற்றுவதைத் தடுத்திட சாதிவெறியர்கள் சிலர் முயற்சிக்கின்றனர் என முன்னதாகவே புகார் தெரிவித்தும் உரிய பாதுகாப்பு ஏற்பாடு செய்ய காவல்துறை தவறிவிட்டது. இதனால் சாதி ஆதிக்க வெறியர்கள் இத்தகைய சட்டத்திற்கு விரோதமான செயலை செய்து அமைதியாக வாழும் மக்களிடம் பதற்றத்தையும் சாதிக் கலவரத்தையும் ஏற்படுத்த முயற்சிப்பதை மார்க்சிஸ்ட் கட்சி வன்மையாகக் கண்டிக்கிறது.

புதுக்கோட்டை மாவட்டத்தில் பெரும்பாலான கிராமங்களில் தீண்டாமைக் கொடுமை பல வடிவங்களில் நிலவுகிறது. தேசியக்கொடியை ஏற்றவிடாமல் தடுத்த சாதி ஆதிக்க வெளியர்களை கைது செய்திட வேண்டும். ஊராட்சிமன்றத் தலைவருக்கும், அவரது குடும்பத்தினருக்கும் உரிய பாதுகாப்பு வழங்க வேண்டும். இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

பேட்டியின்போது கட்சியின் மாவட்டச் செயற்குழு உறுப்பினர்கள் எம். செபஸ்தியன், க. செல்வராஜ், எம். உடையப்பன், ஏ.ஸ்ரீதர், மாவட்டக் குழு உறுப்பினர் எம்.ஜியாவுதின், ஒன்றியச் செயலாளர் எம். பாலசுந்தரமூர்த்தி, என்.பழனிவேல், அண்ணாத்துரை, ஊராட்சித் தலைவர் கலைமணி அண்ணாதுரை ஆகியோர் உடனிருந்தனர்.

**தமிழ்நாடு தீண்டாமை ஒழிப்பு முன்னணி கடும் கண்டனம்**

புதுக்கோட்டை மாவட்டம், கறம்பக்குடி ஒன்றியம் கருக்காடு குறிச்சி தலித் ஊராட்சிமன்றத் தலைவர் கலைமணி ஜனவரி 26 அன்று தேசியக்கொடியேற்ற சென்றபோது, அவரைத் தாக்கி இழிவாகப் பேசி சாதி ஆதிக்க சாதிகள் அட்டூழியம் செய்துள்ளன. பாபா சாகேப் டாக்டர் அம்பேத்கர் உருவாக்கிய அரசியல் சாசன சட்டம் செயல்முறைக்கு வந்த குடியரசு தின விழாவிலேயே சாதி ஆதிக்க சக்திகள் சட்டத்திற்கு சவால்விடுத்து,

வன்கொடுமையில் ஈடுபட்டுள்ளன. இந்தப் படுபாதகச் செயலை தமிழ்நாடு தீண்டாமை ஒழிப்பு முன்னணி வன்மையாகக் கண்டிக்கிறது.

புதுக்கோட்டை மாவட்டத்தில் தொடர்கிற தீண்டாமை வன்கொடுமைகள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமென ஜனவரி 20 அன்று நூற்றுக்கணக்கானோர் பங்கேற்ற கண்டன ஆர்ப்பாட்டமும், தமிழ்நாடு தீண்டாமை ஒழிப்பு முன்னணியின் சார்பில் நடத்தப்பட்டது. எனினும், காவல்துறை அதிகாரிகள் சிலரின் ஆதரவோடு தலித் மக்கள் மீது வன்கொடுமைகள் தொடர்கின்றன. முன்கூட்டியே புகார் கொடுத்தும் நடவடிக்கை எடுக்காத காவல்துறையினர் இச்சம்பவங்களுக்குப் பிறகும் இதுவரை வழக்குகள் எதுவும் பதிவு செய்யவில்லை. சாதிவெறியர்களுக்கு துணை போகிற புதுக்கோட்டை மாவட்ட காவல்துறை அதிகாரிகள் சிலரின் நடவடிக்கை கடும் கண்டனத்துக்குரியது.

எனவே, தமிழக அரசும், காவல்துறையும் உடனடியாகத் தலையிட்டு, வன்கொடுமைத் தடுப்புச் சட்டத்தின் கீழ் வழக்குப்பதிவு செய்து, குற்றவாளிகளை கைது செய்ய வேண்டும் எனவும் பாதிக்கப்பட்டுள்ள தலித் ஊராட்சிமன்றத் தலைவர் கலைமணிக்கு உரிய பாதுகாப்பு வழங்கிட வேண்டுமெனவும் தமிழ்நாடு தீண்டாமை ஒழிப்பு முன்னணியின் மாநிலத் தலைவர் பி. சம்பத், பொதுச் செயலாளர் கே. சாமுவேல்ராஜ் ஆகியோர் கேட்டுக்கொண்டுள்ளனர்.

**ஆதாரம்:** தீக்கதிர் (28.01.2012)

# சுரண்டை அருகே பதற்றம்

## பஞ்சாயத்து தலைவி வீடு மீது பெட்ரோல் குண்டு வீச்சு

– சுரண்டை, ஜன. 2

நெல்லை அருகே பஞ்சாயத்து தலைவி வீடு மீது மர்ம நபர்கள் பெட்ரோல் குண்டுகளை வீசினர். இதில் வீட்டின் முன் பகுதி முற்றிலும் எரிந்து சாம்பலானது.

நெல்லை மாவட்ட கீழப்பாவூர் ஒன்றியம் இனாம் வெள்ளக்கால் பஞ்சாயத்துத் தலைவராக இருப்பவர் செல்வசுந்தரி (43). புத்தாண்டு கொண்டாடுவதற்காக கடந்த வாரம் இவர் குடும்பத்துடன் பாளையங்கோட்டையில் உள்ள உறவினர் வீட்டிற்கு சென்றார்.

நேற்று அதிகாலை ஒரு மணியளவில் செல்வசுந்தரி வீடு மீது மர்மநபர்கள் பெட்ரோல் குண்டுகளை வீசித் தாக்கினர். இதில் வீட்டின் முன்பகுதி தீப்பிடித்து எரிந்தது. இதைப்பார்த்த அக்கம், பக்கத்தினர் சுரண்டை தீயணைப்பு நிலையத்திற்கு தெரிவித்தனர். தீயணைப்பு வீரர்கள் விரைந்து தீ மேலும் பரவாமல் அணைத்தனர். எனினும் வீட்டின் முன்பகுதியில் போடப்பட்டிருந்த கூரை செட், பிளாஸ்டிக் சேர் மற்றும் சின்டெக்ஸ் தொட்டி, லவ்பேர்ட்ஸ் பறவைகள் எரிந்து சாம்பலாயின. இதன் மதிப்பு ரூ.50 ஆயிரம்.

இதுகுறித்து சுரண்டை போலீசார் விசாரணை நடத்தி மர்மநபர்களை தேடி வருகின்றனர். பெட்ரோல் குண்டு வீசியபோது வீட்டில் யாரும் இல்லாததால் அதிர்ஷ்டவசமாக உயிர் தப்பினர்.

கடந்த 12.11.2011 அன்று கட்சித் தலைவர் ஒருவர் இங்கு கொடியேற்றுவதற்காக வந்தார். அப்போது கொடிக்கம்பம் பஞ்சாயத்து அலுவலகம் அருகில் இருந்ததால் அங்கு கொடியேற்றுவதற்கு செல்வசுந்தரி எதிர்ப்பு தெரிவித்தார். ஆனாலும் எதிர்ப்பை மீறி கொடியேற்றப்பட்டது. இதன் காரணமாக அவரது வீடு மீது பெட்ரோல் குண்டு வீசப்பட்டதா அல்லது உள்ளாட்சி தேர்தல் முன்விரோதமா ? என்பது உள்ளிட்ட பல்வேறு கோணங்களில் போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

பஞ்சாயத்து தலைவி வீடு மீது பெட்ரோல் குண்டு வீசப்பட்ட சம்பவத்தையடுத்து அப்பகுதியில் பதற்றம் ஏற்பட்டுள்ளதால் போலீசார் குவிக்கப்பட்டுள்ளனர்.

# புதுக்கோட்டை மாவட்டம், கறம்பக்குடி ஒன்றியம், கருக்காகுறிச்சிவடதெரு ஊராட்சியில் பெண் தலித் ஊராட்சி மன்றத் தலைவருக்கு ஏற்பட்ட சம்பவம் குறித்த உண்மை நிலை அறிக்கை

**சம்பவம் குறித்த பின்னணி:**

புதுக்கோட்டை மாவட்டம், கறம்பக்குடி ஒன்றியம், கருக்காக்குறிச்சி வடதெரு, ஊராட்சி மன்றத் தலைவர் திருமிகு.கலைமணி அவர்களை 26.01.2012 குடியரசு தினத்தன்று ஊராட்சி அலுவலகத்தில் கொடியேற்றவிடாமல், இவ்வூராட்சியின் துணைத் தலைவர் திருமதி.ரெங்கம்மாள் அவர்களின் மகன் குமார் என்பவர், ஊராட்சி மன்றத் தலைவரைக் கீழே தள்ளிய சம்பவம் குறித்து 29.01.2012 நாளிதழ்களில் வெளி வந்திருந்த செய்தியினைப் பார்த்து 6 நபர்கள் கொண்ட குழு 04.02.2012 அன்று நேரில் சென்று நடந்த சம்பவம் குறித்து கேட்டறியப்பட்டது.

**குழுவில் இடம் பெற்ற நபர்கள்:**

1. திருமிகு. ஆதப்பன், இயக்குனர், புதுக்கோட்டை மாவட்ட அமைப்புசாரா தொழிலாளர் சங்கம், புதுக்கோட்டை.
2. திருமிகு. கஸ்தூரி, புதுக்கோட்டை.
3. திருமிகு. தெய்வேந்திரன், ஒருங்கிணைப்பாளர், எஸ்.ஐ.ஆர்.டி., மதுரை.
4. திருமிகு.ஸ்ரீஜித், ஒருங்கிணைப்பாளர், மனித உரிமை மேம்பாடு மற்றும் ஆராய்ச்சி அமைப்பு, சென்னை.
5. திருமிகு. எஸ்.ராஜேந்திரன், முதன்மை ஒருங்கிணைப்பாளர், சினேகா, நாகப்பட்டினம்.
6. திருமிகு. த. அன்னலெட்சுமி, ஒருங்கிணைப்பாளர், பெண்களுக்கான சட்ட சேவை மையம், நாகப்பட்டினம்.

**சந்தித்த நபர்கள்:**

1. திரு. ராசு, இவரது மனைவி, தனம், கருக்காக்குறிச்சி, ராஜாகுடியிருப்பு.
2. திருமிகு.லெட்சுமி, சத்துணவு சமையலர்.
3. திரு.பெரியதம்பி, வடதெரு.
4. திரு.குமார், ஊராட்சி மன்றத் துணைத் தலைவர் மகன்.
5. திரு.முருகன், முன்னாள் வார்டு உறுப்பினர்.
6. திரு.ராஜமாணிக்கம், வடதெரு.
7. திரு.தங்கவேல், வடதெரு.
8. திரு.செந்தில், வடதெரு.
9. திரு.சங்கரன், வடதெரு.
10. திரு.செல்லமுத்து, வடதெரு.
11. திருமிகு.கலைமணி, ஊராட்சி மன்றத் தலைவர்.
12. திருமிகு.அண்ணாதுரை, ஊராட்சி மன்றத் தலைவரின் கணவர்.
13. திரு.முருகையா, வடகாடு காவல்நிலைய எழுத்தர்.

**சேகரித்த தகவல்கள்:**

**திரு.இராசு, இவரது மனைவி தனம், கருக்காக்சேரி, ராஜாகுடியிருப்பு இவர் கூறும் போது,** ராஜகுடியிருப்பு இந்த ஊராட்சியில் ஒரு பகுதி. இங்கு அதிகமாக மேல்சாதியினர் இருக்கிறார்கள். இதனால் அவர்களுக்கு கட்டுப்பட்டு இருக்க வேண்டிய சூழலில் வாழ்கின்றோம். அவர்களை எதிர்த்து எதுவும் செய்ய முடியாது. எங்கள் கிராம பள்ளியில் எதுவும் பிரச்சினை இல்லாமல் கொடியேற்றப்பட்டது. என்ன இருந்தாலும் இவ்வூராட்சியில் முடிவுகள் எடுப்பது என்பது அவர்களாகத் தான் இருக்கும். மொத்தம் 5 கிராமங்கள் இணைந்தது இந்த ஊராட்சி. (வடதெரு, மேட்டுத் தெரு, கருராஜா குடியிருப்பு கன்னியா கொல்லை).

**திருமிகு.லெட்சுமி, சத்துணவு சமையலர், வடதெரு:** நான் ராஜாகுடியிருப்பு பள்ளியில் சமையலராக பணியாற்றுகிறேன். இந்த ஊராட்சியில் மேல் சாதி, தாழ்த்தப்பட்ட சாதி என்ற பாகுபாடு இல்லை. எல்லோரும் ஒன்றாகத் தான் பழகுவோம். ஊராட்சி அலுவலகத்தில் கொடியேற்றவிடாமல் தள்ளிவிட்டதாக கூறினார்கள். நான் நேரில் பார்க்கவில்லை எனக் கூறினார்.

**திரு.பெரியதம்பி, வடதெரு,** இந்த அம்மா ஊராட்சி மன்றத் தலைவராக வந்த பிறகு 100 நாள் வேலை பரவலாக கொடுக்கப்படுகிறது. ஒரு நாள் கூலியாக ரூ.110/– கொடுக்கிறார்கள். வேலை நடக்கும் போது நேரடியாக பார்வையிடுவார் எனக் கூறினார்.

**துணைத் தலைவர், திருமதி.ரெங்கம்மாள் மகன் திரு.குமார் இவர் கூறும் போது,** என் பெயரை பத்திரிக்கையில் சுட்டிக்காட்டி இருப்பது தவறு. நான் அவ்வாறு செய்யவில்லை. ஊராட்சி மன்றத் தலைவரைத் தள்ளிவிடவும் இல்லை. சாதிப் பெயரைச் சொல்லித் திட்டவுமில்லை. பத்திரிக்கையில் தவறாக செய்தி

வெளியிட்டுள்ளார்கள் எனக் கூறியதோடு, பொதுவாக குடியரசு தினம், சுதந்திர தினம் என்றால் முன்னாள் இருந்த ஊராட்சி மன்றத் தலைவர்கள், எல்லோருக்கும் அழைப்பு விடுத்து, எல்லோரும் வந்த பிறகு தான் கொடியேற்றுவார்கள். இந்த அம்மா யாருக்கும் அழைப்பு கொடுக்கவில்லை எனக் கூறினார்.

**இந்த ஊராட்சியின் முன்னாள் ஊராட்சி மன்றத் தலைவர் காந்திமதியின் சகோதரர் இவர் கூறும் போது,** இந்த ஊராட்சியில் எந்தவித பாகுபாடும் இல்லாமல் தான் பழகுவார்கள். நான் தலைவராக இருந்த போது நான் கொடியேற்றமாட்டேன். ஏனென்றால், ராஜாகுடியிருப்பு பள்ளிக்கூடத்திற்கு திரு.ராஜகோபால் என்பவர்தான் பள்ளிக்கட்டிடம் கட்ட இடம் கொடுத்து உதவினார். அதனால் அவர்தான் தொடர்ந்து கொடியேற்றுவார். இந்த ஆண்டு குடியரசு தினத்தன்று அவர் அப்பள்ளிக்கு சென்ற போது, போலீஸ்காரர்கள் அப்பள்ளியில் இருந்ததால், ஊராட்சி மன்றத் தலைவரும், திரு.ராஜகோபாலும் பிரச்சினை என்பதால், போலீஸ்காரர்கள் பள்ளி தலைமை ஆசிரியரையே கொடியேற்றச் சொல்லிவிட்டார் எனப் பகிர்ந்து கொண்டார்.

**திரு.முருகன், முன்னாள் வார்டு உறுப்பினர், மேட்டுத் தெரு, இவர் கூறும் போது,** நான் வார்டு உறுப்பினராக இருந்த போது ஒவ்வொரு ஆண்டும் நான் தான் எங்கள் பகுதி பள்ளியில் கொடியேற்றுவேன். இப்பொழுது நான் வார்டு உறுப்பினர் இல்லை. குமாருக்கும், எனக்கும் ஆகாது. ஆதனால் நான் ஊராட்சி விஷயங்களில் தலையிடுவது இல்லை எனப் பகிர்ந்து கொண்டார்.

**திருமிகு.கலைமணி, ஊராட்சி மன்றத் தலைவர், கருக்காக்குறிச்சி வடதெரு, இவரைச் சந்தித்து பேசும் போது,** நான் குடியரசு தினத்தன்று கொடியேற்றுவதற்காக ராஜாகுடியிருப்பு சென்ற போது, திரு.ராஜகோபால் நான் தான் கொடியேற்றுவேன் என்று கூறியதால் அங்கு வந்திருந்த போலீஸ்காரர்கள் என்னையும், திரு.ராஜகோபால் என்பவரையும், கொடியேற்ற வேண்டாம், தலைமை ஆசிரியரே கொடியேற்றட்டும் எனக் கூறி தலைமை ஆசிரியர் கொடியேற்றினார். அங்கிருந்து ஊராட்சி அலுவலகத்திற்கு சென்ற போது, அங்கு கொடியேற்றுவதற்கு, கொடி கம்பம் வரை சென்று கொடியின் முடிச்சை அவிழ்த்து விடுவதற்குள், துணைத் தலைவர் ரெங்கம்மாளின் மகன் குமார் என்னைத் தவறான வார்த்தை கூறி, கீழே தள்ளிவிட்டார். இவரது மாமா வீராச்சாமி, 30 ஆண்டுகளாக நான் தான் கொடியேற்றுகின்றேன். இப்பொழுது இவள் என்ன ஏற்றுவது என தகாத வார்த்தைகளால் பேசினார் எனக் கூறினார்.

**திருமிகு. அண்ணாதுரை, ஊராட்சி மன்றத் தலைவரின் கணவர்,** நாங்கள் ஊராட்சி மன்றத் தலைவருக்கு 3 முறையாக போட்டியிட்டு, தோல்வி அடைந்துவிட்டோம். காரணம், எங்களை எதிர்த்து நின்ற ஆட்கள் பணபலமும், ஆட்பலமும் மிக்கவர்கள். இந்த தடவை நாங்கள் வெற்றி பெற்றதற்குக் காரணம், நான் கடந்த ஓர் ஆண்டாக இப்பகுதியில் முதியோர் உதவித் தொகை நிறைய நபர்களுக்கு வாங்கி கொடுத்துள்ளேன். எங்களுக்கு சொந்த ஊர் கன்னியாக்கொல்லை, ராஜகுடியிருப்பு. குடியரசு தினத்திற்கு 20 நாட்களுக்கு முன் எங்களுக்கு ஒரு தகவல் கிடைத்தது. இவள் எப்படி கொடியேற்றுகிறாள் என்று பார்ப்போம் என்று மிரட்டினார்கள். இதனால் நாங்கள் முன்கூட்டியே வடகாடு காவல்நிலையத்தில் கம்ப்ளையிண்ட் கொடுத்து இருந்தோம். 24.01.2012 அன்று டி.எஸ்.பி. இடமும் கம்ப்ளையிண்ட் (Complaint) கொடுத்துவிட்டோம். 26.01.2012 அன்று காலை கன்னியாகொல்லை பள்ளியில் கொடியேற்றிவிட்டு, ராஜாகுடியிருப்பு ஊராட்சி அலுவலகத்திற்கு கொடியேற்றச் சென்றபோது, கொடியின் முடிச்சை அவிழ்ப்பதற்குள் ஊராட்சி மன்றத் தலைவராகிய கலைமணியைத் துணைத் தலைவர் ரெங்கம்மாளின் மகன் குமார் அவர்கள் சாதிப் பெயரைச் சொல்லி கீழே தள்ளிவிட்டார். குமாரின் மாமா வீராச்சாமி அவர்களும் சாதிப் பெயரைச் சொல்லி திட்டினார்.

ஊராட்சிமன்றத் தலைவர் பதவியேற்பின் போது தலைவர் அம்மாவை நாற்காலியில் அமரச் செய்தார்கள். இந்தச் சம்பவம் நடந்ததற்கு முக்கிய காரணம் இந்த ஊராட்சியில் தொடர்ந்து வீராச்சாமி, ராஜகோபால் இவர்கள் தான் தொடர்ந்து கொடியேற்றி வந்தார்கள். இதற்கு முன்பு இருந்த தலைவர்கள் விட்டுக் கொடுத்து வந்தார்கள். இந்த முறை நாங்கள் விட்டுக் கொடுக்கவில்லை. இதுதான் பிரச்சினையாகிவிட்டது. இதற்கு முன் பாஞ்சாலம் என்பவர், கன்னியாகொல்லையைச் சேர்ந்தவர், மிராசு இவரை எதிர்த்து யாரும் எதுவும் சொல்வது இல்லை. அதனால் அவர் கன்னியாகொல்லை கிராமத்தில் கொடியேற்றுவது, முக்கிய விஷேசங்களிலும் கலந்து கொள்வார். ஆனால் இவருக்கு பின் வந்த தலைவர்கள் விட்டுக் கொடுத்து போய்விட்டார்கள். இதனால் தான் இப்பொழுது பிரச்சினை எனக் கூறினார்.

வடகாடு காவல்நிலையம், அங்கு குழுவினர் சென்ற போது, திரு. முருகையா, வடகாடு காவல்நிலைய எழுத்தர் மட்டும் இருந்தார். அவரிடம் சம்பவம் தொடர்பாக கேட்டபோது, Crime No. 14/2012, IPC Section 294.B, 394, 506 part (1), R/W-3, class 1 & 10, SC/ST Act 1989-ன் கீழ் வழக்கு பதிவு செய்து இருப்பதாக கூறினார். இவ்வழக்கில் Complainter கலைமணி வயது 44, முதல்

குற்றவாளி – குமார், த/பெ.ராமசாமி, இரண்டாவது குற்றவாளி திரு.வீராச்சாமி, த/பெ.குப்புசாமி, இதுவரை இந்த வழக்கின் மீது, விசாரணை மேற்கொள்ளவில்லை. எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை.

### கண்டறிந்தவை

- தலித் ஒடுக்குமுறை உள்ளது.
- துணைத் தலைவர் தலித் அல்லாதவர் என்பதால் ஒத்துழைப்பு இல்லை.
- பெண் தலைமை மற்றும் தலித் தலைமை ஏற்றுக் கொள்ளப்படவில்லை.
- பணக்கார வர்க்கம்/ஏழ்மை பாகுபாடு உள்ளது.
- பலப் பிரிவு சாதியினர் இருக்கின்றார்கள். ஆனால், அவர்கள் அனைவரும் ஒன்று கூடிவிடுகிறார்கள். தலித் மக்கள் அடிமை போல் வாழ்கிறார்கள்.

### பரிந்துரைகள்

- பொதுவாக தலித் தலைவர் ஒடுக்கப்படுவதை நிறுத்த நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.
- ஊராட்சி மன்றத் தலைவர் தலித் என்றால் துணைத் தலைவர் தலித் ஆக இருக்க வேண்டும்.
- ஊராட்சி மன்றத் தலைவர் கொடுத்த Complaint–ன் மீது உடனடி நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.
- வளர்ச்சித் திட்டப் பணிகள் செய்வதற்கு வங்கியில் பணம் எடுக்க வேண்டுமானால் காசோலையில் துணைத் தலைவரின் கையெழுத்து பெற வேண்டியுள்ளது. உடனடியாக துணைத் தலைவர் கையொப்பமிடுவதில்லை. பிரச்சினையும் செய்கிறார்கள். இதனால் குறிப்பிட்ட காலத்தில் ஊராட்சியின் வேலைகளை நடைமுறைப்படுத்த முடிவதில்லை.
- NREGA பணியை மேற்கொள்வது, பணிப் பகிர்வு குறித்தும் இப்பணியை மற்றும் பயனாளிகள் தேர்வு செய்வது குறித்தும் நடைமுறைப்படுத்த வேண்டும்.
- தேர்ந்தெடுக்கப்பட்ட ஊராட்சி மன்றத் தலைவர்கள் அவர்களது அதிகாரத்தைச் செயல்படுத்துவதற்கு பிற சாதியினரின் அத்துமீறல்கள் தடுத்து நிறுத்தப்பட வேண்டும்.
- ஊராட்சி மன்ற அலுவலகம் வடதெரு பகுதியில் உள்ளது. இது ஒரு சிறிய பகுதி இங்கு வசிப்பவர்கள் அனைவரும் கள்ளர் சமூகத்தினர். அதனால் தலித்தலைவர்கள் அலுவலகத்திற்கே செல்ல முடியாத நிலை உள்ளது. இவ்வலுவலகத்தைக் கன்னியாங்கொள்ளைக்கு மாற்றப்பட மாவட்ட ஆட்சியர் உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.
- ஊராட்சி மன்றத் தலைவர், ஊராட்சியின் மற்ற பகுதிகளுக்கு செல்ல முடியாத நிலை உள்ளது. எனவே அவருக்கு உடனடியாக காவல்துறை பாதுகாப்பு நிரந்தரமாக வழங்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.
- குடியரசு தினவிழாவின் போது கொடியேற்றவிடாமல் தடுத்து சாதி பெயரைச் சொல்லி திட்டிய குமார், வீராச்சாமி ஆகியோர் மீது பதிவு செய்யப்பட்ட வழக்கு தொடர்பாக உடனடி விசாரணை மேற்கொள்ள வேண்டும்.
- ஊராட்சி மன்ற அலுவலகத்தைக் கன்னியா கொல்லைக்கு மாற்ற வேண்டும்.
- துணைத் தலைவரை மாற்ற வேண்டும்.

## வளர்ச்சிப் பணிக்கு நிதி வழங்காததால் ஊராட்சித் தலைவர் ராஜினாமா

வளர்ச்சிப் பணிகளுக்கு தமிழக அரசு நிதி வழங்காததால், ஊராட்சித் தலைவர், தனது பதவியை ராஜினாமா செய்தார். திண்டுக்கல் மாவட்டம் நிலக்கோட்டை ஒன்றியம், சிலுக்கு வார்பட்டி ஊராட்சித் தலைவராக இருப்பவர் சந்திரன் (எ) ராமச்சந்திரன். இவர் 2வது முறையாக தலைவராகத் தேர்வு செய்யப்பட்டார். புல்வெட்டி கண்மாய்க்கு உபரிநீர் கிடைப்பதற்கு, ஊராட்சி ஒன்றியம் நடவடிக்கை எடுக்க வேண்டும், ஊராட்சிக்குப் பற்றாக்குறை இன்றி நிதி கிடைக்க ஏற்பாடு செய்ய வேண்டும் என்பன உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி வந்தார். இதனை வலியுறுத்தி அதிகாரிகளிடம் மனுவும் கொடுத்தார். எந்த நடவடிக்கையும் இதுவரை எடுக்கப்படவில்லை.

இதனால் அதிருப்தியடைந்த ராமச்சந்திரன், தனது பதவியை ராஜினாமா செய்யப்போவதாக கலெக்டருக்கு கடிதம் எழுதியுள்ளார். மனுவின் அடிப்படையில் கலெக்டரின் நேர்முக உதவியாளர் (தேர்தல் பிரிவு) வளநாட்டுதுரை, வட்டார வளர்ச்சி அலுவலர் சேகர் ஆகியோர் முன்னிலையில் ஊராட்சித் துணை தலைவர் சாந்தகுமார் தலைமையில் சிறப்பு கூட்டம், கடந்த 28ம் தேதி நடந்தது.

இக்கூட்டத்தில் தலைவர் ராமச்சந்திரனின் ராஜினாமா, கடிதத்தை ஏற்பதா? வேண்டாமா? என்று முடிவு செய்வதாக இருந்தது. ஆனால் கூட்டத்திற்கு ராமச்சந்திரன் வரவில்லை. கூட்ட அறிக்கை கலெக்டருக்கு அனுப்பப்பட்டது. இதைத் தொடர்ந்து அவரது ராஜினாமா கடிதம் ஏற்கப்பட்டது. அவரது பொறுப்பை, ஊராட்சி துணைத்தலைவர் சாந்தகுமாரிடம் ஒப்படைக்க கலெக்டர் நாகராஜன் நேற்று முன்தினம் உத்தரவிட்டார். தமிழக அரசு நிதி வழங்காததால் அதிருப்தியில், ஊராட்சித் தலைவர் பதவியை ராஜினாமா செய்த சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

# எச்சரிக்கை

## உள்ளாட்சி அமைப்புகளின் பெண் பிரதிநிதிகளுக்கு பதிலாகக் கணவர், உறவினர்களை அனுமதிக்க கூடாது எனத் தடை

**தமிழகத்தில், உள்ளாட்சி அமைப்பு கூட்டங்களில், பெண் உள்ளாட்சி பிரதிநிதிகளின் கணவர்கள் மற்றும் குடும்பத்தினர் பங்கேற்க, அரசு தடை விதித்துள்ளது.'விதி முறைகளை பின்பற்றாத ஊரக வளர்ச்சித்துறை அதிகாரிகள் மீது, கடும் ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படும்' என, அரசு உத்தரவிட்டுள்ளது. தமிழகத்தில் மொத்தம் உள்ள, ஒரு லட்சத்துக்கும் மேற்பட்ட உள்ளாட்சி பதவிகளில், 40 ஆயிரத்து, 75 பதவியிடங்களில் பெண்கள் உள்ளனர்.**

இதில், மாவட்ட ஊராட்சி தலைவர்களில், 31 பதவியிடங்களுக்கு, 11 பெண்களும், 385 ஊராட்சி ஒன்றிய சேர்மன் பதவிகளில், 140 பெண்களும், 6,571 ஒன்றிய கவுன்சிலர் பதவிகளில், 2,286 பெண்களும், 12 ஆயிரத்து, 524 கிராம ஊராட்சி தலைவர் பதவிகளில், 4,289 பெண்கள் என, 35 சதவீதம் உள்ளாட்சி பதவிகளில், பெண்கள் பதவி வகித்து வருகின்றனர். பெண்கள், மக்கள் பிரதிநிதிகளாக உள்ள இடங்களில், நிர்வாக பணிகளை கணவன் அல்லது குடும்பத்தினர் உதவியுடன் செயல்படுத்தும் நிலை உள்ளது.

ஒன்றியம் மற்றும் நகராட்சி கவுன்சில் கூட்டங்களில், பெண் உள்ளாட்சி பிரதிநிதிகளின் கணவன் போன்ற உறவுமுறையினர் கலந்து கொள்வதால், பல்வேறு பிரச்சனைகள் எழுகிறது. இதுபற்றி தமிழக அரசுக்கு ஏராளமான புகார் சென்றது. இதன் எதிரொலியாக, தமிழகத்தில் உள்ள ஊராட்சி ஒன்றியங்களுக்கு, ஊரக வளர்ச்சித் துறை உதவி இயக்குனர் மூலம், அரசு அவசர உத்தரவு பிறப்பித்துள்ளது.

**உத்தரவில் கூறப்பட்டுள்ளதாவது:**

அனைத்து ஊராட்சி ஒன்றியங்களிலும், ஒன்றிய கவுன்சில் கூட்டம், மாதம் ஒருமுறை நடத்த வேண்டும். கூட்டம் நடக்கும்போது, தேர்வு செய்த கவுன்சிலர்கள் மட்டுமே கூட்டத்தில் கலந்து கொண்டு, கூட்ட நடவடிக்கைகள் குறித்து விவாதிக்கலாம்.

கவுன்சிலர்களின் சார்பாக, அவரது குடும்ப உறுப்பினர்களோ அல்லது பெண் உறுப்பினர்கள் சார்பில், அவரது கணவரோ அல்லது வேறு நபரோ கூட்ட நடவடிக்கைகளில் பங்கேற்க கூடாது. ஒரு சில ஊராட்சி ஒன்றியங்களில், கவுன்சில் கூட்டத்தில் ஒன்றிய கவுன்சிலர்கள் அல்லாதவர்கள் மற்றும் பெண் உறுப்பினரின் கணவர் கலந்து கொள்வதால் கூட்டம் நடத்துவதில் இடர்பாடுகளும், தேவையற்ற பிரச்சனைகளும் ஏற்படுவதாகவும் தெரியவருகிறது.

எனவே, அனைத்து ஊராட்சி ஒன்றியங்களிலும் நடத்தப்படும் கவுன்சில் கூட்டத்தில், ஒன்றிய சேர்மன் மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒன்றியக் கவுன்சிலர்கள் மட்டுமே கலந்து கொள்ள அனுமதிக்க வேண்டும்.

மற்றவர்களை கூட்டத்தில் கலந்து கொள்ள அனுமதித்து, அதனால் கூட்டத்தில் பிரச்சனைகள் ஏற்படுவது கண்டறியப்பட்டால், சம்பந்தப்பட்ட பி.டி.ஓ., மீது கடுமையான ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ள நேரிடும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

**ஆதாரம்:** தினமலர் 29.1.2012

# பணித்தலப்பொறுப்பாளர்கள்நியமனமா?
# 100 நாள்வேலைத் திட்டதொழிலாளர்கள் ஆவேசம்

100 நாள்வேலைத் திட்டத்தைக் கண்காணிக்க பணித்தலப் பொறுப்பாளர்கள் நியமிக்கப்படுகிறார்கள் என ஊராட்சி ஒன்றிய ஆணையர் கூறினார். இதன் மூலம் விவசாயத் தொழிலாளர்களின் உரிமைகள் மறுக்கப்படுவதுடன் வேலைப்பளு கூடுதலாகும் என விவசாயத் தொழிலாளர்கள் சங்க மாவட்டத் தலைவர் கூறினார்.

2005ஆம் ஆண்டு முதல் 100 நாள்வேலைத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. ஒரு குடும்பத்திற்கு ஒரு ஆண்டில் 100 நாட்களுக்கு வேலைவாய்ப்பு உறுதிசெய்யும் விதமாகவும், கிராமங்களில் நீர் நிலைகள் மற்றும் பொதுச் சொத்துக்களை பராமரிக்கவும், உருவாக்கவும் திட்டத்தில் முன்னுரிமை அளிக்கப்படும். இத்திட்டத்தின் கீழ்மத்திய அரசு நிர்ணயிக்கும் அளவிற்கு வேலைஎன்றும், நாளொன்றுக்கு ரூ. 119 கூலிவழங்கவும் உத்தரவிடப்பட்டுள்ளது. ஆனால், வேலூர் மாவட்டத்தில் எந்த ஊராட்சியிலும் அரசு நிர்ணயிக்கும் வேலையும், முழுமையான ரூ.119 கூலியும் விவசாயத் தொழிலாளர்களக்குக் கிடைப்பதில்லை.

அதிக அளவில் பெண்கள் வேலைசெய்யும் இத்திட்டத்தில் ஊராட்சி நிர்வாகம் பல்வேறு முறைகேடுகளை செய்து வருவதாக புகார் எழுந்துள்ளது. குறிப்பாக அரக்கோணம் ஒன்றியம் கீழாந்தூர் ஊராட்சியில் 100 நாள் வேலைத் திட்டத்தின் கீழ் 251 பேர் வேலை செய்வதாக கணக்கு காட்டப்பட்டுள்ளது. ஆனால்அங்கு 201 பேர் மட்டுமே வேலையில்இருந்தும், வேலைக்கான அடையாள அட்டை (ஜாப்கார்டு) சரி பார்க்கும் போது தாய்க்கு பதிலாக 2 வயது குழந்தை பெயரில் அட்டை வழங்கியுள்ளது தெரியவந்தது.

மேலும், ஊராட்சி நிர்வாகத்திற்கு வேண்டியவர்கள் பெயர்கள் பட்டியலில் இருந்தது. ஆனால் அவர்கள் வருகை பதிவேட்டில் கையெழுத்து போட்டுவிட்டு வீட்டுக்கு சென்றது தெரியவந்தது. இம்மாதிரி பல்வேறு முறைகேடுகளை கண்டறிந்த ஊராட்சி ஒன்றிய ஆணையர் ஞானசேகரன், கீழாந்தூரில் நடக்கும் 100 நாள் வேலையை தற்காலிகமாக நிறுத்த உத்தரவிட்டார்.

மாவட்டத்தில் உள்ள பல ஊராட்சிகளில் 100 நாள்வேலை திட்டத்தில் முறைகேடுகள் நடக்கிறது. அரசு அதிகாரிகள் துணையுடன்தான் முறைகேடுகள் நடப்பதால், ஊராட்சிச் செயலாளர், தலைவர், ஓவர்சீயர், இன்ஜினியர், ஆணையர் ஆகியோர் அரசக்குப் பதில் சொல்ல வேண்டிய கட்டாயம் உள்ளது. மேலும் அதிகாரிகள் மீது துறை ரீதியான நடவடிக்கை எடுக்கப்படும் என அரசு விதி கூறுகிறது.

**இதுபற்றி அரசு அதிகாரி கூறியதாவது**

18 வயது நிரம்பிய, உடல் தகுதியான தொழிலாளர்களைத் தான் இத்திட்டத்தில் சேர்க்க வேண்டும். ஆனால் 65 வயதான முதியவர்களையும் ஊராட்சித் தலைவர்கள் சேர்த்து விடுகின்றனர், என்னசெய்வது? என்கின்றார். இந்நிலையில் இத்திட்டத்தை கண்காணிக்க பணித்தலப் பொறுப்பாளர்கள் நியமிக்கப்பட உள்ளனர்.

அவர்கள், தொழிலாளர்கள் காலை 8 முதல் 9 மணிக்குள் வரவேண்டும், வேலைக்கு வருபவர்கள் கட்டாயம் மண்வெட்டி, கடப்பாறை எடுத்துவருதல் அவசியம், மேலும் மதிய உணவு உடன் கொண்டு வரவேண்டும், மாலை 4 மணி வரை வேலை செய்ய வேண்டும் எனஅந்த உத்தரவில் கூறப்பட்டுள்ளது. இந்த உத்தரவின் படி தொழிலாளர்களை வேலை வாங்குவது பணித்தலப் பொறுப்பாளர்களின் பொறுப்பு. உத்தரவு நகலை பயனாளிகளிடம் காண்பித்து அதற்கேற்ப வேலைவாங்க வேண்டும் என அந்த அதிகாரி கூறினார்.

**இந்தப் புதிய உத்தரவு பற்றி விவசாயத் தொழிலாளர்கள் சங்க வேலூர் மாவட்டத் தலைவர் டி.சந்திரன் கூறியதாவது :**

இடதுசாரிகளின் நீண்ட கோரிக்கை மற்றும் போராட்டத்தின் விளைவாக அமல்படுத்தப்பட்ட 100 நாள் வேலைத் திட்டத்தில், விவசாயத் தொழிலாளர்களுக்கு பணித்தலத்தில் அடிப்படை வசதிகளான குடிநீர், குழந்தைகள் காப்பகம், ஓய்வறை, முதல் உதவிபெட்டி, வேலைக்கு தேவையான மண்வெட்டி, கடப்பாறைவழங்குதல், 3கி.மீ. தூரத்திற்கு மேல் பணித்தலம் இருந்தால் பயணப்படி அல்லது வாகனங்களில் அழைத்துச் செல்லுதல் உள்பட பல்வேறு கோரிக்கைகளை நிறைவேற்றாமல் உள்ளது. ஆனால் பணித்தலப் பொறுப்பாளர்களை நியமிப்பதால் மேலும் தொழிலாளர்களுக்கு பணிச்சுமை அதிகரிக்கும் என்றார்.

**ஆதாரம்:** தீக்கதிர் 1.2.2012











ஊராட்சித் தலைவர்கள்ஊராட்சிஅரசாங்கம் குறித்த சட்டம், கொள்கைமாற்றம், நிதிநிலை அறிக்கைக்கான கோரிக்கை மனுவை அரசியல் கட்சிகளிடம் 23.03.12 அன்று அளிக்கிறார்கள்.


வெளியீடு

**மனித உரிமை மேம்பாடு மற்றும் ஆராய்ச்சி அமைப்பு (HRF)**

எண்.10, எல்.டி.ஜி. ரோடு, சின்னமலை, சைதாப்பேட்டை, சென்னை – 600 015. இந்தியா

தொ.பே.044–22353503, தொ.நகல். 22355905, மின் அஞ்சல் : humanrightsadvocacyandresearch@gmail.com

இணையதளம் : www.humanrightsadvocacyandresearchfoundation.org